VISIT…

நீ இப்பொழுது இறங்கும் ஆறு

சேரன் கவிதைகள் ஒரு நூறு

சேரன்

காலச்சுவடு
பதிப்பகம்

பொருளடக்கம்

தொடரும் இருப்பு / 15

ஒரு கிராமத்திற்கு மின்சாரம் வருகிறது / 16

மழைநாள் / 18

நிசி / 20

கடலோரம் மூன்று குறிப்புக்கள் / 22

காத்திருப்பு / 23

கடல் / 24

தோணிகள் வரும் ஒரு மாலை / 25

மயான காண்டம் / 26

இறந்த காலம் / 30

போய் வருதல் / 31

சமாந்தரம் கொள்ளாத உலகங்கள் / 32

மழைக்காலமும் கூலிப்பெண்களும் / 33

பிரிதல் / 34

பறந்து போகும் சிறகு / 35

இரு காலைகளும் ஒரு பின்னிரவும் / 37

கைதடி 1979 :
கோபுரக் கலசமும் பனைமர உச்சியும் / 39

வேர்களிலிருந்தும் பூக்கள் / 41

நதிமூலம் / 43

கோடைக்கால வாவிக்கரை / 45

நிலாவெளி / 46

ஆகாயத்திலிருந்து பூமிக்கு / 48

கானல் வரி / 50

திரிதல் / 52

காலங் காலமாக / 53

இனியும் ஒரு முகம் / 55
எதிர்கொள்ளல் / 56
நெய்தல் / 57
பூமியின் நிழல் / 59
நாள் / 60
சடங்கு / 61
ஒருநாள் இன்னொருநாள் / 62
பகல் பொழுதின் மரணம் / 64
தொலைந்துபோன நாட்கள் / 65
மரணமும் வாழ்வும் / 70
உனது நெருக்கத்தை இழந்த இன்றிரவு / 72
யுத்த காண்டம் / 73
எனது நிலம் / 77
இரண்டாவது சூரிய உதயம் / 79
துப்பாக்கி பற்றிய ஒரு கவிதை / 80
தனிமை விருப்பு / 82
நாங்கள் எதை இழந்தோம்? / 83
ராணுவ முகாமிலிருந்து கடிதங்கள் / 85
எல்லாவற்றையும் மறந்துவிடலாம் / 90
அவர்கள் அவனைச் சுட்டுக் கொன்றபோது / 92
விமலதாசன் அண்ணா / 94
சொல்வதற்கு ஒன்றுமில்லை / 96
என் வெளி / 97
காதலின் அர்த்தத்தை
நான் புரிந்து கொண்டபோது / 98
யமன் / 100
கண் விழித்திருப்போம் / 102
ஒரு சிங்களத் தோழிக்கு எழுதியது / 103
எல்லைப்புறத்துக் கிராமம் / 106
காற்றில் எழுதுதல் / 109
கோடை வயல் / 111
அம்மா அழாதே / 112
உயிர்ப்பு / 113
சிறைகளின் பாடல் / 116
எழுதப்படாமலே போயிருக்க வேண்டிய
கவிதை / 117
21 மே 1986 / 120
எரிந்துகொண்டிருக்கும் நேரம் / 122
இறுதி வார்த்தை / 125
29 ஜூலை 198 / 127
காதல் வரி / 131
கண்களைப் பற்றி எழுதுதல் / 134
வெளியார் / 137
காத்தான்குடி / 140
சித்தார்த்தனுடைய இரவுகள் – 1 / 141
சித்தார்த்தனுடைய இரவுகள் – 2 / 143
சித்தார்த்தனுடைய இரவுகள் - 3 / 145
கேள்வி / 147
தொலைபுலத்துறவு - 1 / 150
தொலைபுலத்துறவு - 2 / 151
ராஜினி / 153
உயிர் பிடுங்கிகளின் காலம் / 154
எலும்புக்கூடுகளின் ஊர்வலம் / 158
புதைகுழிப் பாடல் / 162
நவீன துப்பாக்கி அரசன் / 164
சிம்மாசனமும் சவப்பெட்டியும் / 165

பிசாசுக் கவிதை / 166

அறிவுஜீவியாக வளரத் துடிக்கும்
ஒரு அப்பாவிப் பொது மகனின்
கேள்விகள் / 167

ஊரில் சிறையிருக்கும் நண்பருக்கு / 170

மன்னிக்க வேண்டும் / 171

உறவும் பிரிவும் / 173

நீரும் நிலமும் / 174

குழந்தைகள் / 177

தீ / 179

ஜே. யுடனான உறவு முறிந்து
மூன்று நிமிடங்களாகின்றன / 180

வீரர்கள் துயிலும் நிலம் / 182

கேள் / 185

நான் இறந்து போகிறபோது / 186

குருதி சுக்கிலம் செம்மது / 188

புலரிக் கலவியும் இரவில் சமருமாய்க் கழிந்த
ஒரு காலத்தின் பாடல் / 191

யுத்தம் பற்றிய ஒரு மிகச் சுருக்கமான அறிமுகம் – 195

கவிதை பற்றிய காதலர்களின்
உரையாடலில் ஒரு பகுதி / 196

கல்வெட்டு / 198

எல்லோரையும் போல் அந்த
நேரத்தில் நீ அழவில்லை / 199

ஊழி / 201

சே. யுடனான உறவு முறிந்தபோது / 202

பசியோடிருக்கும் மீனவன் / 204

எம்மைத் தெரிகிறதா ?
எங்கள் குரல் கேட்கிறதா ? / 205

இருபத்தைந்து ஆண்டுகளும் நூறு கவிதைகளும்

ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த பெருங்கற் பண்பாட்டுக் காலத்துடனும் கோலங்களுடனும் தமிழர் வாழ்வையும் வரலாற்றையும் தொல்லியலாளர் இணைப்பதுண்டு.

இருபது ஆண்டுகளுக்கு முன்பு நண்பர் இரகுபதியுடனும் அவருடைய தொல்லியல் ஆய்வுக் குழுவுடனும் கள ஆய்வுகளில் ஈடுபட்டிருந்தபோது ஒருநாள் யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டைப் பகுதியில் பெருங்கற் காலப் பண்பாட்டுக்கு உரிய கறுப்பு - சிவப்பு மட்பாண்டத் துண்டுகளை மிதிக்க நேர்ந்தது.

ஈழத் தமிழர்களின் இருப்பும் வரலாறும் சிக்கல்களுக்கு ஆளாகியிருந்த ஒரு காலகட்டத்தில்தான் இந்த முக்கியமான தொல்லியல் திருப்பம் ஏற்பட்டது. அதனுடைய பாதிப்பில் "ஒரு காலடி, ஆனால் ஓராயிரம் ஆண்டு எம் வேர் நீண்டுள்ளது" என 'எனது நிலம்' கவிதையில் எழுதினேன்.

இன்றைக்கு எனக்கென ஒரு மிதி நிலம்கூட இல்லாத ஒரு சூழலில் இந்தக் கவிதைத் தொகுதி வெளிவருகிறது. கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் நான் எழுதிய கவிதைகளில் நூறு கவிதைகள் இந்தத் தொகுப்பில் இடம் பெறுகின்றன. இடம் பெறாமல் போய்விட்ட ஒரு பத்து அல்லது பதினைந்து கவிதைகள் தொலைந்து போய்விட்டன. அவை பற்றிய ஞாபகங்களும் ஓரிரண்டு வரிகளும்தான் இப்போது என்னிடம் எஞ்சியுள்ளன. கூடவே எப்போதாவது அவற்றை மறுபடியும் எழுதிவிடலாம் என்ற ஒரு சிறு நம்பிக்கையும் என்னிடம் உள்ளது.

இந்தத் தொகுதியிலுள்ள கவிதைகள் எழுதப்பட்ட கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் என்னுடைய கவிதைகளோடும் வாழ்வோடும் பின்னிப் பிணைந்திருந்த ஏராளமான நெருங்கிய நண்பர்கள் ஒன்றில் கொல்லப்பட்டு விட்டார்கள் அல்லது காணாமல் போய்விட்டார்கள். எஞ்சியவர்களில் பலர் உலகம்

எங்கும் சிதறிப் போய் இருக்கிறார்கள். இவர்கள் அனைவருடைய உறுதுணையும் ஆதரவும் இல்லாமல் எனது வாழ்க்கையும் கவிதையும் சாத்தியப்பட்டிருக்காது. இந்நண்பர்கள் பலர் பற்றிய நினைவுகளும் பதிவுகளும் தொகுதியிலுள்ள கவிதைகளில் ஆங்காங்கே தூவப்பட்டுக் கிடக்கின்றன.

இந்தத் தொகுதியிலுள்ள கவிதைகளில் பெரும்பாலானவை ஏற்கனவே வெளிவந்த என்னுடைய கவிதைத் தொகுதிகளில் இடம் பெற்றவை. எனினும் அத்தொகுதிகள் எவையுமே இப்போது சுற்றில் இல்லை. இம்முன்னுரையில் அத்தொகுதிகள் வெளிவர காலாக இருந்த நண்பர்களை நினைவு கொண்டு நன்றி தெரிவிப்பதே என்னுடைய முதன்மையான நோக்கம் ஆகும்.

எனது முதலாவது கவிதைத் தொகுதியான இரண்டாவது சூரிய உதயம் வயல் வெளியீடாக வரக் காரணமானவர் நா. சபேசன். அதனுடைய இரண்டாவது பதிப்பு தமிழகத்தில் வெளிவர காரணமாயிருந்தவர் எஸ். வி. ராஜதுரை. இரண்டாவது தொகுதியான யமன் வெளிவர முக்கியமான பங்காற்றிய யோக சுந்தரமும், தருமலிங்கமும் "காணாமல்" போய்ப் பத்து வருடங்களாகின்றன. யமன் தொகுதியின் இரண்டாவது பதிப்பைத் தமிழகத்தில் வெளிக் கொணர்ந்தவர் வே. மு. பொதியவெற்பன். மூன்றாவது தொகுதியான கானல்வரிக்குப் பொன்னி வெளியீட்டின் வைகறை பொறுப்பாக இருந்தார். நான்காவது தொகுதியான எலும்புக்கூடுகளின் ஊர்வலத்தின் இரண்டு பதிப்புகளுக்கும் கனடா, தேடல் பதிப்பகத்தினரே வெளியீட்டாளர்களாக இருந்தனர். ஐந்தாவது தொகுதி எரிந்து கொண்டிருக்கும் நேரம் சபாலிங்கத்தினால் ஆசியா வெளியீடாக பிரான்சில் இருந்து வெளியானது. சபாலிங்கம் கொலையுண்ட சேதி "தமிழ் கூறும் நல்லுலகம்" அறிந்த ஒன்றாகும். இந்த வெளியீடுகள் அனைத்துக்கும் பொறுப்பாகவும் துணையாகவும் இருந்தவர்களுக்கு என்னுடைய மனங்கனிந்த நன்றிகள்.

என்னுடைய கவிதைகள் தமிழகத்தில் கிடைக்கவும், பல கவிதைகளைப் பேணி வைத்தும் வேறு பல வழிகளிலும் உதவி வருகிற பத்மநாப ஐயரையும் செல்வத்தையும் நான் நன்றியுடன் இங்கு நினைவு கொள்கிறேன்.

இந்தத் தொகுதியின் செப்பமான வெளியீட்டுக்குப் பொறுப்பான காலச்சுவடு பதிப்பகத்திற்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

சோழன், விக்கி, ஔவை, சரிநிகர் நண்பர்கள், நாகார்ஜுனன் ஆகியோருக்கு நான் நன்றிகள் தெரிவிக்கத் தேவையில்லை என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிடத் தோன்றுகிறது. இந்தத் தொகுதியிலுள்ள கவிதைகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் சொல்பவற்றுக்கு அப்பால், இந்தக் கணம், வேறென்ன சொல்ல இருக்கிறது?

சேரன்

நீ இப்பொழுது இறங்கும் ஆறு

சேரன் கவிதைகள் ஒரு நூறு

தொடரும் இருப்பு

கரை முழுதும் ஈரமணல்
ஓயாது இரைந்தபடி
தொடர்ந்தும் அலைக்கரங்கள்
நிலம் நனைக்கும்
கால் பதிய
நீள நடக்கின்றேன்
நடையில் நழுவி விழும்
ஒவ்வோரடியும்
தடங்கள் பதிக்கும் ஒரு
வாழ்க்கை நிகழ்வாம்
காலமெனும் வெப்பக்
கதிர் வீசிச் சூடடிக்க
எல்லாத் தடமும் உதிரும்;
உலர்ந்து விடும்
தனித்தபடி
எஞ்சுகிற ஒன்றோ
மீண்டும் தடங்கள் பதிக்கும்
ஒரு வாழ்வில்
இனித் தொடரும்.
அலைக் கரங்கள் மணலுக்கு
ஆகாய வெளியிருந்த
செம்பரிதி கடலுக்கு
ஆழப் பதிந்தபடி
என் கவிதைச் சுவடுகளோ
உயிர் வாழும் துடிப்பிற்கு.

ஒரு கிராமத்திற்கு மின்சாரம் வருகிறது

இலையோடும்
அலை ஓடும்
வயல் வெளியை வகிடெடுத்த
புதுத் தெருவின் எதிர்முகங்கள்
இரு புறத்தும் தலையுயர்த்தி
இருட் கறுப்பாய் எழுந்து நிற்கும்
கருந் தூண்கள்

வயல் வரம்பின் மேலேயும்
புல் சரிந்த
வாய்க்காலின் இருபுறமும்
செயல் கெட்டுப் பலகாலம்
புரண்டிருந்த கருந்தூண்கள்
திடீரென்று உயிர்கொள்ளும்

கோழி குரல்கொடுத்து
அதிகாலை விழிப்பெடுக்கும்
என்னூரின் தலைமேலே
விஞ்ஞான விரிப்புக்கள்
கூரையின்றிச் சடசடத்த வாகனங்கள்
அவை காவும்

ஏணிகளும் தண்டுகளும்
ஒரு நாளில் தெருவிறங்கிக்
கம்பிகளும் கோப்பைகளும்
கருந்தூணை அரவணைக்கும்

தெருமேலே
வயல்மேலே
இன்னும் தொலைவு கொண்டு
திருப்பங்கள் நிறைந்திருக்கும்
கல்லொழுங்கை மேலேயும்
பளபளத்து நீள்கின்ற வெண்தகடாய்க்
கம்பிகளின் முடிவற்ற நீட்சி.

பெருந்தெருவின் ஓரத்தில்
சடைத்திருந்த குடைவாகை.

ஆலமரம், மலைவேம்பு,
நிசியில் பயங்காட்டத்
தலை விரித்த பனைமரங்கள்
ஒவ்வொன்றாய்
இலையிழந்து
கிளையிழந்து
உடலிழந்து
உயிரிழக்கும்

குடைவாகை நிழல் விரித்த
பெருந் தெருவின் தார் விரிப்பில்
தடையின்றி வெயில் எரியும்

கரிக்குருவி பொந்தெடுக்கப்
பனங்காகம் கூச்சலிட
இருப்பாக அமைந்தபடி
தொலைவிருந்தும் பார்வை கொள்ளும்
பெரு மரங்கள்
வெறுந் தூண்கள் சிலவற்றின்
தலையெடுப்பில் நிலம் தழுவும்

மதில்கள், குரோட்டன்
எனப் படர்ந்திருக்கும் வீடுகளில்
புதுமாற்றம் திடீரென்று.
தலைக்குமேல் விளக்கேந்திக்
கரகமிடும் சில வீடு
நீலத்தில் குளுகுளுப்பாய்க்
கோலமிடும் இன்னும் சில

எனினும், பல வீட்டில்
திரிதூண்டி, விளக்கெடுத்துத்
தீப்பெட்டி உரசலினால்
மெதுமெதுவாய்ச் சிறு வெளிச்சம்
சிணுங்கிச் சிணுங்கி அழும்.

இனிமேல் எனதூரில்
இருளில் முகம் காட்டும்
தெருவிளக்கு;
நீண்டதென
விரைகின்ற கம்பிகள் மேல்
குருவிகளின் குடியிருப்பு.

மழைநாள்

உன் நினைவில் வருகிறதா
அந்த மழைநாள்?

மஞ்சள் வெயிலில்தான் துவங்கி
மழையாகப் போய் முடிந்தது மாலை.
சைக்கிளிலே,
கொஞ்சம் விலகித்தான்
நீ வந்தாய் பக்கத்தில்
எனினும் நிழலிரண்டும் என்னவோ
சேர்ந்தபடிதான் அசைய,
வானம் இருண்டு,
வரம்புகளில்லாத ஒரு மழையில்
நிலத்தில் புழுதி செத்துப் போயிற்று.

தெருவோரச் சிறு குடிலுள்
மழைக்கு ஒதுங்கி முகம் துடைத்தபோது
கைகளும் ஈரம்

உன் நினைவில் வருகிறதா
அந்த மழை நாள்?

நீர் வழிந்து, மை ஊறி
நனைந்துபோன பாடக் குறிப்புகள்
மறுபடியும் எழுதப்படாமலே போயிற்று.

சோர்ந்துபோன மரங்கள்மீதும்
பூவரசமிலைகள் துடிதுடிக்கவும்,
பனை ஓலைகளூடாக வருகிற காற்று
அன்று கடலோடு உறைந்து போகவும்
மழை.

அருகில் நீ.
குடிலுக்குள் நசநசத்த ஈரம்
திரண்டிருந்த விசும்பு மழைக்கறுப்பில்
மின்னல்
கோடாய் எழுந்து அலைந்து அழிகிறது.

கொடிமின்னல் என்று நீ சொல்ல
வான்வெளியை நான் பார்க்கிறேன்.

கணத்துள் அது முடிய
அடுத்ததற்காய்க் காத்திருப்பாய்.
அப்போது இடி முழங்கும்.

மழைச்சாரல் தெறித்த முகத்தில்
நனைந்தபடி நீண்ட மயிரொன்று
கழுத்துவரை, ஒரு
வழி தப்பிய ஆடு.

மழை குறையத் தூற்றல் மனங்கொள்ள
மீண்டும் பயணம்
தெருவோரம்,
மனுஷப் பிசாசுகளின்
விழி விதைத்த பார்வை
அம்புகளாய்க் குத்தும்,
ஈட்டிகளாய்த் துருவும்தான்
எனினும்,
இணை கொண்ட போது
தெருவும் சிதறுகிறது.

மீண்டும் சிறு தூற்றல்
மழை முகிலின் இருள் கவிய
நானும் நீயும் சமாந்தரமாய் . . .

உன் நினைவில் வருகிறதா
அந்த மழைநாள்?

நிசி

இரவு
தனியாக இருந்தும்
இடையிடையே
சருகுகளும் மேல்மண் துகளும்
சுழல் கொண்டு
விறாந்தை முழுதும் நிறைகின்ற
பின்னிரவு நேரம்;
நிலவு தலைநீட்டிக் கொண்டிருக்கும்
வேளை; வெளியில்
எழுந்து நடந்து வந்தால்

முன் நின்று ஆடும்
தனியே உடல் கலைந்து
முற்றத்தில் வேம்பு
ஒருக்களித்துத் தலையாட்டும்
ஒற்றைப் பனைகள்
தனித் தனியாய் ஒவ்வொன்றும்

இரவில் படிப்பெனக்கு
நீள்கின்ற காலங்கள்
எப்போதும் இப்படியே

வேம்பில் இருந்தோ
முள் நிறைந்த கல்லணிஞ்சில்
கொம்பில் இருந்தோ
துயில்கலைந்து தொலைவெங்கும்
நீளக் குரல் கொடுத்துப் போகின்ற
ராக்குயில்கள் போகப்
பிறகும் தனியாக இவ்விரவு
நீள்கையிலே
எப்போதெனினும் உயரத்தில்
கண்சிமிட்டி யாரை அழைத்தோ

ஒற்றையாய்க்
கிழக்கிருந்து போகும் விமானமொன்று

சிவப்பாய் அதன் கொள்ளிக்
கண்கள் தொலைவிருந்தும்
எனை உறுத்துப்
பார்த்தபடி

உள்ளறையில்
மேசை முழுதும் விரிந்திருக்கும்
Zoology Notes கும்பலுக்குள்
இருந்தோர் குரல்
எனக்குக்
கேட்டதென இருக்கும்.

கடலோரம் மூன்று குறிப்புக்கள்

1

அலைகளாய் உயரே உயரே
எழுந்து
நுரைகளாய் மரித்தது
நீர்.

2

கரையேறிப் போகிறாள்
இன்னும் நான்
அலைகளுக்குள்.

3

சூரியனை விழுங்கியது கடல்
பிளந்து சிவப்பாய்க் குருதி
தெறித்தது முகில்களில்

கரையில்
உலர்கிறது பகல்
மெதுவாய்
உதிர்கிறது இரவு
அலைகளோ சோகமாய்
இன்னும் இரையும்.

காத்திருப்பு

தொலைவில் விழி எறிந்து
காத்திருந்தேன்
பூக்காமல்
பூவரச மரம் ஒன்று
அருகில் சிலுசிலுத்தும்,

நுதல் சுருங்கிக்
கோடு விழப் புருவம் சுழிப்பெடுக்கும்
வெய்யில்

நடுப்பகலில்
மரம்கூட நிழல் தேடும்
நிழல்கூடச் சிறிதாகும்
இப்போதில்

வழி தொடரும் விழி
விழி தொடரும்
எதிர்பார்ப்பு
வெயில் கரைக்கும் காலத்தை
கணங்கள் கணங்கள் என

அர்த்தமற்ற காத்திருப்போ
என்பதுவாய் நினைவசைந்தும்
அடிமனதில் விளக்கெரியத்
தவமாகிப் போகாது
நீள்கிறதென்
காத்திருப்பு.

கடல்

அலை எழுப்பி நுரை தள்ளும்
கரையில்
நிலம் அணைக்கக் கரம் நீட்டும்
திரைகள்

கண் தொட்ட தொலைவிருந்து
மணல் புரளும் தரைவரையும்
இளநீளத் துகில்,
அசைந்து கலையும்

சிலவேளை,
சலனமற்று
வான் நோக்கி, நிலம் நோக்கிப்
பெருவெளியாய் விரிந்தபடி

இருள் தழுவும் மாலைகளில்
தலையுயர்த்திச் சாய்ந்தாடும்
பனைமரத்து இலை போல
அலை உயரும்
இருள் தழுவ,
இருள் தழுவ
அலை உயரும்

இன்னும், சிலவேளை
ஒளிக்கதிர்கள் தெறித்தபடி
படகுகளின் துடுப்பசைவில்
நிலம் நோக்கிச் சலசலக்கும்

அலை தழுவும் கரையிருக்கும்
எனக்குள்ளும் விரிகிறது,

கடல்.

தோணிகள் வரும் ஒரு மாலை

பொன்மணல் சரியும்
காலடிப் புதையலில்
நீள நீளமாய்த்
தாழைகள் விரியும்.
தென்னையின் கீற்று
நெளியும்
வானம்,
கீழே தெறிக்கக்
கடல் நிறம் மறைந்து
தூரம் தூரமாய்
நீலம் வெளிறும்

வெண்ணிறப் பாய்கள்
தொலைவிருந்தசைந்து
முன் வரும்
மேகம் கவிந்து தழுவும்

இன்னும் இரவின் திரைகள் இறங்கா
மாலையில்,
வெயில் மெலிந்து மெலிந்து
அடங்கி மறைகையில்

கரைவரும் தோணிகள்
இரையும்
கடலில்
இன்னும் மெதுவாய்ப்
பாய்கள் அசையும்.

விடியல் எழுந்து
விரியும் வரைக்கும்
கரையில் படகும்
பிறையின் நிலவும்.

மயான காண்டம்

அன்றைய இரவு
அடர்ந்ததான கறுப்புப் போர்வையுள்
பூமி இருந்ததாய் எனக்குத் தெரிந்தது
அதுவுமல்லாமல்,
வெளிச்சம் இருந்த ஞாபகமும் இன்றி
ஓலையின் அசைவு, ஒரு குழந்தையின் அழுகை,
தொலைவிருந்து எழுந்து வருகிற ரயிலின் நீண்டகுரல்,
ஒன்றுமில்லாது, ஒரு எழுதப்படாத சோகம். . .

பாருங்கள்,
ஒரு கதை போல சனங்கள்
எனக்கு அதைச் சொல்ல முன்பு
அன்றைய இரவு நான் உணர்ந்த சோகம்
அதிசயமில்லையா?

முகமும், விழிகளும் இல்லாத வெறும் மனிதர்களுக்கு
அவனது மரணம் ஓர் செய்தி போல
நீளவும் தூக்கம் வரும்வரை
கதைக்கிற செய்தி

இன்றைக்கு இரவு அன்று போலல்ல
நிலவு தெறித்த இலைகள் சுவரில் மிதக்கின்றன
விளக்கில்லாத தெருவில் விட்டில்களுமில்லை
நான் இதை எழுதத் தொடங்கும்போது
முகமற்றவர்கள் தூங்கப் போய்விட்டார்கள்

அன்றிரா,
நான் போனபோது, வைத்தியசாலையில்
'கேற்'றின் வெளிப்புறம் குனிந்த தலையுடன்
நின்றனர் சிலர்.

மிக மெதுவாக உள்ளே சென்று
வைத்தியசாலையின் நீள நடந்து
மாடிப்படிகளை நுனிக்கால் கடக்க

18ஆம் வார்ட்;
விறாந்தையில்கூட ஓரிரு கட்டில்கள்

விளக்கு வெளிச்சம், வெள்ளைச் சீருடை
அங்கேதான் உன்னை வளர்த்தியிருந்தனர்

வெண்முகில் பரப்பாய் உயரே இருந்து
கட்டிலின் விளிம்பு வரையும் தொங்கிய
வெண்ணிறத் துகிலை நீக்கி,
உடலைக் காட்டினாள் ஒருத்தி, மற்றவள்
ஒருபுறம் சரிந்து கிடந்த முகத்தை
ஓரக் கைகளால் அசைத்து நிமிர்த்தவும்
ஒரு கணம்,
எனது குருதி நாடிகள் உறைந்து போயின
கால்களின் கீழே
பூமி பிளந்து சரிவதான உணர்வு எழுந்தது

என்ன விதமாய் இப்படி நிகழ்ந்தது?

உன் நிமிர்ந்த நடையும், நறுக்கிய மீசையும்
சுருண்டு கிடந்த குழல்களும்
எனது நினைவில் இருந்தன;
வடலிகள் விரியும் சுடலையின் பக்கமும்
கிழக்கே, பனைவெளிப் புறத்திலும்,
அப்பால் உயனை வெளியிலும்
உனது ஆடுகள் திரிய, அவற்றின் பின்
நீ சீட்டி ஒலியுடன் தொடர்தலும்
எனது நெஞ்சில் உள்ளது

செம்மண் நிலத்தின் மார்பு பிளந்து
வேர்விடும் கிளுவையைச் சிவப்புமுள் முருக்கைத்
தோண்டவே உயரும் அலவாங்கின் நுனி
எவ்விதம் உனது நெஞ்சுள் இறங்கிற்று?

முன்னைய நாளின் நினைவுகள்
எனது நெஞ்சில் இருந்தன

பொன்வண்டுகள் மினுங்கும் என்று
இலந்தை மரங்களை மேய்ந்து திரிந்ததும்,
மணிப்புறா பிடிக்க வைத்த கண்ணியில்
அடுத்த வீட்டுக் கோழிகள் நெரிந்ததும்
உனக்கும் தெரியும்.
மீண்டும் மீண்டும் பிள்ளையார் கோயிலின்
தீர்த்தக் கரையில் குந்தி இருந்ததும்
பயறு கொய்ததும்,

பாய் விரித்தது பசும்புல் என்று
படுத்துக் கிடந்ததும்,
அடுத்த வீட்டுச்
சந்திரன் 'அலி' எனச் சொன்னதில் அவனை
இழுத்து வந்து அப்பால் விரித்த
சணல் மரப்புதர்களுள் அவனைப் புரட்டி
இடுப்பில் இருந்து துணியை உருவித்
திகைப்புக் கொண்டதும், திரும்பிப் பறந்ததும்

இவற்றை மறத்தல் இயலுமா எனக்கு?
மேற்கே போனாய் நீ.
நான் இன்னும் கிழக்கே நடந்தேன்.
நண்ப, இன்று
இப்படித்தான் உனைக் காண நேர்கிறது;
இரத்தமும் சதையும்
நிணமும் எலும்பும்

அன்று,
வானை நோக்கி எலும்புகள் நீட்டிச்
செத்துப்போன ராட்சத மரமாய்
நெருப்பில் கருகி நின்றது வீடு . . .

உனது வீட்டை இரவில் கொளுத்தினர்

சூரியன் பிளந்து சிதறும் குருதியாய்
கிடுகுகள் விலக்கி ஒளிரும் கதிர்களைத்
தெருவில் நின்று பார்க்க நேர்ந்தது

உனது நிலத்தை அவர்கள் பறித்தனர்
இன்று,
உன்னைக் கொன்றனர்.
உன்னை அவர்கள் கொன்றனர்

இன்றோ,
பழைய கதையை மீண்டும் பார்க்கிறேன்;
ஆவரசஞ் செடி, அதன்புறம் கள்ளி
ஆட்களே இன்றிச்
சூரியன் மட்டும் தனித்துப்போன இவ்வெளியில்
இன்றும்,
ஆள்காட்டிகளே கூக்குரல் எழுப்ப

உன்னை எரித்துத் திரும்பினர்.
பிறகு நாங்களும்

நெருஞ்சி மலர்கள் மஞ்சளாய் நிமிர்கிற மண்ணில்
ஒருபிடிகூட உனக்குச் சொந்தம் இல்லை.
உனது அப்பன்,
பனையில் இருந்து தவறி வீழ்ந்ததில்
ஒரு கணப்பொழுதில் வார்த்தைகள் இழந்து
ரத்தமாய் உறைந்தவன்.
அவனது அப்பன்,
செத்துப் போனதும்
'காய்க்கும் நன்றாய்' என்பதனாலே
மாதுளம் பாத்தியுள் ஆழப் புதைந்தவன்.
இன்று, ஒன்றுமேயில்லை
உன்னையும் வெட்டினர்
ஆயிரம் விரல்கள் உன்னை நோக்கித்
துவக்கு முனைகளாய் நீண்ட போதும்
கோடையில் வெடிக்கிற யாழ்ப்பாணத்தின்
பாலைமண்ணில் உறுதியாய் நிமிர்ந்தாய்

உன்னைக் கொன்றனர்
உன்னை அவர்கள் கொன்றனர்

எழுதப்படாத சரித்திரம்,
துயர் சூழ்ந்து,
ரத்தம் சிந்திய நிலங்களின்மீது
நெல் விளைகிறது; சணல் பூக்கிறது
மழை பெய்கிறது

நீ துயில்க
அந்நியர்கள் வந்துவிட்டார்கள் என்பதையாவது
நான்,
அவர்களுக்கு நினைவூட்ட வேண்டும்.

இறந்த காலம்

யாருமற்ற தெருவில்
மழையில்,
ஒரு வாகை மரத்தடியில்
திடீரென

உன்னைக் காண்பேன் என
நம்புதல் இயலாது;
ஆயினும் நடந்தது.

நெடுநாளின் பின்
வண்ணத்துப் பூச்சியாய்த்
துடிக்கிற உனது இமைகளை,
புத்தகக் கட்டையும், குடையையும்
இறுகப் பற்றியிருந்தும்
நடுங்கும் விரல்களைப் பார்க்கிறேன்.
அதிர்ந்து போனாய்

முகம்,
திருப்பவும் முடியாது
மழை;
விட்டு
விலகவும் இயலாது
மழை.

‘வெயில் வா; மழை போ’
என்று மனதில்
செபிக்கிறாய் போல

என் சின்னப் பெண்ணே

எமது,
அன்றைய சூரியன்
அன்றே மறைந்து
போயிற்று.

போய் வருதல்

அண்ணாந்து வான் நோக்கும்
தண்டவாளங்களோ
வெறுமையாய்ப் பிரியும்
அதிர்வுற்று
ரயில் செல்லும் போதுகளில்
சிலிர்த்தாலும்,
பழையபடி, வெறுமை கொண்டு
வெயில் காயும்.

ஓரத்தே
தனியாகக் கைகாட்டி மரம் நிற்கும்
காற்றில் அதனருகே
கண்சிமிட்டும் பூவிரித்துச்
சீமைக் கிளுவைகளின் சிலுசிலுப்பு

போகையிலே இப்படித்தான்.
வீடு திரும்புகையில்
வயல் வெளிக்குள்,
நெல் விரித்த பச்சைப் படுகைக்குள்
குளித்துத் தலை உலர்த்தும்
பெண்போல,
பனை ஒன்று ஒற்றையாய் ஓலைகளை வீசும்

ரயிலுக்காய்,
ஒதுங்கி நின்று
கைதூக்கிக் கூச்சலிடும் சின்னப்
பயல்களது நிர்வாணம்
கணப் பொழுது விழித்திரையில்

மீண்டும் வயல் வெளிகள்
இடையிடையே ஓர்தரிப்பு
துயர் கொண்டு குரல் நீட்டி
வழி தொடரும் புகைவண்டி
நிறுத்தத்தில்,
நான் இறங்கி நடத்தல்
தொடங்குகையில்
செம்மை பரவிவரும் கீழ்வானம்,
வாகைமர இலைகள் துவளத் துவங்கும்.

பனையோலைச் சரசரப்பும்
தனித்தபடி என் நடப்பும்.

சமாந்தரம் கொள்ளாத உலகங்கள்

இரண்டு பெண்கள்,
இரண்டு ஆடுகள்.

அறுவடை முடித்த வயல்வெளி
கடந்து,
கிழக்கே நடந்தனர்.
கிழக்கிலும் வயல்வெளி
நீளம் நீளமாய் வரம்பு தெரிந்தது.
நீலம் நீலமாய் வானம் விரிந்தது.

மஞ்சள் மலர்கள் பூத்து நிறைந்தன;
சணல் மரப் புதர்களுள்
மைனாக் குருவிகள்,
மெல்ல எழுந்து வெளியே பறந்தன.

இரண்டு பெண்கள்
ஒருத்தி சிறியவள்
மற்றவள் உடலை இளமை மெதுவாய்ப்
போர்த்தி இருந்தது
முன்னும் பின்னுமாய்
இரண்டு ஆடுகள் நடந்து சென்றன

இடையில் நின்று
அறுகம் புற்களில் முதுகைத் தேய்த்து
மீண்டும் நடந்தன

அடிவான் சரிவில் நீண்டதான
சமாந்தர ரேகைகள் விழுத்தியபடி
ஒரு விமானம் எழுந்தது.
எழவும்,
வயல்வெளி இருந்த விழிகள் நான்கும்
விண்வெளிப் பரப்பில்
சில கணம் தரிக்க
அமைதி தழுவி இருந்த வெளிகளில்
மெல்லிய அதிர்வு

இன்னும் விரைவாய் விமானம் உயரும்
இன்னும் சமாந்தர ரேகைள் வரையும்
மாலைக் காற்றுக் கூந்தலை வருட
வரம்பு நீளத் தம் வழி தொடரும்

இரண்டு பெண்கள்
இரண்டு ஆடுகள்.

மழைக்காலமும் கூலிப்பெண்களும்

வாகைமரம் பூச்சூடும்
வயல் வரம்பை நெல் மறைக்கும்
மஞ்சள் வெயில் தெரியாது
மழைமுகில்கள் கவிந்துவரும்
தலைமயிரை விரல் கொடுத்து
நீவிவிடும் குளிர்காற்றில்
வெண் கொக்கும், சிறகைகளும்
வான் முழுதும் இறகசைக்கும்
வெயிலுக்கு மேனிதந்து
வெங்காயம் கிண்டவரும்
என் அழகுக் கிராமத்துப்
பெண்களது கால்
இனிமேல்
வெள்ளத்துள் ஆழும்;
விரல்களுக்குச் சேறெடுக்கும்
எப்போதும்போல் இவர்கள்
நாற்று நடுகையிலே
எல்லை வரம்புகளில் நெருஞ்சி
மலர் விரியும்
மீண்டும் இவர்கள்
திரும்பி வருகையிலோ,
நெற்கதிர்கள் குலைதள்ளும்;
நீள் வரம்பு மறைந்துவிடும்
எனினும் இவர்களது
பூமி இருள்தின்னும்
பொழுது விடிந்தாலும்.

பிரிதல்

கொடி எங்கும் மல்லிகைப்பூ
குளமெங்கும் அல்லி மொட்டு
வேலி வரிச்சுகள் மேல்
முள் முருக்குப் பூத்திருக்கு
பார்த்தபடி நானிருக்க,
இப்படித்தான் விரியும்
வசந்தம் என்று சொன்னபடி
நீ போனாய்! அன்றைக்கு -
இன்றைக்கோ,
தந்திமரக்
கொப்பில் உடல் சிலுப்பி
இறகுதிர்க்கும் குருவி ஒன்று,
உயரே உலாப் போகும்
மஞ்சு,
குளக்கரையில்
நீளக் காலூன்றி ஒரு
தவமிருக்கு கொக்கு

பறந்து போகும் சிறகு

காற்றின் நரம்புகளில்
மின் விசிறிகள் சுழலும்
மெலிதாய்ப் படபடக்கும் காகிதங்கள்
உரத்ததென,
Lecturer இன் குரலோசை;
சிலவேளை நிலம் உராயும் செருப்புக்கள்
(தொடர்ந்தபடி . . . எப்போதெனினும்
இருமல்)
மற்றபடி
அமைதி தழுவி வரும் lecture room.

முன் வரிசைக் கதிரைகளில்
முகங்கள் நிரம்பி
எனைப் பின்னுக்கனுப்பிவிடும் போதுகளில்
எப்போதும் இப்படித்தான்.

மெதுவாய், இறகு கட்டி
மிதந்தபடி வெளியேறும் என் மனது -
எனினும் சமயங்களில்
மீண்டும் திரும்பி வரும்
மணி பார்த்துப் போக என -

தூரத்தில் ரயிலோசை துவங்கிவிட
இங்கிருந்து
level crossing மணி ஒலிக்காய்க் காத்திருக்கும்;
பின்னர் தடதடத்து ரயில் கடக்கப்

பெட்டிகளை எண்ணுதற்காய்ப்
போய்த் திரும்பும்;
பெரும்பாலும் தோல்வியுறும்
முன் கதிரைக் குழிவுள்
முதுகு சரிந்தபடி
உட்கார்ந்தெழுதும் ஒரு பெண்ணின்,
பிடரிக்குள்
கறுப்பாய்ச் சுருள் கொண்டு
நெளிந்திருக்கும் பூனைமயிர்க் கற்றைகளை
நிமிண்டிவிட
விரல் நுனிக்குப் பசி கொடுக்கும்.

இடையிடையே விழி நிமிர்த்தி
Black board இல் மேய்ந்தாலும்,
நாளைக்கு, முன்வரிசைக் கதிரைகளில்
போயமரும் எண்ணம் உதித்தெழவும்
மீண்டும் வெளிப் பறக்கும்.

Degree முடிந்த பின்பு,
உடலோ தனித்தபடி Interview போய்த்
திரும்பிப் போய்த் திரும்பிப் போய்த்
திரும்ப,
எப்போதும் போல
ஈர்ப்பு விசை எதுவுமற்று
வெளியில் திரியும் இது

தூவி இறகாக என் மனது.

இரு காலைகளும் ஒரு பின்னிரவும்

இன்றைக்கு, இப்படித்தான்
விடியல் :
இருள் முழுதும் பிரியாது,
ஒளி நிறைந்து விரியாத
ஒரு நேரம்
விழித்தெழுந்து வெளியில் வரக்
கிணற்றடியின் அரசமரக் கிளைகளிலே
குயில் கூவும்
'ஓ' வென்று நிலத்தின் கீழ்
ஆழத்துள் விரிந்திருந்த
கிணறு,
சலனமற்று உறங்கியது
என் மனம் போல.

இன்றைக்கு இப்படித்தான்
விடியல்

நாளைக்கும்,
இப்படித்தான் விடியும்
என்று நினையாதே
பாதி ராத்திரியும் மெதுவாகப்
போனபின்பு, 'கேற்'றடியில்
அடிக்குரலில் ஜீப் வண்டி உறுமும்,
சப்பாத்தொலிகள் தடதடக்கும்.
அதிர்ந்ததென
எம் வீட்டுக் கதவுகளோ
விரிந்து திறந்துகொள்ள,
அப்போதுதான்,
அடுத்தநாள் பரீட்சைக்கு
விரிவுரைக் குறிப்புகள்

விழுங்கிக் களைத்ததில்
விழிகள் மூடிய
அந்த இரவிலே

'அவர்கள்' கூப்பிடுவது
கேட்கும். காதில்
ஊளையிடும் காற்று.
'எங்கே அவன்?' என்று
கேட்பார்கள். கேட்கையிலே
பிழைபட்ட தமிழ், நெஞ்சில்
நெருட எழுந்து வரும்

வார்த்தையற்று,
அதிர்ந்துபோய்
'இல்லை' எனத் தலையாட்ட
இழுத்தெறிவார்கள் ஜீப்பினுள்
நிறுத்தாத எஞ்சின்
அப்போதும் இரைந்தபடி.

பிறகு?
பிறகென்ன?
எல்லாம் வழமைப்படி.

காலை வெறும் சூரியன்
வெய்யில் நிலத்தில்
எனக்கு மேல்
புல்

சிலவேளை வீடுவந்து
கதவு திறப்பதற்காய்க்
குரல் காட்டித் திறக்குமுன்பு
இருமிச் சளி உமிழ
முகந் திருப்ப
உள்ளிருந்தும்,
அம்மா இருமும் ஒலி கேட்கும்

கதவு திறப்பதற்காய்க்
காத்திருந்தேன்
வெளியுலகம்
இப்போதும் முன் போல
அடங்கி இருக்கிறது.

கைதடி 1979 :
கோபுரக் கலசமும் பனைமர உச்சியும்

நிர்வாணம் கொண்டு,
தமிழர்கள் அனைவரும்
தெருக்களில் திரிக!

மீண்டும் ஒருதரம்,
ஆதிமனிதனை நெஞ்சில் நினைத்திட
நிர்வாணம் கொண்டு
தமிழர்கள் அனைவரும்
தெருக்களில் திரிக!

கவனியுங்கள்.
நேற்றுமாலை என்ன நடந்தது?
கைதடிக் கிராமத் தெருக்கள் முழுவதும்
மனித விழுமியம், நாகரிகங்கள்
காற்றில் பறந்தன
வரம்பு நிறைய இலைகள் பரப்பிய
மிளகாய்ச் செடிகள் கொலையுண்டழிந்தன!
தமிழர்களது மான நரம்புகள்
மீண்டும் ஒருதரம் மின்னால் அதிர்ந்தும்,
பாதிப்பற்று வெறுமனே இருந்தன.

கவனியுங்கள்
பனைமர உச்சியும் கோபுரக் கலசமும்
உயரவே உள்ளன
அரசியல் பிழைப்பில் ஆழ்ந்துபோயிருக்கும்
அனைவரும் உணர்க
உங்கள் முதுகுநாண் கலங்கள்மீதும்
சாதிப் பிரிவினைப் பூஞ்சண வலைகள்

கங்கை கொண்டு,
கடாரம் வென்று
இமய உச்சியில் விற்கொடி பொறித்துத்

தலைநிமிர்வுற்ற தமிழர் ஆளுமை
குனிந்த தலையுடன், அம்மணமாகத்
தெருக்களில் திரிக

ஆலயக் கதவுகள்
எவருக்காவது மூடுமேயானால்,
கோபுரக் கலசங்கள்
சிதறி நொறுங்குக

மானுட ஆண்மையின்
நெற்றிக் கண்ணே
இமை திற! இமை திற!

கவனியுங்கள்
அனைவரும் ஒன்றாய்
பனைமர உச்சியும்
கோபுரக் கலசமும் உயரே உள்ளன.
உயரவே உள்ளன!

யாழ்ப்பாணத்தின் சராசரி இதயமே,
உனது உலகம் மிகவும் சிறியது.
கிடுகு வேலி;
வேலியில் கிளுவை;
எப்போதாவது வேலியின்மீது
அழகாய்ப் பூக்கும்
சிவப்பு முள் முருக்கு.

யாழ்ப்பாணத்துச் சராசரி இதயமே,
ஆயிரம் ஆயிரம் கோவில் கதவுகள்
உன்னை உள்ளே இழுத்து மூடின.

மன்மதன் உடல்களாய்
அவை எரியும்
அதுவரை,

நிர்வாணமாக,
உயர்த்திய கையுடன்
தெருவில் திரிக.
தமிழர்கள்!
இந்தத்
தமிழர்கள்!

வேர்களிலிருந்தும் பூக்கள்

தெருவில்
காற்று மட்டுமே வெப்பமாக
என்மேல் உரசிற்று.
இரண்டு கரையும்
உலர்ந்துபோன புற்களும், மண்ணும்
'நான் இறந்துபோனேன்'
என்பதாய்,
மெல்ல எனக்குச் சொன்னது
மழைக்காலம்.
உரத்துச் சிரித்தது பெருங்காற்று.
உன்,
சட்டைக் கிழியலினூடே திரிந்து
கிச்சுக்கிச்சு மூட்டியவண்ணம்
உனக்கு,
விழிகளில்தான் உயிர்ப்பில்லை
நீள ஒரு தடி மட்டும்
கைகளிலே உணர்கொம்பு.

இடமும் வலமும் தொட்டுத்
தொட்டு,
இவ்வெயிலூடாக நடந்து
நீ நகரம் செல்வதைத்
தினமும் பார்க்கிறேன்
மெதுவாய்க் கூட
உன் கைத்தடி படுகையில்
கத்தரிப்பூவாய்க் கரையில் மலர்ந்த
தொட்டாற் சுருங்கிகள்
மெல்லச் சிணுங்கலாம்.

அதனால் என்ன?

அவற்றின் முட்கள்,
உன் கால் விரல் நுனிகளைக் கிழிக்க
இன்னும் விழித்தே இருக்கும்

நீ இன்னும்
கரை ஒதுங்காதே.

உனது முதுகிலும் துயரச் சிலுவை.
உனது தலையிலும் முள்முடி.
இருப்பினும்
ஒவ்வொரு கணமும்
வாழ்க்கை உனக்குச் சாரம் மிக்கதாய்
தோன்றுதல் கூடுமோ?

நதிமூலம்

உன் வட்டத்துக்குள்
நான் வந்தாயிற்று,
எப்போதோ.

இன்று,
நீ விலகப் போகிறாய்
என்று தெரிந்தும்,
நான் நீயாக முடியாமலும்
நான், நானாகப் பிரிய இயலாமலும்
நடுவில்,
அந்தரங் கொண்டு

இப்போதும்கூட
கிழக்குப்புற மலை உச்சியில்
நீ
மேற்குப்புற உச்சியில்
நான்.
அர்த்தத்தோடு,
பார்த்துக்கொள்ளலாம்
பேசிக்கொள்ளலாம்
நெருங்கித் திரியலாம்

நீயும் கீழே இறங்காமல்
நானும் கீழே இறங்காமல்
(எவ்வளவு காலம் வரை?)

நடந்ததெல்லாம் கனவுகளாய்
நிறம் மாற,

உன் விலகலை ஏற்று
சுமையுடன் நான் இறங்கலாம்
நீயும்,
கிழக்கிலிருந்து தனியே
இறங்கி நடக்கலாம்,
பிறகு நெடுவழியும்
தனித்துத்தான் உன் பயணம்
என நான் அறிவேன்

ஆனால்
வாழ்க்கை, ஒரு காற்று மாதிரி
பூவையும் உதிர்க்கும்
இலையையும் உதிர்க்கும்
மரத்தையும் முறிக்கும்
எப்போதென்று தெரியாமல்.

உனக்கு மேலும் ஒரு பூ,
எனக்கு மேலும்தான்
நாங்கள் இணைந்தபோது,

இனி,
எதை, எதையெல்லாம்
இந்தக் காற்று
எங்கள்மீது,
உதிர்க்குமோ தெரியாது

அன்றைக்கு
சூரிய கிரகணம் நிகழ்ந்தவேளை,
அந்திநேரமும் மஞ்சள் வெயிலும்
திடீரென்று வந்தபோது
எனக்கு,
சூரியனைப் பார்க்க ஆசையாயிற்று
வேண்டாம் என்றாய்

அப்போது
காற்றே இல்லை!

இனி
நீள வழிப்பயணம்
நடப்போம் என்ன?

கோடைக்கால வாவிக்கரை

தோணிக்காரா
தொலைவு கொண்டு போகிறாய் நீ
இப்போதும்
நான்
இங்கே கரையில் இருந்தபடி.

பார்வையில்

பச்சை நீர்ச் சுழிப்பு
ஆற்றில்
உச்சி வெயில்
துடுப்பசைவில் தெறிக்கின்ற
ஈரச் சூரியன்.

பெருங்காற்றுக்குத்
தப்பி,
இன்னும் சில எட்டி மரங்கள்
காய்களுடன், கரையருகே
தென்னை மரங்களும்தான்
ஐதாக,
வெயில் காய்ந்தபடி
பாலத்தின் மேலும்
இன்னும்
ஓயா இரைச்சல்.

நீ போகிறாய் இன்னும்
தொலைவில்,
தோணிக்காரா,
நான்மட்டும் கரையில்
தனியாகக்
காதலுடன்.

நிலாவெளி

பச்சை அடம்பன்கொடி
பாய்விரித்த மணற்பரப்பில்
கத்தரிப்பூ, நீலத்தில்
எங்கும் மலர் விரியும்
கண் அளந்த நீலம்
இரவு ஒரு பகலாக
நிலவு உலவும் வானவெளி
நீளத்தில், ஆழத்தில் நீலப்பளிங்குகளாய்
நீர்ப்பரப்பும் நிலாவெளியும்.

அண்ணாந்து பார்த்தபடி
தாழை. அடுத்தடுத்துக்
கொம்புகளில் தாவுவதாய்
கூச்சல் எழுப்புவதாய்,
குந்தி இருந்து தலை கோதுவதாய்
அங்கங்கே குரங்குகளின் கூட்டம்

கடல் நீரை உள் வாங்கி
விரிந்த குடா ஓரம்
இறால் பிடிக்க உடல் வளைத்த பெண்கள்
அங்கங்கே உடல் நெளிவில்
உயிர் தெரியும்
நீர் நனைந்த
ஆடை நுனி உயர்த்தியதில்
பளிச்சிட்டு வெளித் தெரியும்
ஒளி தழுவா மினுமினுப்பு.

வெயில் தின்னும் கடல்
கரையில் கண நேரம் விழிமூட,
கால் தழுவி, மணல் ஏறித்
தாலாட்டுப் பாடுகின்ற
வெள்ளலைகள்,
உயர்ந்தபடி, தொடர்ந்தபடி,
வெள்ளலைகள்

எப்போதும் இந்தக்
கரையருகே கண்மூடும்
வேட்கை எழுகிறது.
மெல்லத் தலைநிமிர்த்த
உச்சிவெளி, வான் விரிப்பில்
தொலைவு கொண்டு செல்கின்ற
மழைக் கண்ணிப் பறவைகளின்
கூட்டம், திரள் திரளாய்
தெற்கிருந்து கிழக்காக.

ஆகாயத்திலிருந்து பூமிக்கு

ஆற்றங்கரையில்
காற்றை எதிர்த்துக் கைகளை வீசி
நீள நடத்தல்,
மிகவும் பெரிதென மீண்டும் ஒருமுறை
விழிகள் அளந்ததில்
விண்வெளி எங்கும்
நான் பார்க்கையில் பூக்கும்
வெள்ளி மல்லிகைகளைப் பார்த்தபடியே
கால்களை விரித்துக்
கண்களை மூடி
வெண்மணல்மீது படுத்துக் கிடத்தல்,
ஈச்சையும் கள்ளியும்
நெருங்கிக் கிடக்கும்
இலுப்பை உச்சியில்
தூக்கணங் குருவிக்
கூடுகள் அசையும் தனி வழி ஓரம்
நடந்து செல்கையில்
உரத்த குரலில் பாட்டுப் பாடுதல்,

அது ஒரு காலம்
கொஞ்ச நாட்களில்
எல்லாம் முடிந்தது!

பிரச்சினை நுனிகள் கழுத்தை வருடும்
தொல்லைகள்,
சோளகம் எழாத
கோடையாய் உறுத்தும்
சூழலின் இறுக்கம்,
ஒன்றுமே இல்லை
மனது முழுவதும் காற்றே வீசும்.
அது ஒரு காலம்! முடிந்தது.
இனிமேல்,
விரிவுரை நினைவுப் பாரம் அழுந்த
இடையில் முறியும் காலைத் தூக்கம்
இரவின் கனவில்

ஊசி குத்திய கால்கள் முறுக
தசைகளை இழுத்து உடலை நிமிர்த்தும்
மண்டலந் தவளை,

மஞ்சள் மலர்கள் கொடியென இறங்கும்
கொன்றை மரமும் குலவும் காதலும்

எல்லைகளற்று விரிகிற உலகில்
கொஞ்சநாள் இருந்தேன்
இன்று மறுபடி,
பழைய சதுரக் கோட்டினுள் வந்துள்ளேன்.
இது ஒரு காலம்.
காற்றே இலாமல் வெய்யில் எரித்தாலும்
நிழல்கள் விரிக்க
மரங்களா இல்லை?

கானல் வரி

மறுபடியும்
எல்லோரும் வந்தாயிற்று.
மாமா, சித்தப்பா,
மணியக்கா,
அண்ணாந்து சாய்ந்தபடி
அப்பா கதிரைக்குள்.

சுருட்டு புகை கிளப்பும்
மார்பு மயிர்க்காட்டில்
மேய்கிற விரல்கள்.

மறுபடியும்
காணி உறுதிகள்.
கூறைச் சேலையுடன்
உறங்கி, உறங்கி,
அதற்கும் தொற்றிய,
நப்தலீன் வாசனை.

சரசா! எனது அருமைச் சரசா!

நீ என்ன செய்வாய்?
அவர்களோ உள்ளே
உனது விலைக்குப் பேரம் பேசுவர்.

மகிழம்பூ சிந்தியிருக்கும்
தண்ணீர் ஊற்றவும்
பாலாய் நெளிகிற நிலவில்
இரவு.
குந்தியிருப்பாய் கிணற்றுக்கட்டில்
கண்களை மூடி, கற்களை எறிந்து.

குருட்டுச் சாத்திரம்
பார்த்தபடியே.

‘இம்முறையேனும். . .’

காத்திரு
உனக்காய் இவர்களனைவரும்
கொண்டு வருவர்
ஏழு குதிரைகள் பூட்டிய தேரில்
பொன்னிற இறகுகள்
தலையில் மினுங்கும்
‘தூய க்ஷத்திரியனை’

பார்த்திரு
உனது கூந்தல் வெளுத்த
பின்பும்கூட.

திரிதல்

எதிர் எதிராக அமர்ந்து கொள்கிறோம்
யன்னல்கள் எல்லாம் சிறகுகளாக
விரைகிறது ரயில்.
சிதறிப்
பறந்தன வண்ணத்துப் பூச்சிகள்
விட்டு விட்டுத்
தொடர்கிறது வயல்வெளி.

இன்னும்,
கடலும் அழகு; மலையும் அழகு
நதியும்கூட அழகுதான்
எல்லாம்
எங்கள் இருப்பில்
அர்த்தம் கொள்ளும்.

காலங் காலமாக

நீ
முன்பே சொல்லியிருக்கலாம்
உனது வீட்டின்பின்
இவ்வளவு நீலமான கடல் என்று.

'அல்போன்ஸோ!' என்று
கூப்பிட
மூக்குக் கண்ணாடியைச்
சரி செய்தபடி, நீ
வருகிறாய்
நாம் நடக்கிறோம்.

தென்னைகள் நிறைகிற கரை,
எப்போதும்
அணைத்துக் கொள்ள என்று
இருக்கிற கடல்
அமர்கிறோம்.

முழங்கால் அழுந்த
மார்புக் குவடு நெளிந்தபடி
எதிரே இருந்து கிடுகு பின்னுகிற
பெண் ஒருத்தி,
உலகத்தைக் காலடியில்
மிதிப்பதென,
சலனமற்று, நேராய்
ஒருகணப் பார்வை.

பிறகு
தொடர்ந்தும் பின்னுவாள்
பழைய கிடுகு வேலிகளை
மீளவும் புதுப்பிக்க,
எண்ணங் கொண்டாள் போல.

எப்போதும் சுற்றிவர
வேலிகள்தான்
‘அவர்கள்’
வெளியில் நின்று அடைப்பார்கள்.
சிறகு வெட்டிய பறவையாய்
நீயோ உள்ளிரு.
கிடுகுகளையும் பின்னிக் கொடு!
ஒரு நூறாண்டுகள் இவளைப்போல
எத்தனை பேர்கள், என்பதாய்
ஒருகணம் திரும்பிற்று கவனம்.
‘என்ன சொன்னாய்?’
என்று கேட்கிறேன்.

அல்போன்ஸோ மீண்டும்
சொல்லத் தொடங்குவான்
‘பரந்தனில் இருந்து . . .’

இனியும் ஒரு முகம்

இரவு
இலைகள் உதிரும் வேம்பின் கீழே
அமர்ந்திருக்கிறேன்

நின்று போய்விட்டது மின்சாரம்
வானம் இன்னும் வெளியாய்
இப்போதும்

காற்று
எனது தூரிகைகளையும்
வண்ணங்களையும் புரட்டி எறிகிற
வெறும் காற்று.

பகலும்
உச்சி வெயிலில்
தலையசைக்க மறந்துபோன
பனைகள் நிமிர்கிற
வெறும் பகல்

எல்லாவற்றுக்கும்
வாழ்வை மென்று தின்று விடுகிற
பசி.

நான் இருக்கிறேன்
தொலைவில்
சணல் மரங்கள் ஒலி எழுப்பும்
இரவெனினும்
குரல் வாங்கிக் குரல் கொடுக்கிற
குயில்கள்

அறுபடும் இரவு.

எதிர்கொள்ளல்

இணைந்து நடக்கிறோம்
மீளவும், மீளவும்

சமாந்தரமாய் விரிதல்
என ரயில்பாதை
திடீரென இணைந்துபோய்
வழிமாறித்
திசைமாறி
மீண்டும் விரிதல் கூடும்
எனினும்,
எப்போதும்
‘மிகவும் மெதுவாய் நட’
என உணர்த்தும்
அரை நிலவில் நடக்கையில்
முதன் முதலாய் நிலம் தொடுகிற
பறவையின் சிறகு போல்,
மிருதுவாய் என்னில்
படிந்த விரல்கள்.

பிறகும் நடத்தலில்
சூழவும்
ஆயிரம் கண் பூத்த வேலி
அம்புகள் எறியும்
கதைத்தலில்
காற்றையும் நம்ப இயலாது
காதுகள் மிதக்கும் என அஞ்சி
எல்லோரும்,
மனது கறுத்துக் குறுகிப்போன
மனிதர்கள்தான் போல.

எனினும்
மறுபடியும், மறுபடியும்
இணைந்தே நடக்கிறோம்
காலையில் சூரியன் எழுவது போல.

நெய்தல்

கடலின் புலவு காற்றில் பெயரும்
கரையில்,
மிகவும், மிகவும்
மீன்களுக்காகக் காத்திருந்து
தூவானமாய்,
நீர் உதிரக் கால் நனைய
அலை இரையும்
கடல். பரவைக் கடல்
இருந்து
வரும் போகும் விசைப்படகு
இனியும் வரும்.

காத்திருப்பேன் மீன்களுக்கு

பாம்புக் கழுத்து வளையக்
கடற்காகம்
களங்கண்டிக் கொம்பில்
சிறகு விரித்துலர்த்தும்.
ஆலா,
பிடிக்கிறது மீன் குஞ்சை.

இரவு முழுவதும் உரத்த காற்றெனினும்
படகுகள் வந்தவாறுள்ளன
மீன்கள் அவற்றுள்ளே
செட்டையடிக்கும். பிறகு
மணலிலும்
காற்றுக் குடித்துக் கறுப்பு மார்புகள்
விரிய
விலை சொல்கிற பெண்கள்
வாழையும், கெளிறும், ஒட்டியும்
வேண்டாம் போகட்டும்
இன்னும் சிறிது காத்திருக்கலாம்.

ஏழுமணி காலை
மெலிதாய் நிலத்துக்குச்
சாயம் பூசுகிறது மஞ்சள் வெயில்

‘ஃபிரான்சிஸ்கா’, ‘கடல் ராணி’
‘எலிஸபெத்’
இன்னும் படகுகள்
வந்தவாறுள்ளன
மீன்களைக் கொட்ட
உடம்பு வளைவதில்
நர்த்தனமிடுவது கழுத்தில் குரிசு.

நீளமாய், ஆவெனத்
திறந்த வாயினுள்
பற்கள் தெரிய
என்ன இது? இன்று
எல்லாமே வாளைமீன்?
‘முள்ளுக் குத்தும்
தின்ன ஏலா. . .’

தங்கச்சி சொன்னது
நினைவில் வருகிறது

போகட்டும்
இன்னும் கொஞ்சம் காத்திருக்கலாம்

அப்புறமாக,
அவர்கள் கூடை கூடையாய்க்
கொண்டு போனார்கள்
மீன்களை; எனினும்
நான் காத்துள்ளேன்
படகுகள் வருமென,

மீண்டும் அவர்கள் கடலுக்கு
மறுபடி நானும் வீட்டுக்குப்
போகலாம்
எனது மீன்கள் வருமெனில்.

இவற்றோடு,
இதனையும் சொல்லி
ஆகத்தான் வேண்டும்
முக்கியமாய்
‘எனக்கு,
மீன்கள் வேண்டத்
தெரியா தென்பதை.

பூமியின் நிழல்

நீண்ட நாட்களாய்
எனக்கொரு சந்தேகம்

இந்தப் பூமியின் நிழல்
ஒரு வட்டமா? இல்லை தட்டையா?
அல்லது முட்டை போல் தானோ?
எப்படியாயினும்
அது ஒழுங்காய் இருக்கச்
சாத்தியமில்லை
(என்றுதான் எனக்குத்
தோன்றிக் கொண்டிருக்கிறது
வெகுநாளாய்)

கடலின் அலைகளோ
உயரே எழுவன
தரையிலோ தம்முள்
பொருதும் மனிதர்கள்
மலைகளோ தொடர்ந்தும்
முளைத்து வளர்வன
அங்கு
முகில்கள் தங்கும்
காற்றோ மிக மிக,
மழைக்குப் பதிலியாய்
நெருப்பே உதிரும்

உருவமற்றுப் போக
எப்படி வரும்
இந்தப் பூமிக்கு
ஒரு நிழல்?

நாள்

மூங்கில்கள் நெரியும் கரை
மஞ்சளாய் நெளிகிற நதி
அக் கரையருகே நீ

எனது புரிதல் நிகழாதென்று
உனக்குத் தெரிந்தும்
உனது மொழியில்
உரத்துச் சொல்கிறாய்
எனக்கு,
எனது மொழியில்தான்
பேச இயலும்.
உனக்குக் கோபம் வருகிறது
நான் என்ன செய்ய?

மீண்டும் மீண்டும்
உனது மொழியில் கடிதம் எழுதுவாய்,
சிரமம் எடுத்துப்
புரிந்துகொள்வதற்கான
குறைந்தபட்ச நேசமும் அற்றுப் போயிற்று
இப்போதைக்கு நட்டம் எனக்குத்தான்
எனினும்,
நான் அவற்றை அடுப்பில்
போடுகிறேன்;
கிழித்தே எறிவேன்!

இனி
அவர்கள், எனது மக்களும்
அதைத்தான் செய்வார்கள்.

காற்று வீசுகையில்
மூங்கில்கள் நெரியும் கரையில்
நெருப்புப் பற்றும்
பிறகு,
உனது வீட்டிற்கும் பரவும்.

சடங்கு

பிறகு
அனைவரும் அமர்ந்தனர்

நாற்சார் வீடு
நடுவில் நீளமாய்,
மேசை போட்டுத், துணிவிரித்துக்
காணி எழுதி வீடு எழுதிப்
படம் எடுத்து,
காசெண்ணிப் பார்த்துத்
தலையாட்டி
அதையும் படமெடுத்து
பெரிய புத்தகங்களில்
குனிந்தபடி கையெழுத்து வைத்து
மோதிரமும் மாற்றிய

பிறகு,
அனைவரும் அமர்ந்தனர்,
நிலத்தில்.

இரவுதானே!
இட்டலி சாப்பாடென்று ஆக
குழந்தைகளும் அலறித்
தூங்க ஆரம்பித்த

பிறகு,
மறுபடியும் அவளருகே அமர்ந்தான்
கொஞ்சம் சிநேகத்துடன்
'அவன்'.

ஒருநாள் இன்னொருநாள்

எனது,
நிலத்தின்மீதும் முகில்கள் திரிகிற
வெண்பனி புற்களின்
இதழ்களில் படிகிற
காலை
நடுக்குறும் எலும்புகள்
ஒருதரம், உதறி நிமிர்கிறது என் உடல்.

‘குளிக்க வேணும் இண்டைக் கெண்டாலும்
ரெண்டு நாளாச்சு’

பூவரசு போய் விரிந்த
மாரிக் கிணற்றடி
நீர்மட்டம் மேலே
குளிரும்தான் எனினும்
குளிக்கிறேன்
பிறகு,
மறுபடி எனது புறப்பாடு

அதிர்ந்து போய், விறைத்துப்
பனைமரங்கள் எல்லை கட்டிய

வயல்வெளி ஓரம்
நடந்து
ஸ்ரேஷனுக்கு வர
வெயிலும் வருகிறது கூடவே

பின்னர்
அனைவரும் வருவர்
அதே முகம் அதே நிழல்
ஒரே நிறம்.

ரயில் செல்கையில்
நகரும் வயல்களை, மரங்களை
அல்லது விரித்த பத்திரிகையை
அர்த்தமற்று வெறிக்கிறார்கள்
இயந்திரம் போல

இடையிடையே இறங்கிப்
போவர் மாலை
வருவர்.

வெளியில் நெருப்பெனினும்
என்ன?
இரவு, அவரவர் பொந்துகளுள்
புதைந்து கொள்வார்கள்.

பின்னரும், விடிய எழுந்து
தெருவைப் பார்த்து
‘எல்லாம் சரி’ எனில் புறப்பாடு

தொடர் வழி, இவர்களுக்கு
இதுதான் என்று
நான் அறியேன்
ஆனால், நிலமும்,
நீள்கிற ரயிலின் தடமும்
இப்படியே தொடரும்
என்றும் தோன்றவில்லை.

பகல் பொழுதின் மரணம்

ஒவ்வொரு நாளும்
இரவு,
எல்லோரும் படுத்த பிற்பாடு
நாய்களின் அரவம் குன்றி,
நட்சத்திரங்கள் வெறும் வானுடன்
தனித்த போது
தூங்கப் போவேன்.

சனங்கள் நெருங்கிய
சந்தடியில்
ஓடவும் முடியாது,
இருக்கவும் தெரியாது
மூச்சு வாங்கிச் சரிகிறதான
ஒரு கனவில்
பாதி இரவில்
விழிப்பு வரும்.

ஓரோர் சமயம்
கடலும், நதியும் மஞ்சளாகக்
கார்த்திகைப் பூக்கள்
புறம் புறம் விரிய
நடத்தலும் வரும்

காலையில் எழுந்ததும்
கைகள் ஒருபுறம்
கால் ஒரு திசையில்
முகமும்தான் எங்கோ
சிதறிக் கிடக்கும்.

அனைத்தையும் பொருத்தி
நிமிர்ந்து வந்து
எனது பகலை
உன்னிடம் விற்கிறேன்.

தொலைந்துபோன நாட்கள்

நீ எங்கு போனாய்
என்பது தெரியாது
நான் எங்கு போவேன்
என்பதும் அறியேன்.
தெருவிலே எமது
தலைவிதி உள்ளது.
உன்னையும் பிடிக்கலாம்
என்னையும் பிடிக்கலாம்
யார் இதைக் கேட்க?

அந்த இரவுகள்
அதற்குள் மறக்குமா?

21/04/1981

காலைநேரம்;
முகில்களும் எழுந்து
திரியத் துவங்கிய
காலைநேரம்.
காகமும் குயிலும் குக்குறுவானும்
கொல்லையின் திராட்சைத் தோட்டத்திலிருந்து
கூக்குரல் போட,
எழுந்து வருகிறார்.
வெயில் இன்னும்
நிலத்தில் இல்லை.
ஆயிரம் குருவிகள்
ஆயிரம் ஆயிரம் திராட்சைக் குலைகள்

எழுந்து வந்தவர்
மனிதர்.

அவரது பரந்த மார்பின் ரோமக்காடு
பெனியனை மீறி எட்டிப் பார்த்தது.
கொளுத்திப் போட்டார்
சீன வெடிகளை.
பறந்து போயிற்று பறவைக் கூட்டம்;
பிறகு வந்தது மிருகக் கூட்டம்.

அறைந்தன மார்பில்
அதிர்ந்தது இதயம்

மாண்டு போனார்
மனிதர்

22/04/1981

இரவு முழுவதும்
புகையிலை நிறைகிற குடிலுள் வேலை
கொஞ்ச நேரம் படுக்கலாம் என்று
பாயை விரித்துச் சரிந்தாள்,
‘ஈஸ்வரி’

வெளியில் விறாந்தையில்
அண்ணன் துயில்கிறான்.

காற்று மெல்லென
வேம்பினை வருடும்.

இரவு மீண்டும் தோற்றுப் போகிற
இன்னொரு காலை விடிந்து கொள்கிற
நேரம்.

திடீரென
மூன்று ஜீப்புகள்;
ட்ரக்குகள் மூன்று

வாசலில் அதிர
சடாரென உடைந்தது
சங்கடப் படலை
வாயைப் பிளந்து வீறிட்டபடி
கோடியுள் மறைந்தது
கறுப்பு நாய்.

உள்ளே வந்தனர்.
அண்ணனை ஒருவன்
உதைத்து எழுப்பி
ஜீப்பினுள் உருட்டினான்.
ஈஸ்வரி துயின்ற பாயை இழுத்து
அவளது கூந்தலைப்
பிடித்து உலுப்பி

‘போடி வெளியே . . .’

போனாள்! துவண்டு
போனாள்.

அன்று போனவன் அண்ணன்
இன்னும் இல்லை.
வேலியில் உலர்த்திய
வேட்டி காய்கிறது
வெயிலில் இன்னும்

23/04/1981

மீண்டும் அதே கதை,

காலை.

திடீரென வந்தனர்
தலைமயிர் உதிரும்படி
அவன் தலையைச் சுவரில் மோதினர்.
மேசை அதிர்ந்து
கவிழ்ந்து கொண்டது.
அதன்மேல் இருந்த
தொய்வுக் குளிகைகள்
காலணியின் கீழ்
நசுங்கித் தேய்ந்தன.
நிலத்தின்மீது இரத்தம்
உறைந்தது.

நீ எங்கு போனாய்
என்பது தெரியாது
நான் எங்கு போவேன்
என்பதும் புதிர்தான்.

மறுபடி, மறுபடி
தொடர்வது இதே கதை!

எனது வீட்டின் முன்
ஒழுங்கையில் நின்றால்
காற்று வீசும்;

நிலவு திரள்கிற நேரம்
கொஞ்சம் நடந்து திரியவும்
சுதந்திரம் இல்லை

காக்கி உடையில்
எவனும் வரலாம்

யாரையும் உதைக்கலாம்
யாரையும் சுடலாம்

உனது வீட்டில் நெருப்பு வரும் வரை
உறங்கிக் கிடப்பாய்!
உறக்கம் கலையவும்
அவசரமாக எழுந்து வந்து
காணி உறுதியைப்
பத்திரப்படுத்துவாய்
தங்க நகைகளை
அப்புறப்படுத்துவாய்
உனது பொருட்களை
மீட்டு எடுக்கிறாய்.

அப்புறமாக
வெளியில் வந்து
வாசலில் நின்று
பக்கத்து வீட்டின்
சுந்தரம் பிள்ளையை, அல்லது
சண்முகசாமியை
உரத்த குரலில்
அழைத்துப் பார்ப்பாய்
ஒன்றுமே இராது.

சாம்பல்,
அதன்மேல் எலும்புகள்
தலைக்கு மேல் நீலமாய்
வானம்.

அதிர்ந்துதான் போவாய் நண்ப,
இருந்தும்
இனி என்ன செய்யலாம்?

நாளை,
உனது நிலையும் இதுதான்.

உனது நிலம்,
இதோ பரந்து கிடந்தது.
தலையை விரிக்கும் பனைகளை
அதன் வழி, நுழைகிற நிலவை
அசைகிற காற்றை,
மலைகளை முடியிடும்

காட்டுப் பூக்களை
வயல்களில் நெளிகிற
தானிய மணிகளை,
உனது நிலத்தை
உனது மக்களை
நேசிக்கிறாயா?

தெருவிலே எமது
தலைவிதி உள்ளதை,
நெருப்பிலே எமது
நாட்கள் நகர்வதை
அனுமதிக்கிறாயா?

‘இல்லை. . .’

எழுந்து வெளியில் வா
தெருவில் இறங்கு
காலம், மறுபடி, மறுபடி
இரையும்.

உனது வயல்களில்
நட்சத்திரங்கள்
உனது வாசலில்
நூறு மலர்கள்.

மரணமும் வாழ்வும்

இருள் மெதுவாகச்
சூழ்ந்து வருகையில்
மரங்களும், இலைகளும்
நிறங்களை இழந்தன
அத்துவான் வெளியில்
முகில்கள்தான் சிதைந்தன
என்று தோன்றிற்று.

யார் நினைத்தார் இதை?

'அடிவானத்தில் மிதந்தது புகை'
எனச் சொல்லி,
இதழ்கள் மூடு முன்பு
தொலைவிருந்தொரு குரல்;
கூக்குரல்.
பிறகு நெருப்பு

காலையில்,
ஆத்து வாழைகள்
பூத்துக் கிடந்ததில்
கத்தரிப் பூவாய் நீர்;
நிறம் பெற்றது வாவி;
அருகே
தொடர்வது பாதை

மாலையில்,
வருகிறார்கள்
அவர்களின் மீதும்
நெருப்புச் சுடரும்
அவர்களின் கைகளில்
வாட்கள் மினுங்கும்,
தன்னந் தனியனாய்,
அவர்களை எதிர்த்து
ஒற்றை இறகுடன் பறந்தாய்!

உனது
தோள்களை வெட்டி
மண்டையைப் பிளந்து
குரல்வளை நரம்பில்

கத்தியால் கிழித்து
ஆற்றில் போட்டனர்
குருதியில் நனைந்தது ஆறு

'பிள்ளையான் தம்பி'

துறை நீலாவணை
வாவிக் கரையில்
புலம் பெயர்ந்தகலும்
கோடைக் காற்று,
உனது பெயரை எனக்கும்
ஒலித்தது;
கண்ணகி கோவில்
மரங்களின் கீழே
வெயிலில்,
உரத்து நெடுமூச்செறியும்
கருங்கற்களின்மீதும்
அலைகள்,
உனது நினைவை எழுதும் . . .

இப்படி,
உனது வாழ்வு
மரணத்தில் ஆயிற்று . . .!

1981இல் அம்பாறைப் பிரதேசத்தில் தமிழர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களை எதிர்த்தபோது கொல்லப்பட்டவர் பிள்ளையான் தம்பி.

உனது நெருக்கத்தை இழந்த இன்றிரவு

உனது நெருக்கத்தை
இழந்த இன்றிரவு
நான் கவிஞனாக இருப்பதன்
அர்த்தத்தை இழந்து விட்டேன்

இன்றிரவு
என்னால் எழுத முடியும்
என்றும் தோன்றவில்லை

துயர்மிகு வெளி;
காற்று எங்கோ போய் விட்டது
சுவரில் ஆடுவதற்கு நிழல்கள் இல்லை
வேம்பிற்கு இலைகளில்லை
அதன் கடைசி இலையும்
இன்று மாலை உதிர்ந்து போய்விட்டது
என்னை வருட
உனது விரல்களும் இல்லை.

அலைகளில் எற்றுண்டு
உலைந்து உலைந்து
உயர்ந்து விழுந்து
ஈரப்பனிக் காற்றில்
கடலில் ஒரு படகு;
நடுவழியில் திசையறியாப்
பறவை.

யுத்த காண்டம்

எனக்கென்று ஒன்றுமில்லா
இவ்வெற்றுப் பிரபஞ்சத்தில்
மனதின் மெல்லிய நரம்புகள்மீது
அதிர்ந்தும் உரத்தும்
மரணம்,
தன்னுடைய முகங்களை அறிவிக்கிறது.

வயல்வெளிகளிலும்
சந்தித் திருப்பங்களிலும்
உறைந்துபோன குருதி,
உறைந்துபோன விழிகள்

காலமும் நேரமும் காற்றும்
பெருமழையும்
கடலோரப் பெருமணல் விரிப்பும்
இல்லாத ஓர் வெளியில்
மனித இருப்பை மறுத்துவிட்டுக்
குருதி படர்ந்து வருகிறது

மனிதன்மீதான
நம்பிக்கையின் மரணத்தை
இப்போது அறிவித்து விடலாம்
ஒரு சொல்,
ஒரு வசனம்,
ஒரு நீண்ட தொடர்
போதும் எனக்கு.

'நேற்று மனிதன் இறந்து விட்டான்'
அப்போது இருப்பது யார்?
பொலீஸ்காரர்களா?
மிருகங்களா?
புல், புழு, பூச்சி, புளியம் இலைகள்,
நண்டுகள் மட்டுமா?

தோழர் இருவரின் உயிரற்ற உடல்கள்
என் நெஞ்சை உலுப்பிய போது
ஒரு கணம்
மனித இருப்பில் நம்பிக்கை இழந்தேன்
உங்கள் மரண நெடிய ஊர்வலத்தின்

ஒவ்வொரு முகத்திலும்
இன்று இந்த,
ஆயிரம் தலைசூழ் நெடுமண்டபத்தின்
ஒவ்வொரு முகம், ஒவ்வொரு தலை
ஒவ்வொரு விழியிலும்
மக்களைப் பிரிந்த மனிதரின்மீதான
அதிருப்தியை எழுத
நான் விரும்புகிறேன்

2

நடுநிசி.
அமைதியோ அரவமோ
அதைப் பற்றி என்ன?

‘எழும்பு; நட;
திரும்பு’

தலைக்குள் நூறு சன்னங்கள்
நெல்லும் சணலும் இல்லாது
முந்தநாள் உதிர்ந்த சிறுமழைத் தூறலில்
அறுகம் புற்கள் படரத் துவங்கிய
வயல்வெளிப் படுகையில்,
காற்றும் உறுமித் தன் கவலையைச்
சொல்ல,
விலாவையும், மார்பையும்
காதுப் புறத்தையும்
துப்பாக்கி வேட்டுகள் துளைக்க
நிமிர்ந்து,
பிணமாய்க் கிடந்தீர்

மக்களைப் பிரிந்த தனிமனிதர்களின்
அராஜகத்தின் மேல் காறி உமிழ்கிறேன்
போராளிகளை இருட்டிலே கொன்ற
துரோகத்தனத்தைப் பறைசாற்றுகிறேன்

காற்றையும் மீறி
வலியது என் சொல்
நெருப்பையும் மிஞ்சிச்
சுடும் என் விழிகள்

அன்றொரு சுந்தரம்;
ஆட்களும் அடிக்கடி நகர்கிற தெருவில்,

ஓர் திரும்பலில்,
ஒரு கண அசைவும் சாத்தியமற்று
இறந்தவன்,
இன்றோ உமாவும் இறைவனும்,
இதுதான் வழியா?

எனது கண்முன் எனது தோழர்கள்
யுத்த காண்டத்தில்,
விழிகளுக்குப் பதில் நெருப்பு,
விரல்களுக்குப் பதில் துவக்கு,
இதயங்களுக்குப் பதில் இரும்பு.

தயவு செய்; நிறுத்து!
இல்லையேல்
அநுபவி; துயர்ப்படு;
நொந்து சுருங்கு
வெடித்துச் சிதறு

3

உமா அல்லது இறைவன்
அவர்கள் மனிதர்கள்
உச்சியிலிருந்து உள்ளங்கால்வரை
விடுதலைக்காகத் தம்மை வழங்கிய
வீரப் போராளிகள்.

அதற்காக என் தலை ஒருமுறை குனியும்

எனது நிலத்தை
எனது மொழியை
எனது மக்களை, எனது காற்றை
அந்நியன் காலின்கீழ் அடகுவைக்கிற
அண்ணன்மார்களை
இன்றைய கால உக்கிரச் சூழலில்
உறுதியோடு எதிர்த்தவன்

ஆதலால் என் தலை மறுபடி குனியும்

விடுதலை உணர்வின் எழுச்சிக் குரலை
அபிவிருத்தியால் மூடி வைக்கிற
அரசியல் தலைவரை,
‘புத்தருடைய புனிதப் பல்லைக்

காவித் திரிந்து காவித் திரிந்தே
செத்துப்போ'
என

வன்னி மண்ணுக்கு அப்புறமாக
நாம் அடித்துத் துரத்திய
யானையின் முதுகின் பின்
விடுதலைச் சூரிய ஒளியை மறைக்கும்
பாராளுமன்ற அரசியல் தலைமையை,
பாராளுமன்றப் பாதையை,
வெறுத்துப்
போராளிகளாகப் புறப்பட்டு வந்தீர்.

ஆதலால் என் தலை இன்னும் குனியும்

நேற்று,
நானும் நீங்களும் ஒருவழி நின்றோம்
நமது விடுதலைத் தடத்தில் சென்றோம்
நமது மக்களை விழித்தெழு என்றோம்
நமது தலைவரை ஒதுங்குக என்றோம்
இன்றோ,
உங்களைக் கொன்றனர்.
நான் வழி தொடர்வேன்
நூறு நூறாயிரம் துணைவர்கள் வருவர்.

மறுபடி மறுபடி தவறுகள் செய்பவர்
மனிதரேயல்லர்

மரணம் வாழ்வின் ஒரு முடிவல்ல
உங்கள் சொற்களைவிடவும்
செயல்களைவிடவும்
உங்கள் மரணம் மிகவும் வலியது.

நண்பர்கள் இறைகுமாரன், உமைகுமாரன் ஆகியோருக்காக யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் வாசிக்கப் பட்ட கவிதை.

எனது நிலம்

சிறகுவலை விரித்த பரவைக் கடல்
மேலே மூச்செறியும் காற்று
கடல் நடுவில்,
கலையும் தலைமயிரை
விரல்களாலழுத்தி நிமிர்கையிலெல்லாம்
கரை தெரிகிறது,
பனைமரமும் இடையிடையே ஓடுகளும்.

அலையும், எஞ்சின் இரையும் பொழுது
சிதறும் துளியும்
ஒன்றரை மணி நேரம்
எப்படி முடிந்ததாம்?

பிறகு, மணல் நிமிர்ந்த வெளி
அதனுள் புதைந்த பனைகள்,
ஒவ்வொன்றும் ஓராள் உயரமெனக்
கன்னி மணல்மீது தலைநீட்டும்
மணலோ,
கண்ணாடி விதையிட்டுச்
சூரியன் போய்க் குடியிருந்த
பொன்னின் துகள்
அதன்கீழ்
இரண்டாயிரம் ஆண்டுகள்
முன்பாக, என் முன்னோர் நடந்த

நிலப்பரப்பு.
ஒரு காலடி ஆனால்
ஓராயிரம் ஆண்டு
எம் வேர் நீண்டுள்ளது.

துயிலாது, இந்த அலைகரையில்
நின்று
விண்மீன் சிதறிக் கடலுள்
விழுகிறதைப் பார்த்திரங்கிய ஒருத்தியின்
அல்லது
தொடுவான் வெளி பிளந்து
கரை சேரும் நாவாய்க்குக்
காத்திருந்த இன்னொருத்தியின்
வெறும் மார்பில் புரண்ட மணி ஒன்றில்
பின்மாலை, அந்திப் பொழுது
புடமிட்ட
தென்னோலை காற்றாடும் வெளியின்
மண் மூடிய சுவடுகளில்,
என்
முன்னோர்
விட்டுப் போயுள்ளார்கள்
எனக்கொரு செய்தி

நூறுநூறாயிரம் தோள்களின்மீது
ஏறி நின்று,
எனது நிலம் என உரத்துச் சொல்கிறேன்.
ஏழு சமுத்திர வெளிகளைத் தாண்டி
அதன் மேல் எழுகிற அலைகளை மீறி
அதனைக் கொண்டு போய்,
எங்கும் ஒலிக்கிறது காற்று

‘எனது நிலம்
எனது நிலம்’.

இரண்டாவது சூரிய உதயம்

அன்றைக்குக் காற்றே இல்லை;
அலைகளும் எழாது செத்துப் போயிற்று
கடல்.

மணலில் கால் புதைதல் என
நடந்து வருகையில்
மறுபடியும் ஒரு சூரிய உதயம்.

இம்முறை தெற்கிலே

என்ன நிகழ்ந்தது?
எனது நகரம் எரிக்கப்பட்டது;
எனது மக்கள் முகங்களை இழந்தனர்,
எனது நிலம், எனது காற்று
எல்லாவற்றிலும்
அந்நியப் பதிவு.

கைகளைப் பின்புறம் இறுகக் கட்டி
யாருக்காகக் காத்திருந்தீர்கள்?
முகில்களின்மீது
நெருப்பு,
தன் சேதியை எழுதியாயிற்று
இனியும் யார் காத்துள்ளனர்?

சாம்பல் பூத்த தெருக்களிலிருந்து
எழுந்து வருக.

துப்பாக்கி பற்றிய ஒரு கவிதை

துப்பாக்கிகள் சுடுவதற்காகவா?
அல்லது குத்துவதற்கா?
வெயில் தொட,
மினுங்கும் கத்திமுனை ஒன்று
அதில் இருப்பது
உங்களுக்குத் தெரியுமென்று நம்புகிறேன்.
இம்முனையிலிருந்து அம்முனைவரையும்
மனிதர்கள் திரிகிற தெருவின் நடுவில்
விறைப்பாய்,
நீட்டிய துவக்குடன் நிற்கிற அவனைக்
கேட்கலாம்.
ஆனால், அவனோ
இறுகிய கையுடன் நகர்கிற மனிதரைக்
கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறான் -
உடனே என்றில்லாவிட்டாலும்
ஒரு இளைஞன்,
அல்லது வேட்டியுடனான, நரை விழுந்த
ஒரு மனிதர்,
அல்லது ஒரு பாடசாலைப் பயல்
யாரென்றில்லை யாரையாவது
அவன் சுடலாம் என்றுதான் தோன்றுகிறது
அவனைக் கேட்பது உசிதம் இல்லை,
நல்லது.
இரண்டாம் உலகப் போர்க்காலத்து
யப்பானியச் சிப்பாய்களைக் கேட்டாலோ,

'நிராயுதபாணிகளான மனிதரை
நெடுநேரம் சுடுதல் இயலாது;
சலிப்புத்தான் எஞ்சும்;
இன்னும்,
குழந்தைகள் பெண்கள் இவர்களைப் பொறுத்தும்
ஒரு மாறுதலுக்காகக்
கத்திமுனையைப் பாவிக்கலாம்' என்று

இடுங்கிய கண்களுடன்
அந்த நாளைய இரத்தம் தோய்ந்த
நினைவுகளோடு
அவர்கள் சொல்லக் கூடும்!

எல்லா இராணுவத்தானும்,
சிங்களவனோ
யப்பானியனோ
ஜேர்மனியனோ
துவக்குடன் ஒருவித நட்பை
ஆரம்பித்துக் கொள்கிறார்கள்

இது உண்மைதான்
அந்தத் தெருவின் நடுவில்
நிற்கிற அவனையும்
அவன்பின் தொடர்கிற மற்றையவர்களையும்
பார்த்து,
இது முற்றிலும் உண்மை என உணருங்கள்.

ஒரு பிரியமான ஆட்டுக் குட்டியைப் போல
அல்லது ஒரு வளர்ப்புப் புறாவைப் போல
அதனைத் தாங்குகிறார்கள்
அனல் தெறிக்க
அதனைப் பற்றவைக்கிறபோது
அவர்கள் தங்கள் அரசுக்கு
எவ்வளவோ நன்றியுடையவர்களாக
இருப்பார்கள் என்றா நினைக்கிறீர்கள்?
அப்படி ஒன்றுமல்ல.

அலவன்சுகளும் வசதிகளும் இங்கே
நெடுங்காலம் அவர்களைத்
தங்க வைக்க முடியாது.

புரிகிறதா?

தனிமை விருப்பு

எல்லாமே சார்பாகப் போயிற்று
நீ, நான், நிழல்,
மேலைக்காற்று
அத்தொடு
முள்ளில் மலர்கிற நெருஞ்சி
இறுதியில் காலமும்கூட

நீ இல்லாதபோது உறைகிறது
உன் கை பற்றுதல், இதழ் தொடல்
பிறகும் தொடர்தல் என
அது புயலாகிறது.

கண்வெட்டி நிமிர்த்த
முறிந்துபோன மரமாய் நான்
கைகளில் நேற்றைய விரிவுரைக் குறிப்புகள்

இப்போ மிகவும் அவசியம் :
காலம், காற்று எல்லாம் உறைந்த
ஒரு தனித்த பெருவெளி.

நாங்கள் எதை இழந்தோம்?

நாங்கள் எதை இழந்தோம்?
நம் இனிய நண்பனே.

நடுத்தெருவில் சுட்டெரித்து
நாய்கள் நிணம் புசிக்கச்
செம்மணியில் வீசுதற்கா
திருமலையில் தொட்டிலிட்டு
உன்னை ஈழமகள்
பெற்றெடுத்தாள்?

காலனது காலடிகள்
காற்றதிரப் பதிவதற்கா
காலமகள் நீரெடுத்துக்
கோலமிட்டாள் மணற்பரப்பில்?

நெற்கதிரே,
நீள்விசும்பே,
நெஞ்சு இரங்காச் சூரியனே,
புல்லின் இதழ் நுனியில்
பூத்திருக்கும் பனித்துளியே,

நீங்கள் அறிவீர்களா
எம் நெஞ்சுறையும் சோகத்தை?
எம் செந்நீரின் சரித்திரங்கள்
திசை எங்கும் சேதி சொல்ல

காற்றில் கலந்துவிட்ட
சாம்பல் துகள்களிலே
பயணம் தொடர்ந்த கதை
யார்தான் அறியவில்லை?

எங்கள் இளந் தோழா!
அப்பாவி மக்களின்மேல்
மட்டுமே மறுபடியும்
துப்பாக்கி சுடத் தெரிந்த
'வீரமிலா நாய்'களது
வெறித்தனத்தில் உயிரிழந்தாய்

நீள் தொலைவில்
பைன் மரத்துக் காடுகளில்

பனி உறையும் குளிர் இரவில்
முன்னர் உனை நேசித்த
பெண்ணவளின் கண் கலங்கும்.

வாழ்க்கை அன்று தீர்த்துவைக்க
முடியாத ஒரு வழக்கை
மரணம் இன்று
முடித்துவைத்த
துயர்க் கதைக்குச் சாட்சியில்லை,
துயரங்களும் முடிவதில்லை.

உனை அவளும் இழந்தாள்,

நாங்கள் எதை இழந்தோம்?
உன் உயிரை, உனைப்போல
இன்னும் பல உயிரை.

ஆனால்,
நம்பிக்கைகளை
நாங்கள் இழக்கிலோம்.
நமது கடமையை
நாங்கள் இழக்கிலோம்
நமது நாட்டையும்
ஒருபோதும் நாம் இழக்கோம்!

அது போதும் உனக்கு.

காற்றாகி நில்
கடலாகி அலை வீசு
போரிடும் நம் தோழர்களின்
வேட்டொலிக்குப் புறங்காட்டித்
தோற்றோடும் ராணுவத்தின்
அவலக் குரல்களின்மேல்
உனதும், உனைப் போன்ற
ஏராளம் மக்களதும்
நினைவுக்குச் சாசனத்தை
இந் நிலத்தில் நாம் பொறிப்போம்!

(நண்பன் கேதீஸ்வரன் நினைவுக்கு)

ராணுவ முகாமிலிருந்து கடிதங்கள்

1

அன்பே நந்தா,

இன்று காலைதான் வந்துசேர்ந்தோம்.
பிரச்சினை இல்லை.
மடியில்
ரைஃபிளை இறுகப் பற்றியிருந்ததில்
தூக்கமுமில்லை.
கனவுகள்;
மிகவும் பயங்கரம்
திடீரென விழிப்பு.

ரயில் நிலையத்தில்
நீயும் மாமியும் அழுத அழுகையில்
நானுமே பயந்தேன்.
ஆனால்,
அனைவரும் எனக்குச் சொன்னதுபோல
வடக்கு
அப்படி ஒன்றும் பயங்கரமாகத்
தெரியவில்லை.
எங்கும் போலவே
கடைகள், தெருக்கள்,
வாகன நெரிசல்.
மனிதர்கள்தான் எமைப் பார்ப்பதேயில்லை.
தற்செயலாகப் பார்க்கிறபோதும்
அவர்கள் எல்லோரது கண்களினூடும்

ஏதோ ஒன்று

இனம் புரியாத ஓர் உணர்வு
என்னவாயிருக்கும் அது
என எனக்குப் புரியவே இல்லை.

நாங்கள் தனித் தனியாகச்
செல்வது இயலாது என்பதை
நீ அறிவாய் அல்லவா?
இரண்டு கவச வாகனங்கள்,
வேறும் ஜீப்புகள் இரண்டு,
அல்லது மூன்று,

ட்ரக் ஒன்று
இவற்றில் குறைந்தது
ஐம்பது பேராவது ஒன்றாய்ச் செல்வோம்.
அது,
உண்மையிலேயே ஒரு
அணிவகுப்புத்தான்
சுதந்திர தின விழாவில்
பார்த்திருப்பாயே
அப்படித்தான்.
ஆனால், ஒரேயொரு வித்தியாசம் :
சுதந்திர தினத்து அணிவகுப்பில்
எங்களுக்கு சுதந்திரம் இருந்தது
துப்பாக்கிகளுக்கு குண்டுகள் இல்லை.
இங்கோ,
துப்பாக்கிகளுக்கு வேண்டுமான அளவு
குண்டுகள்;
ஆனால், சுதந்திரம் இல்லை

2

இன்று முழுவதும் மிகுந்த அலைச்சல்
பனை மரங்களூடாக வளைந்து வளைந்து
செல்லும் தெருக்களில்
(அவை மிக மோசம்)
கவச வாகனம் குலுங்கக் குலுங்க
இடுப்பு எலும்பெல்லாம்
பிறகு ஒரே வலி.

மத்தியானம்
வயல்வெளிகளுக்கு நடுவிலிருந்த
ஒரு கிராமத்தில்
மூன்று கொழுத்த ஆடுகள் சுட்டோம்.
இளைஞர்கள் இல்லை;
பெண்கள் ஓடி ஒளிந்துகொண்டார்கள்.
முகாமுக்கு மீள்கிற பாதிவழியில்
மேஜருக்குரிய சிகரெட் வாங்க
மறந்துபோனதை
ஒருவன் ஞாபகப்படுத்தவும்,
பிறகென்ன?
அணிவகுப்பாக அவ்வளவு பேரும்
நகருக்குத் திரும்ப நேர்ந்தது

3

இன்று,
எதிரிவீரவும், சந்திரசிறியும்
மூன்று தமிழரைச் சுட்டுக் கொன்றனர்.
‘நெருக்கடி மிகுந்த தெருவில்
திடீரென இவர்கள் ஓடிச் சென்றதால்,
கலவரமுற்றுச் சுட்டுவிட்டேன்’

என்று சந்திர சொன்னான்; பிறகு,
விசாரணையின்றியே
இரண்டு பேரையும்
கொழும்புக்கு அனுப்பினர்
இடமாற்றம்தான்.
(கொடுத்து வைத்தவர்கள்)

. . . . . .
யாரையாவது சுட்டால்
அல்லது
சனங்கள்மீது தாக்குதல் நிகழ்த்தினால்
வீடுகளைப் பற்றவைத்தால்
உடனடியாக மாற்றம் கிடைக்கிறது(?)

. . . . . .
நேற்றும் ஐந்து பேர்
உடனடியாக மாற்றம்பெற்றனர்.
நான் வந்ததிலிருந்து
மொத்தமாக ஐம்பது பேராவது
திரும்பி விட்டனர்;
எப்போது எனக்கு மாற்றம் வருமோ
நான் அறியேன்.

4

இன்றும் புதிதாக நூறு பேர்
எங்கள் முகாமுக்கு வந்தனர்
சின்னப் பயல்கள்;
மீசைகூட அரும்புதான்.
இயந்திரத் துவக்கை இயக்குவதிலோ
திறமையும் குறைவு . . .
. . . . . .

இப்போதெல்லாம்
பகலில் அலைந்து திரிந்த பின்னரும்

இரவில் தூக்கம் பிடிப்பதேயில்லை.
நீண்ட நாளாயிற்று
உன்னை நேரே பார்த்து.
விடுமுறை என்பது நினைக்கவே
இயலாதது. . .
. . . . . .

5

நேற்று இரவு
எமது பிரிவின் பதின்மூன்றுபேரை
'அவர்கள்' கொன்றனர்
குறி பிசகாத குண்டுவெடிப்பின் பின்
சுற்றி வளைத்தன இயந்திரத் துவக்குகள்.
நாங்கள்
எவருமே இதனை எதிர்பார்க்கவில்லை.
தலைமை முகாமுடன் வானொலித் தொடர்பு
இடையறாமல் இருந்தும்,
இருட்டினுள் யமனின்
இருப்பை மீற
ஒன்றுமே இயலாது போயிருக்க வேண்டும்.

அடுத்தநாட் காலை
எந்தத் தெருவிலும் சனங்கள் இல்லை;
கடைகள் இல்லை.
அர்த்தம் தெரியாமல் ஓர் அமைதி
என்ன தேசம் இது?

இப்போதெல்லாம்
இரவு மிகவும் கொடூரம் மிக்கது.
நிலவொளி படர்கையில்
நிழல்கள் அசைவதும்
பெயர் தெரியாத பறவைகள்
திடீரென அலறுவதும்
பகல் வரும்வரையில் நரகம்தான்.

. . . . . .
அப்புறம்,
உடனடியாக மாற்றம் கேட்ட
எமது பிரிவு நேற்றுத் தெருவில்
இறங்கிற்று
எத்தனை பேரைச் சுட்டுத் தீர்த்தது
என்ற விபரம் சரியாகத் தெரியாது.

ஐம்பது அல்லது அறுபது என்று
மேஜர் நினைக்கிறார்.

6

அன்பே நந்தா
ஒரு வழியாக எல்லாம் முடிந்தது
நாளை எனக்கு இடமாற்றம்
கடவுளுக்கு நன்றி.
இன்று கடைசித் தடவையாக
நகருக்குச் சென்றேன்
அப்படி ஒன்றும் பயங்கரமாகத்
தெரியவில்லை.
முன்பு போலவே கடைகள், தெருக்கள்
ஆனால், மனிதர்கள்தான்
முன்பு போலவும்
எம்மைப் பார்ப்பதேயில்லை.

எல்லாவற்றையும் மறந்துவிடலாம்

எல்லாவற்றையும் மறந்துவிடலாம்
இந்தப் பாழும் உயிரை
அநாதரவாக இழப்பதை வெறுத்து
ஒருகணப் பொறியில் தெறித்த
நம்பிக்கையோடு
காலி வீதியில்
திசைகளும், திசைகளோடு இதயமும்
குலுங்க விரைந்தபோது,

கவிழ்க்கப்பட்டு எரிந்த காரில்
வெளியே தெரிந்த தொடை எலும்பை,
ஆகாயத்திற்கும் பூமிக்குமிடையில்
எங்கோ ஒரு புள்ளியில் நிலைத்து
இறுகிப்போன ஒரு விழியை,
விழியே இல்லாமல், விழியின் குழிக்குள்
உறைந்திருந்த குருதியை,
'டிக்மண்ட்ஸ்' ரோட்டில்
தலைக் கறுப்புகளுக்குப் பதில்
இரத்தச் சிவப்பில் பிளந்து கிடந்த
ஆறு மனிதர்களை,
தீயில் கருகத் தவறிய
ஒரு சேலைத் துண்டை,
துணையிழந்து,
மணிக்கூடும் இல்லாமல்
தனித்துப்போய்க் கிடந்த
ஒரு இடது கையை,
எரிந்துகொண்டிருக்கும் வீட்டிலிருந்து
தொட்டில் ஒன்றைச்
சுமக்க முடியாமல் சுமந்துபோன
ஒரு சிங்களக் கர்ப்பிணிப் பெண்ணை

எல்லாவற்றையும்,
எல்லாவற்றையுமே மறந்துவிடலாம்

ஆனால்
உன் குழந்தைகளை ஒளித்துவைத்த
தேயிலைச் செடிகளின் மேல்
முகில்களும் இறங்கி மறைத்த
அந்தப் பின்மாலையில்
நீண்ட நாட்களுக்குப் பிறகு கிடைத்த
கொஞ்ச அரிசியைப் பானையிலிட்டுச்
சோறு பொங்கும் என்று
ஒளிந்தபடி காத்திருந்தபோது
பிடுங்கி எறிபட்ட என் பெண்ணே,
உடைந்த பானையையும்
நிலத்தில் சிதறி
உலர்ந்த சோற்றையும்
நான் எப்படி மறக்க?

அவர்கள் அவனைச் சுட்டுக் கொன்றபோது

அவர்கள் அவனைச்
சுட்டுக் கொன்றபோது
எல்லோருமே பார்த்துக்கொண்டு
நின்றார்கள்
இன்னும் சரியாகச் சொல்வதானால்
அவன் சுடப்படுவதைக் காண்பதற்காகவே
அவர்கள் நின்றனர்

அவனுடைய வீட்டைக்
கொளுத்த வந்தவர்கள்,
பெட்டிக் கடையில்
பாண் வாங்கவந்த இரண்டு கிழவிகள்
கையில் கற்களுடன்
ஏராளமான சிறுவர்கள்
மற்றும்,
அன்று வேலைக்குப் போகாத
மனிதர்கள், பெண்கள்

இவர்கள் அனைவரின் முன்னிலையில்
நிதானமாக
அவன் இறந்துபோனான்.

அவன் செய்ததெல்லாம்
அதிகமாக ஒன்றுமில்லை;

அவனுடைய வீட்டிலும்
அதிகமாக ஒன்றும் இருந்ததில்லை.

ஆனால்,
தமிழர்களுடைய வீட்டைக் கொள்ளையிடுவதை
யார்தான் தடுக்க முடிகிறது?
அன்று காலையும் அதுதான் நடந்தது.

ஐம்பது பேர்,
அவனுடைய வீட்டை உடைக்க வந்தனர்.
வனத் திணைக்கள அதிகாரியான
அவனுடைய அப்பாவின் துவக்கு
நீண்ட காலமாய்
முன்னறைப் பரணின் மேலே இருந்தது.
துவக்கை இயக்க அவனும் அறிவான்.

கொள்ளையடிக்க வந்த
சிங்களவர்மீது துவக்கால் சுடுவதைப்
புத்தர்கூட அனுமதிக்க மாட்டார்
என்பதை
அரசு அறியும்
அமைச்சர்கள் அறிவார்
அவன் எப்படி அறிவான்?

ராணுவம், கடற்படை, விமானப்படை
என,
எல்லோருமாக முற்றுகையிட்டு
அவனுடைய வீடு எரிந்துவருகிற
புகையின் பின்னணியில்
அவனைக் கொல்வதற்கு முன்,

அவன் செய்ததெல்லாம்
அதிகம் ஒன்றுமில்லை
இரண்டு குண்டுகள்
ஒன்று ஆகாயத்திற்கு
அடுத்தது பூமிக்கு.

விமலதாசன் அண்ணா

இந்தக் கடிதம்
உங்களுக்குக் கிடைக்கும் என்ற
பேராசைத்தனமான கற்பனை எதுவும்
எனக்குக் கிடையாது
எனினும்,
இதனை எழுதாமல் விடவும்
முடியவே இல்லை
மனம்,
வண்ணத்துப்பூச்சியின்
செட்டையைப்போல
அடித்துக் கொள்கிறது.

உங்களை நான்
கடைசியாகச் சந்தித்தது
எப்போது என்று நினைவிருக்கிறதா?
அன்றைக்கு, உங்களிடம்
நீங்கள் வழக்கமாகத்
தோளில் மாட்டும் துணிப்பை
இருக்கவில்லை.
கதைக்க நிறைய விஷயங்கள் இருந்தும்
அவசரத்தில்,
ஒன்றுமே முடியவில்லை.
நான் மெலிந்துபோய் விட்டேன்
என்று சொன்னீர்கள்.
(எல்லோரும்தான் சொல்கிறார்கள்!)

ஆனால்,
யாரைப் பார்த்து
யார் சொல்வது?

இங்கே இப்போது
நிலைமை மோசம்.

நாங்கள் உயிர் வாழ்வதற்கான
நிகழ்தகவு
அச்சந்தரும் வகையில்
குறைந்து போய்விட்டது.

இரவுகளில்
அநேகமாக எல்லோரும்
பயங்கரமான கனவுகளைக்
காண்கிறார்கள்
அவற்றில்
ஹெலிகொப்டர்கள்
தலைகீழாகப் பறக்கின்றன
கவச வாகனங்கள்
குழந்தைகளுக்கு மேலாகச்
செல்கின்றன.

நமது சிறுவர்கள்
கடதாசியில் துப்பாக்கி செய்து
விளையாடுகிறார்கள்.

சமயங்களில்,
நகரில் எல்லாக் கடைகளும்
பூட்டப்பட்டாலும்,
சவப்பெட்டிக் கடைக்காரன்
மட்டும்
நம்பிக்கையோடு
திறந்து வைத்திருக்கிறான்.

உங்களுக்குத் தெரியுமோ
என்னவோ,
நமது அருமை நண்பர்கள்
பலரை இழந்தோம்.
எப்படி என்று நான்
எப்படிச் சொல்ல?

என்றாலும்
'வெற்றிடங்களை இயற்கை விடுவதில்லை'
என்பது நீங்கள் அறிந்ததே.

இறுதிவரையில்
நாம் வழி தொடர்வோம்.

ஜூலை 1983இல் பதின்மூன்று ராணுவத்தினரை விடுதலைப்புலிகள் கொன்றமைக்குப் பழிவாங்கு முகமாக யாழ்ப்பாணத்தில் ராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்ட ஐம்பத்து நான்கு பேரில் சமூக நீதிப்போராளியும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் தலைவர்களின் முன்னோடியும் நண்பருமான அ. விமலதாசனும் ஒருவர்.

சொல்வதற்கு ஒன்றுமில்லை

சொல்வதற்கு ஒன்றுமில்லை.

இறந்த உடல்களுக்கும்,
அகதி முகாம்களிலே
குழந்தைகளின்
இடையறாத அழுகுரல்களுக்கும்
எரிந்த வீடுகளுக்கும்
இடையே
எதைத்தான் எழுத?

எமது நிலத்தின்
வடக்கு எல்லையில்
தூக்கணாங் குருவிக் கூடுகளின்
பச்சை நிறம் இன்னும் உலராத
பற்றைக் காடுகளுக்கு அப்பாலும்
கிழக்கே,
அடுத்த விதைப்பிற்கென
எஞ்சிய நெற்கட்டைகளை
வயலில் கொளுத்தப்
புகை கிளம்பி
முகில் மறைக்கும்
வயல்வெளிகளுக்கு அப்பாலும்

அவர்களின் போர்க்குரல் கேட்கிறது.
ராட்சத வாகனம்
இரட்டைக் குழல் பொருத்தித்
தானியங்கும் துப்பாக்கி,
பச்சையுடுப்பணிந்த காலாட்படை.

கொலையுண்ட நம் மக்களைப்
புதைத்த குழிகளின் மேல்
புற்கள் மலரும் முன்பாக
எமது கரங்களில்
துப்பாக்கி எழுகிறது

நிணம் புசித்தவர்களின் நிழல்கள்
நிலவொளி படர்ந்த இரவுகளில்
எமது நிலத்தை அசுத்தப்படுத்துவதை
எப்படி நாங்கள்
அனுமதிக்க முடியும்?

என் வெளி

காற்றுக்கூட உறங்கிப் போகும்
முகில்கள்கூட ஒதுங்கிப் போகும்
நல்ல இரவில்
நடு இரவிலும்கூட
தூக்கம் விழிகளில் படியாமல்
இமை நுனிப் பரப்புகள் இணையாமல்
பனி மழைத் துளிகளின்
பொழியுங் காலம்
இரவுகள் உனக்கு இடையில் முறிகையில்
இரவு மெல்ல உன்னுடன் பேசும்

எழுந்து வெளியில் வா.

வான்வெளி நீலச் சேலையில் தெரியும்
மூன்று வெள்ளிப் பூக்களைப் பார்த்து
என்னை நினைத்துக் கொள்

நான் இறந்துபோன பின்னருங்கூட
அங்கேதான் என் தொடர்ந்த இருப்பு.

காதலின் அர்த்தத்தை
நான் புரிந்து கொண்டபோது

காதலின் அர்த்தத்தை
நான் புரிந்துகொண்டபோது
மனதில் கிளை விரித்திருந்த மரங்களுக்கு
இலை உதிர்ந்து போயிற்று

என்னுடைய காதல்
அது எங்கிருந்து துவங்குகிறது
என்பதை நான் இன்னும்
கண்டுபிடிக்கவில்லை

நிச்சயமாகக் கண்களிலிருந்து துவங்கவில்லை
என்பதை மட்டும்தான்
இப்போது சொல்ல முடிகிறது

உன்னோடு இணைந்ததில்
கரைந்துபோன காலங்களை
“கனவுகளின் தொகுப்பு” என்று
விஞ்ஞானம் போல வரையறை செய்வதிலும்
காதல் எங்கிருந்து முளைக்கிறது
என ஆராய முனைவதிலும்
அநியாயம் ஆரம்பிக்கிறது

இரக்கமில்லாமல்
குருதியைப் பற்றிய எவ்வித நினைவுகளுமற்று
அறிவு
காதலைக் கொல்கிறது

இந்த இடத்தில் விவாதங்கள் வேண்டாம்
தர்க்கம், உளவியல், தத்துவ நூல்களின்
பரிசுப் பதிப்புகளைத் தள்ளி வையுங்கள்

நீண்ட நாள் உறவின் பின்
உன் அழைப்பைக்
கண்களில் வாசிக்கவும்

உன் துடிப்பை விரல் நுனிகளில் புரியவும்
இயல்பாய் முடிகிறது

இந்த இரவில்
நட்சத்திரங்களோடு சேர்ந்து
என் இதயமும் துடித்துக்கொண்டிருக்கிறது

நிர்ச்சலமான நீல ஆகாயப் பின்னணியில்
கடற்கரை மணலில்
உன்னுடைய நீண்ட விரல்கள்
என் கேசத்தை நீவ
உன் மார்புகளில் துயில விரும்புகிறேன்

மிகவும்
மிகவும்
மிகவும்.

யமன்

காற்று வீசவும்
அஞ்சும் ஓர் இரவில்
நட்சத்திரங்களுக்கிடையே இருக்கிற
அமைதியின் அர்த்தம் என்ன
என்று
நான் திகைத்த ஓர் கணம்,

கதவருகே யாருடைய நிழல் அது?

நான் அறியேன்;
அவர்களும் அறியார்.
உணர்வதன் முன்பு
அதுவும் நிகழ்ந்தது

மரணம்.

காரணம் அற்றது,
நியாயம் அற்றது.
கோட்பாடுகளும் விழுமியங்களும்
அவ்வவ்விடத்தே உறைந்துபோக
முடிவிலா அமைதி.

மூடப்பட்ட கதவு முகப்பில்,
இருளில்,
திசை தெரியாது
மோதி மோதிச் செட்டையடிக்கிற
புறாக்களை.

தாங்கும் வலுவை என்
இதயம் இழந்தது.

இளைய வயதில்
உலகை வெறுத்தா

நிறங்களை உதிர்த்தன,
வண்ணத்துப் பூச்சிகள்?

புழுதி படாது
பொன் இதழ் விரிந்த
சூரியகாந்தியாய்,
நீர் தொடச்
சூரிய இதழ்கள் விரியும்
தாமரைக் கதிராய்,
நட்சத்திரங்களாய்
மறுபடி அவை பிறக்கும்.

அதுவரை,
பொய்கைக் கரையில்
அலைகளைப் பார்த்திரு!

கண் விழித்திருப்போம்

கண் விழித்திருப்போம்
நண்பர்களே!

சோகம் படர்ந்த
தேசப் படமும்,
இதுவரை காலம்
சிந்திய இரத்தமும்,
இதுவரை கால
இழப்பும்,
நெருப்பும்,
எரியும் மனமும்
இன்னொருவனுக்கு அடிமையாகவா?

இரவல் படையில்
புரட்சி எதற்கு?

எங்கள் நிலத்தில்
எங்கள் பலத்தில்
எங்கள் கால்களில்
தங்கி நில்லுங்கள்.

வெல்வோமாயின் வாழ்வோம்;
வீழ்வோமாயினும் வாழ்வோம்
நமது பரம்பரை
போர் புரியட்டும்.

ஒரு சிங்களத் தோழிக்கு எழுதியது

நெல் விதைப்பதற்குப் பதிலாகத்
துப்பாக்கி ரவைகளையே விதைக்கும்
எங்கோ ஒரு கண்காணாத தொலைவில்,
பாதி மாடிவீடுகளாகவும்
பாதி 'பயங்கரவாதி'களாகவும்
நிறைந்திருப்பதாகச் சொல்லக் கேட்ட
ஓர் இடத்தில் இருந்து வந்த
சாதாரண மனிதனான என்னைச்
சந்தித்த அதிர்ச்சியிலிருந்து
நீங்களும்
உங்கள் நண்பர் குழுவும்
விடுபட
நீண்டநாளாகாது.

மண் கலங்க ஓர் நிறமும்,
மண்ணோடு நீர் கலங்க
நீரில் நிழல் விரிக்கும் மேகங்களால்
ஓர் நிறமும்,
மின்னுவதற்கென்றே
நிலவின் திரை நூலிழையில்
போர்வையிட்ட
பாலாவி நீர்ப்பரப்பின்
படித்துறையில்,
அருகமர்ந்து
இனிய குரலில்
உங்கள் சிங்களப் பாடலைக்
கேட்கிறபோது
நான் மனம் கிளர்ந்தேன்.

முன்னர் ஒருதரம்,
அப்போது நான் சிறுவன்;
மாகோ ரயில் நிலையத்தில்
மட்டக்களப்பு ரயிலுக்காகக்
காத்திருக்கையில்,
அப்பாவோடு
தண்டவாளத்தில் கொஞ்சநேரம்
நீள நடந்தபோது.
நடு இரவு;

மெல்லிய குரலில்
ஓர் தாலாட்டுப் பாடல்
காற்றில் அனுங்கிற்று,
குழந்தையின் அழுகுரல் இடை
அம் மெல்லிய குரலின் அதிர்வு
அவ்விரவு,
எனது மனதை நெகிழ்த்திற்று
நான் துயருற்றேன்.

இன்றும்,
மெல்லிய துயர்
எனைச் சூழ்ந்தது.

ஆடியிலே தூங்கும்வரை
ஓயாத பெருங்காற்று;
ஓயாத பெருங்காற்றில்
உதிர்கின்ற பொன்னொச்சிப்
பூக்களையும்,
நெடுந்தோகை மயில்
தனது நடையின் திசைமாற்றத்
தடுமாறும் கணங்களையும்
புன்சிரிப்போடு
பார்த்து ரசிக்கப்
புரியாத மொழி நம்மைத்
தொலைவிலா வைத்தது?

உங்களுக்கு விருப்பம்
என்பதற்காக
என்னால் ஒரு மயிலிறகாவது
பறித்துத் தர முடியவில்லை
முன்னிரவில்
புல் வழியில்
முழு நிலவில் நடந்துபோக
நீங்கள் விரும்பிய போதும்
என்னால் துணைவர முடிந்ததில்லை.

மெல்லிய ஏமாற்றங்களை மறக்க
உங்கள் கண்களுக்கு முடியவில்லை.
உங்கள் மெல்லிய நேசத்தை மறக்க
எனக்கும் முடியவில்லை.

இயற்கையின் கழுத்தை நெரிக்காமல்

பூக்களை மலரவிட்டுப்
புற்களைப் பூக்கவிட்டுப்
போய்விட்டோம்.

நீங்கள் தெற்காக
நானோ வடக்காக
மலைத் தொடரின் மாபெரிய
மரங்களுக்கு மேலாகக்
குளிர்காற்று இறங்கிவரும்
இளங்காலைப் பொழுதில்
பல் துலக்கும்போது
பயிலும் சிறுநடையில்,
மாந்தையில்
மூடுண்ட நகரை மீட்க முயலும்
ஆய்வு வேலையில்
கொஞ்சநாள் இணைந்ததை
நீங்கள் நினைப்பீர்கள்.

உங்களுடைய மக்களுக்குச்
சொல்லுங்கள் :
இங்கும் பூக்கள் மலர்கின்றன.
புற்கள் வாழ்கின்றன.
பறவைகள் பறக்கின்றன.

எல்லைப்புறத்துக் கிராமம்

அன்பான நகர்ப்புறத்துக் கொரில்லாவே!
என் வந்தனங்கள் உனக்கு

அடுத்த வெடிகுண்டுத் தாக்குதலுக்குத்
தயாராவதற்கு இடையில்,
ரைஃபிளைத் துடைத்தல்,
வெடிமருந்தைச் சரிபார்த்தல்,
திருடர்களுக்கும், கொள்ளைக்காரருக்கும்
மரணதண்டனை வழங்கல் என
உனக்கு நூறு வேலைகள்
இருக்கும்தான்.
என்றாலும்
தயவு செய்
மூன்று நிமிடம் நான்
சொல்வதைக் கேள் எனத்
தாழ்மையாய் வேண்டினேன்

நமது நிலத்தின் எல்லைப்புறங்களில்
கொஞ்சக்காலம் திரிய நேர்ந்தது,
கிழக்கு மாகாணத்தில்,
அந்நியன் கணைக்கு எந்தநேரமும்
நொருங்கக் கூடிய
நீண்டதோர் எல்லை; அனைவரும்
அறிவர்

இருபது மைல்கள் காட்டினுள் நடக்கையில்
விட்டும் தொட்டும்
குளிர்ந்தும் கொதித்தும்
இடையிடைக் குறுக்கிடும்
அருவியில் குளித்து,
தரையிலே பூத்த தாமரைகளின்
வழி ஒதுங்கி.
சூரியனுக்கு நேர் கீழே இருக்கிறோம்
என்பதான பிரமையில்
நடந்தோம்.
வழியில்,
'புலி பாய்ந்த கல்' என்ற இடம்
(பெயர் உனக்குப் பிடிக்கிறது இல்லையா?)
அதற்கு வலப்புறமாய்

போகிறது ஆறு;
அது போகட்டும் அப்புறமாய்
என்றபடி
நாங்கள் நடந்தோம் இப்புறமாக

எல்லைப்புறத்துக் கிராமம்.
மாதுறு ஓயாவிற்கு இப்புறமாக
நமது நிலமும்
அப்புறமாக அவர்களின் நிலமும்
பச்சையாய் விரிந்தது.

ஆறு,
மணலென உறைந்துள்ள நாட்களில்
இப்புறமாக முயல்களை வேட்டையாட
அவர்கள் வருவாராம்.
உரத்த குரலில் எருமையை விரட்டும்
அவர்கள் குரலும் இங்கே கேட்குமாம்.

ஒருபுறம் காடு; யானைகள் திரியும்.
மறுபுறம் குன்றுகள்;
இடையிலே நீர்நிலை.
தொலைவில் கூட்டமாய்,
அரசாங்கத்தால் அத்துமீறிக்
குடியேற்றப்பட்டோர் குடிசைகள் தெரியும்.

கியூபாவில்தான் உள்ளனர் என்று
நீ சத்தியமாக நம்பியிருந்த
'உழவர்கள்'
இங்கும்கூட உள்ளனர் நண்பா!
நிலமும் நிலத்துடன் பிணைந்த மனிதனும்.

பத்திரிகைகளை இவர்கள் அறியார்,
பாடசாலையை இவர்கள் அறியார்,
ரீ. வி., வீடியோ, மின்சார வசதிகள்
இலத்திரன் கருவிகள் எதுவுமே அறியார்.
இலங்கை அரசின் வானொலி தருகிற
செய்தியை மட்டுமே கேட்டுப் பழகி
உன்னைக்கூட
'பயங்கரவாதி'யாய்த்தான்
இவர்கள் அறிவார்

எப்படி இது?

காக்கி அணிந்த அரக்கர்கள் கையில்
வதைபடும் மக்களைக் காப்பதற்காகத்
துப்பாக்கி உயர்த்த யார் முன்வருகிறார்?
எல்லைப்புறங்களில் மக்களைக் காப்பது
யாருடைய பணி?

'சுத்திச் சுத்திச் சுப்பற்றை கொல்லைக்குள்'
எத்தனை நாள்தான்
குண்டுவெடிப்பும், கொரில்லாத் தாக்கும்?

"சும்மா போ! நீ முட்டாள் கவிஞனே!
கேள்விகள் கேட்க இதுவா நேரம். . .'
என்று,
நின்று பதில்தரச் சிரமப்பட்டு
அடுத்த குண்டுத் தாக்குதலுக்கு
ஓடுவாயானால்,
அதற்கடுத்த வெடிகுண்டுத் தாக்குதலுக்குத்
தயாராவதற் கிடையில்
மறுபடி இதனை நான் சொல்ல நேரும்

மக்களைப் பிரிந்த துப்பாக்கிகளுக்கு
அவை,
ஏ. கே. 47 ஆயினும்கூட
ஏது அர்த்தம்?

புலி பாய்ந்த கல் எனும் ஊர் கிழக்கு மாகாணம், கிரான் எனும் இடத்திலிருந்து வடமுனைக்குச் செல்லும் வழியில் உள்ளது.

காற்றில் எழுதுதல்

எண்ணிக் கொஞ்ச வார்த்தைகள்
அவற்றிடையே மிகப்பெரிய மௌனம்
உறைந்திருந்தது.
என் இதழ் நுனிகளிலும்
உன் முலை ஓரத்திலும்
ஈரம் உலரும் முன்பாக
ஒரு பகலின் பின்பாதி
உன்னோடு போயிற்று

சித்திரையில்
முள்முருக்குச் சிவப்பாகிறது
அதன் உச்சிக் கொம்புகளில்
இலை இல்லை.
அங்கு,
குந்த வரும் குருவிகளோ
கொடி உயரம் போகிறது
துணை பிரிந்து

பிரிய சகி
'இரண்டு சிட்டுக் குருவிகளை
அனுப்பு' என்கிறாய்
மூக்கு நுனியில் வைக்கோல் மடலைச்
செருகிக் கொண்டு
ஆண் பறவை கூடு கட்டப்

போய்விட்டது.
பெண் பறவையோவெனில்
விறாந்தைச் சுவரின் நிலைக்கண்ணாடியோடு
போர் புரியத் துவங்கிவிட்டது
எப்படி இவற்றை நான்
உன்னிடம் அனுப்ப?

வண்ணத்துப் பூச்சிகளிலோ
எனக்கு நம்பிக்கை இல்லை.
ஒரு நடுப்பகல் நேர
அந்தரப் புணர்ச்சியிலேயே
வீரியமிழந்து போய்
மல்லிகைக் கொடியோர
மெல்லிய நிழலில்
காற்று அதிர,
இறகுகளை உதைத்துக்கொண்டு
மூச்சு விடுகின்றன.

என் சோகத்தின் பாரத்தை
அவை எவ்வாறு ஏந்திப்
பறக்க முடியும்?

உனது வீடு தூரமில்லை
நேரில் வருவதே நான் விரும்புவது
ஆனால், பார்
கண்களுக்குத் தெரியா வலை
காலங் காலமாய்
நெருப்பைக் காலின் கீழ்
மிதித்து வைத்துள்ள
இரும்புப் பாறை
உருகும் வரையில்
உள்ள காத்திருப்பில்
ஏது அர்த்தம்?

பொய்கைக் கரை ஓரப்
பூவரசு நீழலிலே
உன் வீடும் இல்லை;
என் வீடும் இல்லை;
நம் வீடு!

கோடை வயல்

வரம்புகள் நீளம் போகும்
வயல்களை ஊடறுத்து

சணல் மரம் வரம்பு மேவ
வயல்களோ மஞ்சள் பூக்கள்
கோவிலின் குளத்து மேட்டில்
ஆடு போய்ப் புல்லு மேயும்
அகட்டிய கிளைகளோடு மருது
அதன் கிளைகளுள் ஒன்றில் ஏணை

குழந்தையின் அழுகை கேட்கும்

நடுகையை நடுவில் விட்டுக்
குழந்தைக்கு முலை திறந்தாள்

வெற்றிலை போட்ட வாயில்
குருதியின் சிவப்பு மின்ன

வயலுக்கு மீண்டாள்; மீண்டும்
குழந்தையின் அழுகை கேட்கும்.

அம்மா அழாதே

அம்மா அழாதே
நமது துயரைச் சுமக்க மலைகள் இல்லை
உனது கண்ணீர் கரையவும்
ஆறுகள் இல்லை.

தோளிலே தாங்கிய குழந்தையை
உன்னிடம் தந்ததும்
வெடித்தது துவக்கு.

புழுதியில் விழுந்த உன் தாலியின்மீது
குருதி படிந்தது.

சிதறிய குண்டின் அனல் வெப்பத்தில்
உன் வண்ணக்கனவுகள் உலர்ந்தன.

நின் காற்சிலம்பிடை இருந்து தெறித்தது
முத்துக்கள் அல்ல,
மணிகளும் அல்ல
குருதி என்பதை உணர்கிற பாண்டியன்
இங்கு இல்லை.

துயிலா இரவுகளில்
'அப்பா' என்று அலறித் துடிக்கிற
சின்ன மழலைக்கு
என்னதான் சொல்வாய்?

உலவித் திரிந்து நிலவைக் காட்டி
மார்பில் தாங்கி
'அப்பா கடவுளிடம் போனார்'
என்று சொல்லாதே

துயரம் தொடர்ந்த வகையைச் சொல்
குருதி படிந்த கதையைச் சொல்
கொடுமைகள் அழியப்
போரிடச் சொல்.

உயிர்ப்பு

நடு இரவு;
நிமிர்ந்து நிற்கவும்
நெளிந்து படுக்கவும்
இடமற்ற என்
20ஆம் இலக்கக் கூண்டின்
கம்பிகள் திடீரென அதிரும்

'இலக்கம் இருபது
இலக்கம் இருபது
எழும்படா நாயே
எழும்பு.
எழும்பு. . .'

'சமர சிங்ஹ, இந்தக்
கதவைத் திற!'

எழும்ப இயலாமல்
துவளும் உடலில்
விழுகிறது உதை,
என்ன அது?
எஸ் – லோன் பைப்பா?
இரும்புக் கழியா?
குண்டாந் தடியா?
தலைக்குள் மின்னல்கள் சிதற
நிலைகுலைந்து தூங்கும்
என் உலகத்திலிருந்து
சிறிது விழிப்பு;
சிறிது மயக்கம்;

இதனைத் தொடர்வது மரணமா?

இருள் படர்ந்து வரும்
என் கண்களின்மீது
ஒரு மிருகப் பிறவி
வெளிச்சம் பிடிக்கிறான்.
எனது உறுதியும் உயிரும்
இன்னும் உள்ளது
இருண்ட சித்திரவதைக் கூடத்தின்
கதவுகள்மீது

இரும்பென அவற்றின்
எதிரொலி கேட்கும்.

அன்புள்ள நண்பனே
ஜூலிஸ் ஃபூஸிக்,
சிறைக்குறிப்புகள் எழுதவும்
எனக்கு விரல்களில்லை
நீ கடந்த காலத்திற்குரியவன்.
நானோ இன்றைய நிகழ்வின் நாயகன்.

துயரம் நமது இறகுகளைப்
பலப்படுத்திற்று
கோபம் நமக்கு வலிமை
சேர்த்தது.

என்னை இழுத்துச் செல்கிறார்கள்
படிகள்
மேலிருந்து கீழாக
ஒன்று,
இரண்டு,
மூன்று. . .
சீமெந்து நிலம் முடிகிறது
'அந்த' அறையைக் கடக்கிறோம்
இரத்த வெடிலும்
அவலக் குரலும்
தீயில் எரிந்த தசையும்
மூலைகளுக்குள் தோழர்களும்
சுருண்டு கிடந்த
'அந்த' அறையைக் கடக்கிறோம்.

அடுத்தது மரணம்.
சொல்லாமல் செய்வர் பெரியர்;
சொல்லாமல் கொல்வான் கொடியன்
என்னிடம் பெற முடியாத ரகசியங்களுக்காக
என்னைப் புதைக்கப் போகிறார்கள்.

அவர்களுக்குக் கவலைப்பட
ஒன்றுமேயில்லை
தூங்குவது
சாப்பிடுவது
சிரிப்பது போல
அவர்களுக்கு மிகவும் இயல்பாய்ப்
பழகிப்போன காரியம் இது.

கொல்வது
புதைப்பது அல்லது எரிப்பது
நல்லது
கடவுளே நல்லது
எனக்கு விடுதலை
பாதி பிடுங்கப்பட்ட என் கண்களுக்கு
விடுதலை
துயரத்திலிருந்து அவலத்திலிருந்து
உயிர்வாழும் நம்பிக்கையிலிருந்து
பிரயோகிக்க முடியாத கோபத்திலிருந்து
எனக்கு விடுதலை.

நல்லது கடவுளே நல்லது
நீர் அப்படியே இரும்
கைகளைக் கட்டி
புன்னகை புரிந்து
அடிக்கடி புணர்ந்து
மலர்களைச் சுமந்து
அப்படியே இரும்.

என்னைக் கொல்லப் போகும்
இயந்திரத் துவக்கின் ஒலியே
ஒலியின் எதிரொலியே
அவளுக்குச் சொல்லு
நம்பிக்கை தரும் சொற்கள்
பஞ்சாங்கத்தில் இல்லை என்று

எப்போதாவது அவன்
திரும்பி வருவான் என்று
கிணற்றடி வைரவருக்கு
இப்போதும் செவ்விரத்தம்பூக்கள்
வைக்கிற
என் அம்மாவுக்குச் சொல்லு.

நான் இப்போது இறந்தேன்
என் குருதி உறைந்த
இம் மண்ணில் இருந்து
நாளை நான் உயிர்ப்பேன்
மூன்று நாள் என்பது அதிகபட்சம்
எனது புதைகுழியின்மீது
முதலாவது புல் முளைவிடுமுன்பு
நான் உயிர்ப்பேன்.

சிறைகளின் பாடல்

சிறைகள் பாடின.

இரவுக்கு நிலவில்லை.
நிலவுக்கு ஒளியில்லை.
ஒளியையும் கருங்கற் சுவர்கள்
முறிக்கின்றன.

வதைகூட அறைகளுக்குள்,
பாடல் இல்லை.
ஒலி மட்டும் தனித்து அலைகிறது.
ஒலி, எதிரொலி, ஒலி எனத்
தெறித்து
முறிந்து
சிதறிப் பரவும் ஒலி
எதிரொலி.

இரும்பின் கரங்களும்
நொருங்கித் தகரச்
சிறையிருளில்
உயிர்த்திரி உருக எழுகிறது
தீபம்.

வீழ்ந்தவர்கள் விதையாகி
விதை முளைத்து மரமாகி
விழுது விட
வரலாறு கண்மலரும்.

அகாதத்திலிருந்து வரும்
ஒரு செய்திக்காகக்
கூண்டுகளுக்குள் அவர்கள்
இன்னும் காத்திருக்கிறார்கள்.

விடுதலை.

எழுதப்படாமலே போயிருக்க வேண்டிய கவிதை

சவப்பெட்டிகளைத் திறந்து வையுங்கள்

நெடுமரப் பெருநிழல்கள்
ஒடுங்கி,
சோகமாகப்
புற்களின் மேல் விழுந்திருக்கிற
இந்த நிலத்தில்
காற்று எப்போதும் போல
விட்டு விட்டு வீசிக்கொண்டிருக்கிற
நேரத்தில்
இன்னும் நிறைவேறாத ஆசைகளும்
இலட்சியங்களும்
அறுந்து
துயர இழைகளில் ஆடிக்கொண்டிருக்கும்
ஆறடி நீளம் இரண்டடி அகலம்
என ஒரு வெளியில்

அந்த இரு
சவப்பெட்டிகளைத் திறந்து வையுங்கள்
கொஞ்ச நேரமாவது.
புதிய ஆடைகள் வேண்டாம்
அகதி முகாம்களில்
மாற்றுடையின்றித்
தோய்த்த ஆடை
உலரும் வரைக்கும்
மறைப்பினுள் நிற்கும்
நம் பெண்களை நினைப்போம்

குருதி படிந்த அங்கிகளைச்
சற்றே தளர்த்தி
ரணங்களைத் தெரிய விடுவோம்
மெல்லிய வெயில்
இலைகளுக்கூடாகப் பூக்களாய்
அவற்றின் மேல் உதிரட்டும்
காற்று வந்து
தடவிச் செல்லட்டும்
தலை சிதறிக்

குருதி நிலம் தெறிக்கக்
கொலை நடந்த இடத்தில்
குருதியில் ஊறிய
சுலோக அட்டை கிடந்ததை
மறுபடியும் அனைவரும் நினைப்போம்

ஒரு வகையில்,
இந்த உடல்கள் அதிர்ஷ்டம் உள்ளவை
சவப்பெட்டி;
ரப்பர் வாசனையின்றி எரிய
விறகுகள்;
சுற்றி அழச் சுற்றம்;
கண்ணீர் அஞ்சலி;
கவிதை வரியில் துண்டுப்
பிரசுரம்.

பெட்டியில் அடங்கும்
வாய்ப்பே அற்று

மயான மூலையில்
முகமறியா இருளில்
முகமிழந்து புதைந்த உடல்களை,
பாதி எரிந்து
மீதி அழிந்து
சிதைந்த உடல்களைச்
சுதந்திரத்திற்காய்ச்
களத்திலிறங்கிச்
சுதந்திரம் இழந்தவர்களை
நாம் நினையாதிருந்தால்
மிகவும் கொடிது
இது எதிரியின் வேலையல்ல
எம்மவர் கொலைக்கரம்
பதித்த சுவடுகள்

கறை படியாக் கரங்களெனத்
திக்கெட்டும் பறையறைந்து
கவி சொன்ன
என் வாய்க்குச்
செருப்படி!

நியாயப் படுத்தத் துண்டுப் பிரசுரம்
போலித்தராசு
நீலிக்கண்ணீர்

உதவாது தோழரே,

நமது தேவை :
ஒரு தேசத்தின்
அரசியல் தற்கொலை இதுவென அறியார்
கரங்களில் உயரும்
கருவிகளைப் பறிக்கும்
ஒரு மக்கள் குரல்;

அராஜகத்தின் வேருக்கு
ஒரு கண்ணிவெடி.

21 மே 1986

நடு இரவில் வீடு எரிகிறது
நீ பார்த்துக் கொண்டிருக்கும் போதே
உனது மனைவியைக்
கத்தியால் குத்துகிறார்கள்
குண்டுவீச்சு விமானங்கள்
நிலைக்குத்தாய் வீழ்ந்து கிளம்புகையில்
சூரிய ஒளி பட்டுத் தெறிக்கக்
குண்டுகள் வீழ்கின்றன
எல்லாத் திசைகளிலும்
குழந்தைகள் அழுகிறார்கள்
பதுங்குகுழிக்குள் இறங்குகிற அவசரத்தில்
விழுந்து உடைந்த மூக்குக்கண்ணாடியைப் பற்றியே
அம்மம்மா இப்போதும் முணுமுணுக்கிறாள்
என்னிடமிருந்து இரத்தம்
பெற்றுக் கொள்வதற்கில்லை என்று
பணிவுடன் சொல்கிறார்
இரத்த வங்கிப் பொறுப்பாளர்
சினேகபூர்வமான துப்பாக்கிச் சண்டையில்
காணாமல் போனவனைத் தேடிக்கொண்டுபோன
நண்பனைத் தேடிக்கொண்டிருக்கிறேன்
ஜனநாயகப் புரட்சியா சோசலிசப் புரட்சியா
என்று தர்க்கித்துக் கொண்டிருந்தவர்களில் சிலர்
பீரங்கிக் குண்டுபட்டுச் செத்துப் போகிறார்கள்
இரண்டு விமானத் தாக்குதல்களுக்கும்
இருபத்தேழு ஹெலிகொப்டர் தாக்குதல்களுக்கும்
தப்பிப் பிழைத்து
ஒரு குட்டி நாயுடன் மோதிக்
கணுக்கால் உடைந்து
கட்டிலில் கிடந்தபோது
"ஸென் புத்தமும் மோட்டார் சைக்கிள்
ஓட்டும் கலையும்" என்ற புத்தகத்தைக்
கொண்டுவருகிறார்
ஒரு "இன்ரலெக்சுவல்" நண்பர்

வைத்தியசாலைக் கூரையில்
செஞ்சிலுவைக் குறி
பொறித்துக்கொண்டிருந்தவரும்
ஹெலிகொப்டர் சூடுபட்டு விழுகிறார்
எனினும்
காகம் இருக்கிறது கடதாசி இருக்கிறது
கூடவே
இயந்திரத் துப்பாக்கி ஒலியும்
இப்போதும் எப்போதும் போலக்
காற்றில் இருந்து கொண்டேயிருக்கிறது.

எரிந்துகொண்டிருக்கும் நேரம்

இன்று வாய்திறவாதே
மௌனம் கொள்

இன்று மட்டும்.

நம் வாயிலிருந்து வருகிற
ஒவ்வொரு உண்மைக்கும்
ஒவ்வொரு துப்பாக்கிக் குண்டு
பரிசாகக் கிடைக்கிற
காலம் ஒன்று வருமோ?

அல்ல எனின் ஏனிந்த அவலம்?

முச்சந்தி மாமரத்தின்கீழ்
எரிந்தன உடல்கள்
எழுந்த சுவாலைகளில்
கருகின குருத்துக்கள்.

புகை;
அச்சம்; கொடுமை;
துயரம்; பீதி;
அனைத்துமே கறுப்பு;

அசுர நிறம்
துர்க்குறிகள் விரவி
இருளின் நிழல்கள் கவிய
உடல்களும் மனமும்

எரிந்துகொண்டிருக்கும்
இந்நேரம்.
குரல் ஒடுங்கிப்
பாடல் இழந்தன குயில்கள்.
மிரட்சி தெறித்த
விழிகள் நகர்த்தி
அலற மறந்தனர் சிறுவர்.

சாம்பலைக்
காற்றுக் கொண்டு போயிற்று.

எலும்புகளை
நாய் கொண்டு போயிற்று.

மனிதத்தைத்
துப்பாக்கி முனையில்
நடத்திச் சென்று
புதைகுழி விளிம்பில்
வைத்துச் சுட்டுப்
புறங்காலால்
மண்ணைத் தள்ளி
மூடிவிட்டு வந்து,
தெருவோரச் சுவரில்
குருதியறைந்து
நியாயம் சொல்கிறார்கள்,
நியாயம்!

யார் கேட்டார் உம்மிடத்தில்
நியாயத்தை?

எச்சிறு புல்லும்
எச்சிறு தளிரும்
எச்சிறு புள்ளும்
நம்பிக்கைகளின்
உயிர்மூச்சுடனேயே
மலரும்
வளரும் முதிரும்
மடியும்
என நான் அறிவேன்.

எனினும்
சாபங்கள் சூழ்ந்த
தாய்நாடு எமதெனத்
துயரில் புலம்பும்
முதியோர் சிலருக்கு
இக்கணம்,
உடல்களும் மனமும்
எரிந்துகொண்டிருக்கும்
இக்கணம்
நம்பிக்கையை
எப்படி உரைப்பேன்?

புதைகுழிகளுக்கிடையில்
பிணங்களுக்கிடையில்
குருதி படிந்த
உடைகளுக்கிடையில்

புத்திர சோகத்தில்
நெஞ்சு பிளந்த
அன்னையர் கண்ணீர்த்
துளிகளுக்கிடையில்
'துர்ப்பாக்கியம்'
தற்காலிகமானது
என்று குரலெழுப்ப
மெலிந்த உடலும்
வளர்ந்த தாடியும்
உடைந்த மனமும்
குழம்பிய தலையுமாய்
வார்த்தைகளுக்கு அலைகிறேன்
நான்.

இறுதி வார்த்தை

இன்று
மயிரிழையில் ஆடிக்கொண்டிருக்கிறது
வாழ்வு.

குருதி கொப்புளித்துப்
பிரவாகம் எடுக்கும் கண்களுடன்
மரணத்தின் படைவீரர்கள்
எந்த நேரமும் வரலாம்.

குருட்டு விசுவாசமுள்ள
முரட்டுப் போர்க்குணத்துக்கும்
முரட்டு விசுவாசமுள்ள
குருட்டுப் போர்க்குணத்துக்கும்
நன்றி.

மனிதம் உருவழிகையில்
மௌனத் திரையிறக்கி
நிஷ்டை கூடுதல்
கவிஞனுக்கு அப்பாற்பட்டது.
பேசுகிற கவிஞன் ஒரு கண்ணிவெடி
பேசாதவன் பிறகு
பிரளயமாவான்.

வாழ்வு,
காற்றொரு துளியும்

கடலொரு பிடியும்
புணர்ந்து பிறந்த நுரை அல்ல
என்பதை

எல்லோரும் உணர வேண்டும்.
மேலும்
இரத்தம் எப்போதும் சிவப்பு அல்ல
உறைந்த பிறகு
கறுப்பு என்பதையும்.

நல்லவை, அல்லவை
எல்லாவற்றையும் தீயிலிடும்
ஒரு கண்மூடித்தனமான வேள்விக்கு
வேத மந்திர கோஷம் முழங்க,
எல்லா இடங்களிலிருந்தும்
வருகிறது காளான்.

நட்பும்
நேசமும்
நியாயமும்
நுழைய முடியாமல்
உறைந்த பருத்தி ஆடைகளுக்குள்ளும்
தடித்த முதலைத் தோலுக்குள்ளும்
இருண்டு கிடக்கின்ற
இதயத்தின் அறைகளுக்குள்
எங்காவது ஒரு மூலைக்கு

எரியும் என் சிதை
ஒரு சிறு வெளிச்சம் தரட்டும்.

அந்த வெளிச்சத்திலிருந்து
ஒரு பாடல் பிறக்கும்.

வீரம் விளைந்து சிந்தப்படாத
இரத்தத்தின் கறை படிந்த
கரங்களால்
குழந்தைகளை, கவிதைகளை
மலர்களைத் தொடாமல் . . .

29 ஜூலை 1987

பெங்களூரில்
ராஜீவும் ஜே. ஆரும் சந்தித்துக்
கொண்டபோது
தூற்றலாக மழை பெய்துகொண்டிருந்தது
வெளியே.

நந்தி மலைகளின் மேலாக
இறங்கிய காற்று
புல்வெளியின்மீது படர்ந்து தவழ்ந்தது

அன்றும்
அலைகள் ஓங்கிய
பாக்கு நீரிணைக்கு அப்பால்
இருபது பேர் இறந்து போனார்கள்

தானியங்கித் துப்பாக்கி தொடர் வேட்டு;
கண நேரக் கொலைத்
தீர்ப்பு;
எரிப்பு
தெருவுக்குச் சாம்பல்
குழந்தைகளின் கனவுகளுக்கு
இரத்தம்.

ஆக
இப்போதைய எண்ணிக்கை
15587

கோப்பைகளிலிருந்த தேநீர்
திடீரென்று குருதியாக மாறியதை
உணராமல்
இரண்டு தலைவர்களும்
கண்காணா அரசியலுக்குள்
காலம் சென்றார்கள்

மானுட எலும்புகளிலிருந்து
வனையப்பட்ட கரண்டிகளும்
மண்டையோட்டு மூலகங்களிலிருந்து
பிறந்த தட்டுக்களுமாக
உருமாற்றம் பெற்ற
சாப்பாட்டு மேசை

எல்லாத் தொலைக்காட்சிக் கண்களும்
குருடாயின.

நமக்கு அப்பாற்பட்ட சமரசம்

துயரமும் உறுதியும் வீரமும்
இதயம் உள்வாங்கி
ஆயிரமாயிரமாய் உயிர் வாங்கிக்
குருதியில் எழுதிய சரித்திரத்தின்மீது
மை பூசுகிறது
உங்கள் வர்க்க நலன்.

உங்களைச் சொல்லி என்ன?

நாமும்தான்
பொதுவுடமை லட்சியத்தைக்
குழி தோண்டிப் புதைத்துவிட்டு
புதைகுழி மேல்
எந்த வகையான கல்லறை கட்டுவது
என்பதில் விவாதம் புரிந்து
அடிபட்டுப் பிளவுற்றுக்
கொலையுண்டு நீர்த்தோம்

(அதிகார வெறி வேறு!)

மூளைக்குள் வெடிமருந்தை
அடைத்துத் திணித்துவிட்டுச்
சித்தம் குழம்பிச் சவாரி செய்தோம்
மக்கள் மேல்
விமர்சனத்தின் வீரியத்தை
விழுங்க முடியாமல்
முகம் தெரியா இருளிலெல்லாம்
கொன்று புதைத்தோமே
நம்மவரை. . .

பல்லி சொல்லைக் கேட்டுப்
பயணம் கைவிட்ட கதை
நமக்குள் பல உண்டே!

யாரொடு நோக?

கணக்கெடுக்க மறந்து
நம் காலத்தைக் கோட்டைவிட்டோம்.

தன்னுடைய வரலாற்றுச் சவப்பெட்டிக்குத்
தங்க முலாம் பூசும்
ஜே. ஆருக்குத் துணைபுரிந்த
ராஜீவ் இளவரசனுக்குத்
திரைப்படத்தில் வாள் சுழற்றி
நிஜ வாழ்வில் துருப்பிடித்த
ராமச்சந்திர வாழ்த்து!

கை தட்ட வேண்டாம்
சிரிக்கக்கூட என்ன இருக்கிறது?

சந்தோஷப் பித்தேறிச்
சாவதற்கு நமக்கென்ன
இந்திரர்கள் வந்தா
வரம் தந்து போனார்கள்?

முதல் பரிசு போனாலும்
முயற்சிக்குத் தலைசாய்த்து
ஆறுதல் பரிசு வாங்க
லொத்தர் விளையாட்டா
போராட்டம்?

உத்தேச வாய்பாட்டில்
உல்லாசக் கணக்கெழுதி
நித்தியமும் கண்மயங்க
எங்கெங்கோ இருந்தவர்கள்

இனித்தான் வருவார்கள் :

எல்லாம் முடிந்தது?
இல்லை.

சொல்லுக்குள் அடங்காத
என் சோகத்தைச்
சற்றே கேள்.

நீண்ட பயணம் எனக்
குறுங்காலத் திட்டமிட்டும்
குறுகிய பயணங்களுக்கு
நெடுங்காலத் திட்டமுமாய்க்
குழம்பிய நாள் வேண்டாம்
குழப்பிய நாள் வேண்டாம்

நில்லாமல் செல்கின்ற
வரலாற்று ஓட்டத்தின்
முனைப்பறிவோம்.

வா
சரியான கணக்கெடுப்பு
அதன் பின்னர்
புது எடுப்பு.

29.7.1987: இலங்கை - இந்திய சமாதான உடன்படிக்கை கையெழுத்தான நாள்

காதல் வரி

இலைகள் உதிர்த்து உதிர்த்து
மாரி நெடுந்துயிலிற்குத் தயாராகும்
குளிர்கால மரங்களின் மேல்
மூச்செறிகிறது
இன்னும் தலை நிமிராத நிலவு.

ஹேக் நகரின்
இச் 'சமாந்தர வீதி'யில்
273ஆம் இலக்க வீட்டின்
முன்னறை
சிறிது புதிது
சுவரில் வான் கோவின் பூமரம்.

இரவு விளக்கின் மெல்லிய ஒளி
கசிந்து
கதிரையின் முதுகின்மீது
விசிறப்பட்டுக் கிடக்கும்
மார்புக் கச்சையின்மீது படர்கிறது.

காது மடல்களின் பின்புறம்
இதழ்கள் தொட
மனம் இழைந்து
உடல் அவிழ்ந்து
பொறி கிளம்பித்
தீ பிறந்தது.
காட்டுத் தீயெனப் பற்றி எரிந்தோம்.
தணல் பறந்து
தகித்த வெப்பத்தில்
வெளியே உறைபனியும் உருகிற்று.

மொழியைக்
கண்களும் உடலும் எடுத்துக்கொண்ட
பிற்பாடு
சொற்கள் உறைந்தன.
பின்
உருகி அனுங்கலாயின
இடையிட்ட மௌனத்தின் அர்த்தப்

பிரவாகமோ
முடிவிலி வரை.

நீராய்ப் பெருகி
நதியாய் நகர்ந்து
கடலாய்ப் பரந்து செறிந்தோம்.

செயலிழந்து, உடைந்துபோன
காலைக் கடிகாரத்தின் நுண்ணிய
பகுதிகள்,
இலையுதிர் காலத்தில்
உதிர்ந்து சிதறிய சருகுகள்
இவற்றோடு வீசியெறியப்பட்டுக் கிடந்தன
புலன்கள்.

காமனின் கண்ணி வெடி
உயிர் பிளந்து உதிக்கிறது
காதல்
புதிதாக

ஒருபோது நான் நானில்லை
பெண்ணானேன்.
நீ என்னுள் நுழையப்
புலன் மயங்கிற்று
புவியீர்ப்பை எதிர்த்து
ஒரு முடிவற்ற நீர்வீழ்ச்சிதான்
நானென உணர்ந்தேன்
மறுபோது ஆணானேன்
இரவின் சங்கீதம்
நடம் புரிகிற
இரு உடல்
வெளி
எரிகிற நிலவு
இன்னும் உதிரும் சருகு.

பெருங்காற்றில் உழன்ற
மூங்கில் காடு போலக்
குழம்பிற்று கூந்தல்
விரகம் எரித்த இரவு

விடியலாய் வெளிற
காதல் தீ தணிந்து

உடல் அவிய
கண்ணிருண்டு துவண்டேன்
எனினும்
துயில் இன்றல்ல
நாளை

அதுவரை
சுழலும் உலகம் தன் அச்சில் மாறிச்
சுழல்க சுழல்க
ஒளிரும் கண்ணும் உடலும் இன்னும்
மலர்க மலர்க.

கண்களைப் பற்றி எழுதுதல்

தனிமையில் தோய்ந்த ஒரு பின்மாலை
ஆழமான சாம்பல் நிற வண்ணத்தில் சுவர்கள்
ஒரே ஒரு சித்திரம்
தலைப்பற்றது :
கொலையுண்டு கிடக்கும் மனிதன்
குண்டு துளைத்த மார்பில்
குருதியின் நிறம் கறுப்பு
கைகள் ஆகாயத்தை நோக்கி
விரிந்து கிடக்கின்றன

குழப்பகரமான ஒரு ஆரம்ப
இசைக்குப் பிறகு
'விட்டு விடாதே; இன்னும் முயற்சி செய்'
என்ற பாடல் அடங்கிய குரலில்
ஆனால்
தீர்மானமாய் ஒலிக்கிறது
வெப்பமானியில் பாதரச நிழல்
குறுகிக்கொண்டு செல்ல,
உழலும் என் வாழ்க்கைச் சுடரில்
ஒரு போது
தனிமை;
பின்மாலை
இன்னும் கொஞ்ச நேரத்தில்
இரவு வந்து விடும்
குளிர் கால இரவு
கூடவே பசியும்

இந்நேரம்
அம்மா என்ன செய்துகொண்டிருப்பாளோ?
நல்ல நிலவாயிருக்கும்
முற்றத்து மாமரத்து நிழலில்
குந்தியிருப்பார்கள் எல்லோரும்
நிலத்தில்
மல்லிகைப் பூ உதிர்ந்துகொண்டே
இருக்கும்.
குளிர் நிலத்தில் நான்.
சாம்பல் பூத்து வெளிறிய
அதிகாலையின் நிறத்தில்
ஒரு கம்பளத்தின்மீது

உறை நிலை வாழ்க்கைக் காட்சி ஒன்று
விரியும்

ஒரு வைன் கிளாஸ்
மெல்லிய பெண்ணின் சிறு மார்பகம் போல.
நாடகமும் இசையும் 88 / 89
என்ற கை நூலின் அட்டையிலிருந்து
ஊடுருவிப் பார்க்கும்
இரண்டு கண்கள்
அதன் மேல், பூச்சாடியில்
சிறு கள்ளிச் செடி

நீங்கள் எப்போதாவது
இதயத்தைத் துளைத்துச் செல்வது போலப்
பார்க்கும் இரண்டு கண்களை
ஆமாம் கண்களை மட்டும்தான்
இமைக்காது
பார்த்துக்கொண்டு
இருந்திருக்கிறீர்களா?

கண்கள் பெரியவையாக
இமையும் விழியும்
கோட்டுச் சித்திரத் தெளிவாக
அன்றி
புள்ளிகள் சிதறி, விரவிப் பரந்து
நெருங்கிக் கிடந்து உருவான
இரண்டு கண்கள்

இந்த அனுபவம்
உங்களுக்குக் கிடைக்கவில்லையா?

போகட்டும்

ஒருமுறை யோசித்துப் பாருங்கள்
ஆனால் முக்கியம்;
இந்தக் கண்களுக்கு நீங்கள்
எதையும் ஒளிக்க முடியாது
வாழ்க்கையின் சிறு மூலைகளைக்கூட

தனிமை தோய்ந்த
ஒரு பின்மாலையில்
உங்களுக்குத் துணையாக இருக்க

இப்படி இரண்டு கண்கள் போதும்
வாழ்க்கையை
அவற்றோடு பேசுங்கள்
நிதானமாக.

எப்படி விமானக் குண்டுவீச்சுக்கும் தப்பி
துடிக்கும் இதயத்துடன்
தெருவில் மறுகரைக்குப் பாய்ந்து
காதலியிடம் போக முடிந்ததென்பதை

சூழவும் உயரும்
எதிரியின் கரங்களுக்கு மத்தியில்
எப்படிச் சிரிக்க முடிந்ததென்பதைப் பற்றி
பேசுங்கள்.

பேச முடியாதவற்றை எழுதுங்கள்
எழுத முடியாதவற்றை மறுபடி
உணருங்கள்.

என்ன கண்டாய் வாழ்வில்
எனக்
கேளுங்கள்.
இன்றும் இரவும்
இவற்றைச் சொல்லாது
கண்ணாடி முன் அமர்ந்து உன் கண்களைக் கேள்.

வெளியார்

இதுதான் என்னுடைய நாடு
தென்னாசியாவின் ஒரு மூலை

உலகமே கேள்
சொர்க்கத்திலிருந்து ஒரு கூப்பிடு தொலைவில்
இருக்கிறது என்னுடைய தேசம் என்று
யாரோ சொன்னார்கள்
எப்போதோ
இப்போது
சொர்க்கத்தை இடம் மாற்றினார்களா
அல்லது என் தேசத்தை
இடம் மாற்றினார்களா
தெரியவில்லை.

சிறுபுள்ளி என் தேசம்
இச்சிறு புள்ளியில்
மலரும் பட்டிச்செடி
என் ஆத்மா
இந்தியப் பெருமர நிழலில்
சோகை பிடித்த வாழ்வு வேண்டாம்
இந்தப் பட்டிக்கு

விலகு பெருமரமே
ஒளி விழட்டும்
உன் விழுதுகளை வெட்டுகிறேன்
வழி வரட்டும்

என்னுடைய தேசம்

மனிதர்களுடைய இடத்தை
ராணுவம் எடுத்துக் கொண்டுவிட்டது.

மனிதர்களைக் காற்றும் துயரமும்
அடித்துச் சென்றுவிட்டன
அவர்களுடைய கனவுகளைக்
கண்ணீர் கரைத்துவிட்டது
அவர்களுடைய மொழியும்
இறந்துவிட்டது.

எங்கள் எல்லோருக்கும்
இப்போது பரிச்சயமான
ஒரே மொழி அழுகை

நான் பல வகையான அழுகைகளுக்குப்
பழக்கப்பட்டு விட்டேன்

எல்லாத் திசைகளையும்
தாங்கி நிற்கிறது அழுகை

அகதி முகாம்களிலிருந்து
வைத்தியசாலையின்
அறுவை சிகிச்சைப்
பிரிவின் நீண்ட விறாந்தையிலிருந்து
அந்நியப் படையின்
வதைகூட அறையிலிருந்து
மூடப்பட்ட கதவின் பின்புறமிருந்து
அம்மாவிடமிருந்து
அக்காவிடமிருந்து
குழந்தையிடமிருந்து

நான் சிரித்த காலங்களுமிருந்தன
சிரிப்பு
பெரிய சிரிப்பு
இலையுதிர் காலத்துக் காற்றைப் போல

இப்போது அழுகை
பலம் சேர்க்கிறது
சிரிப்புக்கும் கலகலப்புக்கும்
தலைமறைவு வாழ்க்கை

எங்கெங்கு காணினும்
ஹே! பராசக்தி!
அவர்கள். அவர்கள்
நேற்று வந்தவர்கள்

காலடி ஒவ்வோரடியும்
இரும்பு உருக்கு
நெருப்பு
அழிப்பு
எரிப்பு.

நான் சிறையுண்டேன் சிதைந்தேன்
எனது கிளைகளும் இலைகளும்
மலர்களும் அழிந்தாலும்
வேரையும் வேரடி மண்ணையும்
பேணினேன்

காலங்களில் அளவற்ற நம்பிக்கை
எனக்கு
என்னைப் பார்த்துக் கைகொட்டிச் சிரிக்கும்
காந்தியின் புத்திரனே!

பொய் வீசித் திரிந்தாய்
போய் ஒழிக
பார்
கைவீசி நடப்பேன்
பூ மலர.

காத்தான்குடி

இனி நடக்கப் போவது என்ன?

ஒன்றுமில்லை

பிரார்த்தனைக் கூடத்தில்
சிதறுண்டிருக்கும் உடல்களின் மேல்
அவற்றிடை
ஒரு இராட்சதக் கொலைக்கரம்
உருக்கிய குருதிச் சேற்றில்
அந்தகாரத்தில் ஒலித்துக்கொண்டிருக்கும்
அலறலில்
அசைவிழக்கிறது காலம்

தமிழன் என்னும்
என் அடையாளக் கூறின் மேல்
வெட்கம்
இருள் விரவிப் படிகிறது

'என்னைக் கொல்லாதே'
என்று ஈரக் கண்களுடன் இரந்த
ஈழத்தின் மனச்சாட்சியையும்
கொன்றார்கள்.

சித்தார்த்தனுடைய இரவுகள் – 1

கடற்கரையில்
ஒரு புல்வெளியின் மடியில்
மொழியின் வெளியில் இரவின் திரியில்
விரகக் கனலில் கண்விழித்தெழுகிறோம்
வைகாசி விசாகத்துத் தலைகீழ் நிலவில்
ஆயிரம் நதிகள் கூடும்
ஒரு சாகரத்தின் அடர்ந்த கனவு
எங்களைப் போர்த்தியிருக்கிறது
இயற்கையின் திரைகள் இறக்கி
எங்கள் வெற்றுடலின் வண்ணங்களை
மூடுகிறது பூமி
இலைகளற்றுக் காற்றில் அலையெறியும்
நூறாயிரம் மரக்கிளைகளோடு எழுகிற உன் விரல்கள்
என்னில் படிகின்றன
தாமிரம் இழைத்து
குறுகத்தறித்த உன் ஈரக்கூந்தலில் ஓர்
வெள்ளலரிப் பூ
சூடச் சூட வீழ்கிறது
வீழும் கணத்திலும் ஒளிர்கிறது

ஆண்டுகள் முன்பு
ஊரில்
ஒரு மார்கழிக் காலையில்
இன்னும் உலராத பின்னல் நெளியாத
மழைக் கூந்தலின் கொத்து மல்லிகையிலிருந்து
எடுத்த அடியிலும்
தொடர்ந்த நடையிலும்
உதிரும் நீர்த்துளி
உணர்வுச் சுழிப்பை உலுக்கிய காலங்கள்
போயிற்றோ எம்பாவாய்?

'காமம் செப்பிக் கண்டதும் கேட்டதும்
உண்டதும் மீட்டதும் கலவியின் ஒரு வழி;
காதலில் கிளர்ந்தும் கடமையைப் புணர்ந்து
கடலில் கரைவது இன்னொரு வழி
என்று
சந்தி பிரித்துக் குழம்பித் துடிப்பதை நிறுத்து
கைப்பிடிக்குள் சுருக்காதே காலத்தை
நேசிப்பு ஒன்றே நிறைவின் குறி'

என அறிவுச்சுடர் கொளுத்தி
என் இதயத்தைக் கருக்கினாய்
உருகினேன்; எரிந்தாய்; உறங்கினோம்.
விடிகிறது
கனவுகளும் கண்ணீரும் மிதக்காத விழிகளுடன்
பிரிந்து செல்கிறாய்
உலகத் தெருக்களின் இடைவெட்டுகளில்
இன்னொரு முறை சந்திப்போமா என்பது
நிச்சயமற்றது
ஆசையும் அறிவும் ஒன்றாய் மினுங்கும்
உன் கண்களையும் இன்னொரு முறை
காணுதல் அரிது
நிச்சயமற்ற எண்ணற்ற விசயங்களைப் போல
மையம் சிதைந்த முகில் கூட்டங்களைப் போல
கோடையில் உலர்ந்த பெரும் தெருவில்
வெப்பக் காற்றில்
உலையும் கடதாசியின் வாழ்க்கையைப் போல
இதுவும் நிச்சயமற்றுப் போயிற்று.

சித்தார்த்தனுடைய இரவுகள் – 2

ஆதியிலே அந்த வார்த்தை இருந்தது
அது முதலாவது மனிதர்களின் கண்ணீரோடும்
களங்கப்படாத காற்றோடும்
பூரிப்பில் கிறங்கிய பழங்காலக் காடுகளோடும்
இருந்தது

காலத்தின் முற்றுப் பெறாத
முன்னோக்கிய பயணத்தோடு
அந்த வார்த்தை என்னை வந்தடைந்த போது
நம் அடையாளங்கள் மாறிவிட்டிருந்தன

அந்த வார்த்தையை என்னோடு
தங்க வைத்துக் கொள்ளவே விரும்பினேன்
எப்போதோ சந்தித்துக் கொண்ட
ஞாபகத்தை மட்டுமே நினைவுகூர்ந்து
ஒரு மின்வெட்டு முறுவலுடன்
என்னைவிட்டுத் தடம் பிரிந்து செல்கிறது
வார்த்தை

இன்றைய இரவின் சோகம் முழுவதையும்
அந்த வார்த்தையிடம் எழுப்பலாம்
என்று நினைத்திருந்தேன்
முடியவில்லை
இதுவரை எழுதப்படாத அனுபவங்களைப் பற்றிக்
கொஞ்சநேரம் கதைக்கலாம் என்றிருந்தேன்
முடியவில்லை

இரவுப்பூச்சியின் இறக்கைகள்
தீயில் விழுந்துவிட்டன
என்னிடம் வார்த்தைகளில்லை
நீடித்த மௌனத்திலும்
கண்ணீர்த் துளியிலும்
உயர்ந்த மலைகளும் சிலிர்க்கும்
இடையறாத பெருமூச்சுக்களிலும்
வெறித்த பார்வையிலும் மட்டுமே
விரிந்து கிடந்த துயர்
இப்போது
என் அறை முழுவதும் பெருகுகிறது
துணை காணாத மரம் இரவின் காற்றில் சுழல்கிறது

வானத்தின் மூலையில் வீசி எறியப்பட்டுக் கிடக்கிறது
பிறை
தொலைதூரத்துப் புல்லாங்குழலிசையில்
அதிர்கிறது உடல்

இது பனி தீராத இரவு
குழம்பிக் கிடக்கிறது போர்வை
யன்னலருகே எப்போதும் போல
ஒரு சிறு காற்று
ஏழு கடல்களுக்கு அப்பால்
உன்னுடைய நிலத்தில்
இப்போது விடிந்து கொண்டிருக்கும்.

எனக்கோ இது இரவு
எனக்கான இரவு
என்னுடைய இரவு

இந்த நள்ளிரவில்
மரணத்தின் தேவதைகள் சூழப்
படுத்திருக்கிறபோது
எதை எழுத முடியும் என்று தெரியவில்லை

மேசை விளக்கின் கீழ்
வெள்ளைத் தாள்களிலும்
குப்புற வீழ்ந்திருக்கும் புத்தகங்களிலும்
இன்னும் திறக்கப்படாத கடிதங்களிலும்
அடிக்கடி அலறும் தொலைபேசியிலும்
வகுப்பறைச் சுவர்களின் வெறுமையிலும்
சிறையுண்டு போயுள்ளன
என்னுடைய வார்த்தைகள்

எப்போது என் உலகம்
ஒளிரும் நாளோ
அப்போதே என் எழுத்தும்
உயிர்க்கும் நாளாம்

இரு
வருவேன்
வாழ்வெழுத.

சித்தார்த்தனுடைய இரவுகள் - 3

குறிஞ்சியும் நெய்தலும்
மயங்கும் மருங்கில்
உறவு படர்கிறது

என் உடலில் அலையும்
உன் கைகளின் வெள்ளிக் காப்புகள்
எழுப்பும் அலையோசையில் கமழ்கிறது
கைதைப்பூ

கடலோரம் காற்று ஈரம்

துகிலும் துயிலும் துறந்த கணங்கள்
மெல்லக் கரைந்து போக
இந்த அரை விழிப்பிலும்
உடல் எரிகிறது

நான் எப்பொழுதும் விரிந்த கடல்
நீ இப்பொழுது இறங்கும் ஆறு
பரல் கற்களும் பெயரும் பிரவாகம்
பால் வீதியின் புயல்

ஆழமான ஒரு முத்தத்திற்கும்
மறு முத்தத்திற்குமான ஒரு மணித்துளி இடைவெளியில்

வெப்பத்தில் வெடித்த உதடுகளின்மீது
விழுகிறது ஒரு கண்ணீர்த்துளி
அந்தக் கண்ணீர்த்துளியில்
கடந்த காலமும் எதிர்காலமும் உருவழிந்து போகின்றன
நிகழ்காலம் மணலில் எழுப்பிய
வீடுகளின் சாளரங்களூடாக
வெயிலின் கோலங்கள்.

பிரிதல் நெருக்கமுறப்
பேச்சிழந்தோம் இன்று

‘பாடுகிறது ஒரு பாதி;
பிரிவை உள்வாங்கிக் காத்திருக்கு
மறுபாதி’
என்றாய்
பேரிளம் பெண்களின் காதலனாகவே
கழிந்த இவ்வாழ்வில்
தாகமும் மோகமும் போகமும் அறிந்தேன்.
புரிதலும் திரிதலும் பிரிதலும் உணர்ந்தேன்
கனவிலும் காற்றிலும் வெளியிலும் உறைந்தேன்
அறிவும் உணர்வும் திசைகெடப் புரியுமோர்
காலக் கயிறிழுப்பில்
சித்தம் கலங்கினேன்

நான் தரையில் வாழும் பறவை அல்ல
நான் உனக்கும் அல்ல.

கேள்வி

நிலவு கிழிந்து தூங்குகிறது
வேலியில்
நள் யாமம்;
உதிர்ந்து கொண்டிருக்கும் இலைகளின் மேல்
நடந்து திரிகின்றனர்
உயிர் திருகும் எமதூதர்.

அடிவளவின் கிணற்றுக்குள்
காலம் காலமாய்ப் புதையுண்டு கிடந்த
பூதங்களும்
இப்போது சிலிர்த்துக்கொண்டு
கிளம்புகின்றன.

துயிலில் தொலையாது
துயரில் கரையும் இன்றைய இரவில்
இதயத்தைப் பிடுங்கி
மேசைமீது வைத்துவிடுகிறேன்
குருதி சொட்டச் சொட்டப்
பெருகும் அதன் ஒலிக் குமுறலில்
கொஞ்ச நேரம் நடுங்குகிறது மேசை.

வெளியுலகின் காற்று வாங்கிக்
குளிர்ந்து போய்விடுகிறது இதயம்

அப்போது
விட்ட இடத்திலிருந்து என்னுடைய
கவிதையைத் தொடங்குகிறேன்

இன்றையைப் போல
என்றைக்கும் ஒரு கவிதைக்காக
நான் உழன்றது கிடையாது
வெளியில்
நெடுநாளாய் அலைந்தது இக் கவிதை

அதனுடைய ஆரம்பமே
ஒரு கேள்விதான்
கொல்லப்பட்ட நண்பர்களைப் பற்றி
காணாமல் போன நண்பர்களைப் பற்றிய
ஒரு பெரிய கேள்வி அது

கேள்வியில் பிறப்பெடுத்த
இந்தக் கவிதை
திடீரென்று என்னைவிட்டுப் பிரிந்துசெல்கிறது
நெய்யப்படாத வார்த்தைகளுடன்
அறிவால் நெறிப்படுத்தப் படாத
மிகையுணர்ச்சியும் சேர்ந்து
பிரவாகம் எடுக்க
இந்தக் கவிதை பிரிந்து செல்கிறது

பௌர்ணமி நிலவிலும்
ஒளி தோயாமல் இருளில் கிடக்கிற
அந்த மாடி வீட்டைச் சுற்றி வருகிறது
இறுகப் பூட்டப்பட்டிருக்கும்
அதனுடைய பழங்காலக் கதவின்மீது
மூர்க்கமாக மோதுகிறது
இறுகிய யன்னல்களுக்கு அருகே சென்று
உன்னிப்பாகக் கேட்கிறது

வெளிச் சுவரில் தெறித்திருக்கும்
குருதிச் சுவட்டருகில் நின்று உருகிறது
வீட்டின் வெளிப்புறம்
ஓங்கிய மரங்களில்
இன்னும் ஒட்டிக்கொண்டிருக்கும்
அவலக் குரல்களில் தேடுகிறது
இரவுகளில்
கடற்கரையில் காலடிச் சுவடுகளைப்
பின்தொடர்ந்து செல்கிறது
தாழம் புதர்களுள் ஒளிந்திருந்து
குருதியில் நனைகிறது

அலைகளுக்கு மேல் அலைகிறது
அவை புரட்டிவிடும் உடல்களைத்
திருப்பித் திருப்பித் தேடுகிறது
கண்கள் இல்லா உடல்களுக்குக்
கண்களையும்
முகம் சிதைந்த உடல்களுக்கு
முகங்களையும் தேடிச் சினக்கிறது

தெருவில் வீசப்பட்டுள்ள
ஒற்றைச் செருப்பின்மீது
வீட்டுப் படிகளில் வீசியெறியப்பட்ட

மூக்குக் கண்ணாடிமீது
தெரு முனையில் புரட்டி விடப்பட்ட
மோட்டார் சைக்கிளின்மீது
தயங்கித் தயங்கி நிற்கிறது

தகப்பன் தொலைந்த பிறகு
பிறந்த குழந்தைகளின்
பளிங்கு போன்ற விழிகளில்
எதிரொலிப்பது என்ன என்று தெரியாமல்
குழம்புகிறது
தாய்மாரின் கண்ணீர்த் துளிகளை
ஏந்திக்கொண்டு செல்கையில்
தலை குப்புற வீழ்கிறது

தூக்கு மரங்களின் கீழ்
புதைகுழிகளின் மேல்
முகாம்களின் கோடிப்புறங்களில்
மேசைமீது இப்போதும்
அப்போது போலவே கிடக்கும்
மூடப்படாத பேனையருகில்
முற்றுப் பெறாத கடித வரிகளில்

சுவரில் தூங்கும் படங்களில்
அறையில் சிந்தியிருக்கும் ஆடைகளில்
பூவாத பூவரசுகளில்
ஈரப் பனையில்
ஓரக் கூந்தலின் ஒற்றை மலரில்

நின்று பம்பரம் போலச் சுழல்கிறது

காற்றிலும் வெளியிலும்
மூடப்பட்ட எல்லா இரும்புக் கதவுகளிலும்
புகை கசியும் எல்லாத் துப்பாக்கிகளிலும்
அறைந்து கேட்கிறது
எங்கள் குழந்தைகளுக்கு என்ன நடந்தது?

தொலைபுலத்துறவு - 1

நூறு நட்சத்திரங்களுக்கு அப்பால்
உன் பெருவெளி
அங்கு ஊற்றெடுக்கும் ஆறுகள்
இடைவழியில்
பேரண்ட வெளியில் உறைந்து போக
எண்ணற்ற நிலவுப் பிழம்புகள்
தொடர்ந்தும் கிளம்பி
அந்தரத்தில் தூங்குகின்றன

என் சிறு நிலத்தின்
தென்னை மரங்கள்
நெடுத்து நெடுத்து வளர்ந்து வளர்ந்து
அங்கு வருகின்றன

என் சிறு வேலியின்
முல்லைக் கொடியும்
படர்ந்து படர்ந்து
ஒரு முடிவற்ற தேடலில் முனைப்புற்றுள்ளது

பிரிவுத் துயரில் எரியும் பொழுதில்
உயிரைத் திருகும்
ஒளி ஆண்டுகளுக்கு அப்பால்
சூரிய வெளிக்குள் நீ
பூமிப் பந்தின் வேகச்சுழலுள் நான்
காலத்துக்கும் அகாலத்துக்குமிடையே
நம் உறவு.

தொலைபுலத்துறவு - 2

நிலவு தங்கமாய் ஒளிருமா?
கூதலுக்குச் சிவப்புக் கிரணங்கள் உண்டா?
சூரியனை விழுங்கிவிட்டதா மழைத்துளி?

இன்னும் பெயரிடப்படாத
அல்ப்ஸ் மலைத் தொடரின்
இரண்டு முடிகளுக்கிடையில்
பனிப்புகார் பெருகும் வெளியில்
இப்போது உறைந்திருக்கின்றன
என் வார்த்தைகளும்
புதிய கேள்விகளும்

கோடையில்
பெருகும் அவை நீர்க்கோலமாக.
பெருகி
மலைமுடியிலிருந்து இறங்கி
பாறைகளைக் கடந்து
உயர்ந்த சீடார் மரங்களூடாகத் தவழ்ந்து
கரையுடைத்துப் பாலங்களை மேவி
உன்னிடம் வரும்

பெற்றுக் கொள்.

முடியிழந்து இலையுதிர்த்துச்
சூரியனுக்கு ஏங்கும்

நெடிய மரத்தின் கீழ்
நீ தனித்து நிற்கிற போது
உன்னைச் சூழப் பரவுமே
குளிர்காலத்தின் புல்லாங்குழலிசை

அப்போது

வெண்ணிற இரவுகளில்
துயிலைத் தொலைக்கும் சிவப்பு மதுவை
என் வார்த்தைகளின்மீது ஊற்று
பேசும் அவை

உறைபனியிலும் பதிகிறது
காலத்தின் சுவடு
உதிரும் இலைகளில் கரைந்தது
முன்னைய உயிர்ப்பற்ற காதல்

தொலைபுலத்துறவிலும்
ஈரக் காற்றிலும் எரியும் என் மூச்சு
இன்று.

கேட்டாயா?

ராஜினி

இன்னும் கொஞ்ச நேரத்தில்
சூரியன் மறைந்துவிடுவான்

இருள் கவிந்துவிடும்

இனி வரப் போகிற இருள்
முன்பு போல அல்ல
பிசாசு

நிலாவைக் கொலை செய்து
வெள்ளிகளைப் போட்டெரித்த
சாம்பல் பூசிய இரவு
இந்த இரவுக்கு முன்
ஒரு சிறு கைவிளக்கை
அல்லது ஒரு மெழுகு திரியை
ஏற்றி விடவேண்டும் என்று
விரைந்தாய்

அம்மா,
வேகம் அவர்க்கதிகம் இன்று
தென் திசை நின்று வந்தனர்.
யமனின் தூதர்கள்;
கைத்துப்பாக்கி;
ஐந்து குண்டுகள்

நீ விழுந்த போது
சூரியனின் கடைசிக் கிரணங்கள்
சுவரில் விழுத்திய
உன் நிழல்
கைகளை வீசி மேலே ஓங்கிற்று.

முடிவிலி வரை.

உயிர் பிடுங்கிகளின் காலம்

‘விடுதலை’க்கு வணக்கம்
‘அமைதி’க்கு வணக்கம்
ஜனநாயகத்துக்கு வணக்கம்

மனிதத்துக்குக் கண்ணீர் அஞ்சலி
பேச்சுச் சுதந்திரத்திற்கு இரத்த அஞ்சலி
எழுத்துச் சுதந்திரத்திற்கு வீர அஞ்சலி

என் கவிதை தொடங்குகிறது

கண்ணீரிலும் இரத்தத்திலும்
கரைகிற நம் வாழ்க்கையிலிருந்து.

இருட்டு மிருகங்களுக்கு
ஒளி மனிதருக்கு
அது முன்பு

காலம் இப்போது தலைகீழாயிற்று
இருளும் ஒளியும் அரக்கர்க் காயிற்று

இருட்டிலும் கொன்று
ஒளியிலே எரித்து
காற்றிலே சிரிக்கிறார்கள்
சிரிப்பிலிருந்து சாம்பலும்
குருதியும் சிந்துகின்றன

குருதியும் சிவப்பு குருதியிலூறிய
கொடியும் சிவப்பு
என் கோபமும் சிவப்பு

உயிரை அலைக்கழிக்கும்
வெயிலில்
எல்லா ராணுவ முகாம்
வாசல்களிலும்
காத்திருக்கிறது தாய்மை
சிதைந்த கனவுகளோடும்
உலர்ந்த நம்பிக்கைகளோடும்

இராமன் இராவணன்
அனைவரும் சொல்வது;

‘இன்று போய் நாளை வா’

எரியும் இதயத்தில் எரியும்
ஈழமும்.

சுமைதாங்கி அருகில்
இன்னும் எஞ்சியிருக்கும்
மெல்லிய வெப்பத்துடன்
யாருடைய உடல் அது?

ஓ, ராணி
உன்னையுமா அம்மா?

கிழிந்த இரத்தக் கோலத்தின்
கோடுகளில்
குரூரமாக எழுகிறது ஆண்மை
அழிகிறது
பெண்மை.

போ அப்பால்
தலையிழந்த சூரியனே
முகமற்ற நிலவே
ஒளி செத்த தேசமே
உயிர் தின்ற காலமே

போ அப்பால்

தொலை புலத்திலிருந்து
‘நலமா? நாட்டு நிலமை எப்படி?’
கடிதம் வரைவர் நண்பர்.

அவர்க்கோ
இரவல் நாட்டில் அந்நிய வாழ்வு
எனக்கோ
சொந்த நாட்டில்
இரவல் இருப்பு

இரவெல்லாம் விழிப்பு.

நண்ப,

நுனி மீசை பியர் நுரையில்
நனைய
அறிக்கை விடுகிறார்கள்;

“ ‘அஜாரகம்’ ஒழிப்போம்”

நல்லது தானே.
ஜாரை எப்போதோ ஒழித்து
விட்டார்கள்.
புதிதாக ஒரு அஜார் வந்து விட்டான்
என்று நினைத்து

‘அராஜக ஒழிப்பா
அஜாரக ஒழிப்பா? எப்போதிருந்து?’
சும்மா கேட்டேன்

‘அஜாரக ஒழிப்பு!’
உறுமிய குரலில் தடித்த மறுமொழி.
‘அதென்னது அஜாரகம்?
அராஜகம் அல்லவோ சரி?’
சும்மா சொன்னேன்.

‘மனிதப் புழுவே! கிண்டலா
உனக்கு?
நீயும் அஜாரகன்
ஏறடா ட்றக்கில்...’

ஏற்றப்பட்டேன்.

தத்துவவாதியாய்த்
தாடியை நீவிப்

பாவனை பண்ணிய நாட்கள்
போய்விட்டன

‘சிலோன் ஹெலி’யில் ஏற்றித்
தலை கீழாக்கி
‘அவர்கள்’ பிடுங்கி எறிந்தது போக
மீதி எத்தனை என்று
இப்போ
மயிர் பிடுங்கி எண்ணுகிறேன்
தாடியில்.

ஆயிரமாய்
உயிர் பிடுங்கி எறியும் நாட்டில்
மயிர் பிடுங்க ஒரு கவிஞன்
இன்னும் மிச்சம்

போதாதோ?

எலும்புக்கூடுகளின் ஊர்வலம்

அவனது கனவுகள்
சாதாரணமானவை
யாழ்ப்பாண மத்தியதர வர்க்கத்துப்
பனங்கொட்டைக் கனவுகள்

பனங்கொட்டை முளைத்து வளர்ந்து
வடலி;
பின் நெடுத்துப் பெரு வடலியாய்ப்
பனையாகப்
பொறுமையாய் ஆண்டுகள்
இருபது சேரும்;
உறுதியாய் வளரும்
ஒரே மாதிரி.

அதுவரை
காத்திருத்தல் ஒரு யோகம்.

அவனும் விடிய விடியப் படிப்பு
அவன் தூங்கும்வரை
அம்மாவும் விழிப்பு
தேநீர் போடத் தட்டிக் கொடுக்க
இரவின் பிடி மீறத் துணையாக.

அம்மாவுக்கு முடியாதென்றால்
அக்கா அல்லது சின்னவள். . .

பொறுமையாய் ஆண்டுகள் சேரும்

மருத்துவம், பொறியியல், கணக்கியல்
மும்மூர்த்திகள்
இப்போ புதிதாய்க் 'கொம்பியூட்டர்'
படிப்பும்

மும்மூர்த்திகளுடன் துர்க்கா தேவியின்
புதிய எழுச்சி.

ஒரு வகையில்
பனையும் இந்தப் படிப்பும் வலியன
வல்லன வாழும் ஆளும்
அல்லன தேயும் மாளும்
டார்வினுக்கு நன்றி
இது இயற்கை விஞ்ஞானத்தோடு
போகட்டும்
சமூகத்துக்கல்ல.

ஆனால்
பனை மரங்களுக்குச் சடைக்கத்
தெரியாது
அவற்றுக்கு உயிரூட்ட
இரவும் நிலவும் காற்றும்
வேண்டும்
சில வேளைகளில் கூடவே
மெல்லிய தொனியில் சங்கீதமும்
வேண்டும்

இல்லையெனில் உலர்ந்து
போகாதோ வாழ்வு?

அவனது கனவுகள் சாதாரணமானவை
அவற்றுக்கும் சடைக்கத் தெரியாது.

ஒரு நாள்
அவனது கனவுகள் உருமாற்றம் பெற்றன

அவற்றில்
எலும்புக் கூடுகள் ஊர்வலமாகப் போயின
ஆண் எலும்புக் கூடுகள்
பெண் எலும்புக் கூடுகள்
சிறுவர் சிறுமிகளின் எலும்புக் கூடுகள்
குழந்தையைக் கையில் தாங்கிய
எலும்புக் கூடுகள்
இளைய எலும்புக் கூடுகள்
முதிய எலும்புக் கூடுகள்
கைகளற்றவையும்கூட

ஒரே திசையை நோக்கியபடி
உறைந்து போயிருந்த
அவற்றின் கட்குழிகளிலிருந்து
கண்ணீரும் இரத்தமும்
ஓடிக் கொண்டிருந்தன

ஆயிரக் கணக்கில்
அணியணியாக எலும்புக் கூடுகள் . . .
அவற்றின்மீது
வெறுப்புமிழும் விழி நிமிர்த்தித்
துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்
ராணுவத்தினர்.

ஒரு புறம்
தலைப்பாகை அணிந்திருந்த ராணுவம்
நிஜாம் பாக்கும்
கடலை எண்ணெயும்
நெய்யும்
துண்டு பீடியும் சேர்ந்து
அவலட்சணமாக மணக்கும் ராணுவத்தினர்
இன்னும்
கறுப்பு நிறத்தில் தலைக்குத்
துண்டு கட்டியிருந்தவர்களும். . .

மறு புறம்
மினுக்கிய உடையும் மிடுக்கும் மிளிர
மினுங்கும் யப்பானிய வாகனங்களில்
இருந்த ராணுவத்தினர்

இன்னொரு புறமோ
துப்பாக்கியின் திசையை
மாற்றிக்கொண்டுவிட்ட
உள்ளூர் ராணுவம்

குண்டுகள்
எலும்புக் கூடுகளைத்
துளைத்துக்கொண்டு
நீண்ட தூரம் சென்றன
செல்லத்
தொலைவிலிருந்தும் தோன்ற ஆரம்பித்தன
எலும்புக் கூடுகள்

குண்டுகளை மீறி
கவச வாகனங்களை மிதித்து
அலறி ஓட ஆரம்பித்த
ராணுவத்தினர் மீதாக
ஒவ்வொரடியாக எடுத்து வைத்து
நடந்து போயின எலும்புக் கூடுகள்
அவற்றின் அணியோ
முடிவற்றுத் தெரிகிறது பயங்கரமாக.

கனவின் இடையில் விழித்தவன்
செயின் ஆற்றங்கரையிலும்
வுப்பெற்றால் நகரத்துத்
தொங்கு பாலத்தின் கீழும்
தொறன்ரோ உறைபனித் திரளுக்கு
நடுவிலும்
துண்டுகளாக வீசப்பட்டிருப்பதை
உணர்ந்தான்

விழிப்பிலும் கேட்டுக்கொண்டிருக்கிறது
எலும்புக் கூடுகளின்
படையணி ஒலி.

புதைகுழிப் பாடல்

அவன் தனியே
அவர்களோ மூவர்
முகம் தெரியா இருள்
அவர்களுடைய மனதைப் போல

தன்னுடைய புதைகுழியைத்
தானே வெட்டும் அவலம்
நேர்ந்தபோது
அவன் என்ன உணர்ந்திருப்பான்
என்பது
வார்த்தைக்குள் அகப்படாத
குரூரம்.

அந்தப் புதைகுழியின் மேல்
காற்றில்
உறைந்து போயிருக்கின்றன
அவன் இறுதியாகச்
சொன்ன வார்த்தைகள்

காற்று அவற்றைக்
கொண்டு செல்லாது

மழையும் சூரியனும்
கிட்டவும் நெருங்கா

அவன் சொல்லாத வார்த்தைகளோ
மண்ணுட் போய்
மண்ணிலிருந்து மரத்துட் போய்
அங்கிருந்து கிளைக்கு
கிளையில் இருந்து இலைக்கு
இலையிலிருந்து காற்றில்
இடையறாமல்
அலையலையாக எழுந்துகொண்டிருக்கிறது.

அந்தப் புதைகுழியின் மேல்
பிசாசு இல்லை
தெய்வமும் இல்லை
நினைவுச் சின்னம் எனவும் ஒன்றில்லை

ஆளரவமற்ற இரவுத் தெருவின்
ஒற்றை விளக்குப் போல
உதிரியாய் ஒரு பட்டிப் பூ
அதன்மீது
காலம் தன்னுடைய கொடூர
நகங்களைப் பதித்துள்ளது.

அவனுடைய இறுதி வார்த்தைகளில்
இருந்தது
நமது தேசத்தின் உயிர்.

நவீன துப்பாக்கி அரசன்

காலை
பாடசாலை செல்லும் வழியில்
சிறைப்பட்டேன்
யுத்தத்தின் நாய்களிடம்.

புத்தகங்களை வீசி எறிந்தனர்
பேனாவை முறித்தனர்
தூரிகையை மிதித்தனர்
என் தலையையும்
மழித்தனர்.

துப்பாக்கியைப் கைகளில் தந்து
'போ! போய் விடு
தேசப் பணிபுரி; போர் செய்!'
என்றனர்.

பணிந்தேன்.
இல்லையேல்
பிணமாய்,

காய்ந்த குருதியும்
ஈயும்
இன்னும் கொஞ்சப் பேரிடமாவது
எஞ்சி இருக்கும்
இரக்கமும் பரிதாபமும் சூழத்
தெருவின் ஓரத்தே
புழுதியில் புரள்வது
விதி என உணர்வேன்.

அனைத்தும் கொடிதுதான்

இப்போது
வரையறை செய்யப்படாத
ஒரு போர்முனையில்
இரு புறமும் குழல் நீண்ட
துப்பாக்கிச் சனியனை
ஏந்துகிறேன்.

சிம்மாசனமும் சவப்பெட்டியும்

சிம்மாசனத்திலிருந்து
கீ
ழ்
இ
ற
ங்
கு
கி
ற
படிக்
கட்டுகள்
மீதாக
இ
ற
ங்
கி
வருகிற
இ
ர
த்
த
ம்
தேசத்
தின் ச
வப் பெட்
டி மீது துளி
த் துளி யாக
வீழ்கிறது
இந்தச் சவப் பெட்
ட் டியின் கடை
சி ஆணியை
யாவது அடித்
து விடாமல்
இருங்கள்
தயவுசெய்
து தயவு
செய்து . . .
செய்
து

பிசாசுக் கவிதை

இரு புறமும் துப்பாக்கி
நடுவில் நான்
அப்பாவிப் பொதுமகன்
என் பேர்.

ஊரில்லை எனக்கு,
முன்பு இருந்தது
இப்போ தொலைந்துவிட்டது.
(புண்ணிய பாரதத்துக்கு நன்றி!)

இரு புறமும் துப்பாக்கி
நடுவில் நான்
எரிகின்ற நெருப்புக்கும்
நடுவில்தான்.

அவன் 'இரு' என்றால்
இவன் 'எழும்பு' என்பான்.
இவன் 'போ' என்றால்
அவன் 'வா' என்பான்.

அவன் 'இற' என்றான்.
இவன் 'இரு' என்றான்.
அவன் உடலைக் கொன்றான்.
இவன் ஆத்மாவைக் கொன்றான்.

இப்போ நான்
பிசாசானேன்.

அறிவுஜீவியாக வளரத் துடிக்கும் ஒரு அப்பாவிப் பொது மகனின் கேள்விகள்

(எழுத்து வடிவில், மூன்று அடிக்குறிப்புகளுடன்)

மீசைக்கும் ஜனநாயகத்துக்கும்
என்ன உறவு?[1]
தாடிக்கும் புரட்சிக்கும்
என்ன தொடர்பு?[2]

கேள்வி, சிக்கலாகவும்
பொதுமைப்பட்டதாகவும் தோன்றுகிறது
இல்லையா?
சரி
கேள்வியைச் சுலபமாக்குவோம்

முதல்வர் மீசையை எடுத்ததும்
ஜனநாயகம் வந்து விடுகிறதா?
அல்லது
தலைவருக்குத் தாடி
மேலும் வளர்ந்ததும்
புரட்சி வந்து விடுகிறதா?

மனித உயிரின் விலை பூச்சியம்
ஆன பிற்பாடு

---

1. மேசையில்லா வகுப்பறையும்
மீசையில்லா ஆணும் ஒன்று
என்று சச்சி சொன்னார் அன்று
ஆண்கள் குறைந்துகொண்டே போகும் போது
மீசையைப் பற்றிப் பேசி என்ன?
பாடசாலைகள் இல்லாத போது
வகுப்பறையைப் பற்றிப் பேச என்ன இருக்கிறது?

2. தாடியிலும்
மார்க்ஸ் தாடி, லெனின் தாடி, ட்ரொட்ஸ்கி தாடி, காஸ்ட்ரோ தாடி
ஆய பல உள;
என்னது முன்னது
உன்னது எதுவோ?

யாழ்ப்பாணத்தில் வெங்காயம்
விலை குறைந்திருக்கிறது
என்று சொல்வதில் என்ன இருக்கிறது?

'யாழ்ப்பாணத்துத் தூரதர்சனில்'
தமிழ்ச் செய்தி வாசிக்கும்
அசடனின் முகத்தில்
எக்கச்சக்கமாகப் பவுடரை
அப்பியது யார்?

மற்றும்
அவனுடைய முப்பத்திரண்டு பற்களையும்
இன்னும் விட்டு வைத்திருப்பது யார்?
அதற்கு 'அறிவு பூர்வமான' காரணம் என்ன?

இந்திய சமாதானம் காக்கும் படைக்கு
(இலங்கைக்கு சமாதானம் அல்ல)
எஸ். ஜீ. கில் என்ற பிரிகேடியரை
அனுப்பியவனின் மண்டையில்
எத்தனை மயிர்கள்?

முல்லைத் தீவுக் காட்டுப் பக்கம்
மிரள மிரள விழித்துக்கொண்டு
இந்திய - பாகிஸ்தான் எல்லைப் புறத்தில்
'துலுக்கப்' பயலுடன்
சண்டை போடுவதாய்
எண்ணிக்கொண்டிருக்கும்
ஜவானின் மேல்
ஆத்திரங் கொள்வதா?
அனுதாபப்படுவதா?

இந்தியப் படை முகாமிலிருந்து
காத தூரம் வரை மணம் பரப்பும்
நெய்யில்
நம்மூர்க் கருவாடு பொரித்தால்
எப்படி இருக்கும்?[3]

புலிகள் இலங்கை அரசுடன் என்கிறார்கள்
மற்றக் குழுக்கள்
இந்திய அரசுடன் என்று சொல்கிறார்கள்

3. ஆகா, என்ன வாசனை!

இரண்டு அரசும்
'பாசிச' அரசுகள் என்று
வேறு கொஞ்சப் பேர்கள் சொல்கிறார்கள்.
நாங்கள் யாருடன் நிற்பது?

துப்பாக்கியால் பல் விளக்குவது எப்படி?
துப்பாக்கியால் துணி துவைப்பது எப்படி?
துப்பாக்கியால் சாப்பிடுவது எப்படி? என்று
ஏன் ஒருவரும் புத்தகம் எழுதவில்லை?

'நாங்கள் ஏன் கைக்குண்டு வீசினோம்?'
என்று 'அவர்கள்'
அறிக்கை விடலாம் என்றால்
என்னுடைய கண் முன்பாக
என்னுடைய வெளிநாட்டுக்
கோவணத்தை எடுத்துச்சென்ற
சமாதானப் படை வீரனைப் பற்றி
நான் ஏன் அறிக்கை விட முடியாது?

இந்தப் பாழாய்ப் போன இலங்கையை
ஆசியாக் கண்டத்தின்
ஆண்குறி மாதிரித்
துருத்திக் கொண்டிருக்கும்
புண்ணிய பாரதத்தின் தலைப்பில்
வைத்தது யார்? யார்? யார்?

இந்தக் கேள்விகளுக்கு யாருக்கேனும்
பதில் தெரிந்தால்
இந்தியாவும் இலங்கையும் அல்லாத
மூன்றாவது ஒரு நாட்டில்
அவர்களைச் சந்திக்க
நான்
தயார்! தயார்!! தயார்!!!

ஊரில் சிறையிருக்கும் நண்பருக்கு

திசைகளுக்கு அப்பால்
எல்லோரும் பிரிந்து போய்விட்ட பிற்பாடு
காடுகளை விட்டு வெளியேறுவதற்கான
கடைசி ஒற்றையடிப் பாதையையும்
புல்லும் புதர்களும்
பின்பனியும் மூடித்
தடங்களை அழித்துவிட்ட
பிற்பாடு
வாழ்க்கையும்கூடச்
சிந்தனை மூடுண்ட வெற்றிடத்துக்குள்
உலர ஆரம்பித்த
பிற்பாடு
இன்று
எங்களுடைய நிலத்தில்
மனித விடுதலையின் மூலவேர்
கோடை நெடுந்தூக்கத்துள்
ஆழ்ந்து போயுள்ளது

'அன்றே பறந்து போயிருக்கலாமே!'
என்று வெம்பிச் சினந்து
கொடிய தனிமைச் சிறையில்
உறைகிறாய்

கண்ணீர் எல்லோருக்கும்
நேசமான பொருளென்றாலும்
இப்போது அழாதே.

இணையின்றிப்
பாலை வெளியில் தனித்துப் போன
ஒற்றைப் பனைமரங்கள் அல்ல நாம்

வெறுங்காற்றில் பற்றியெரிய
இருப்பிழந்த மூங்கில் காடுகளும் அல்ல
நம் வாழ்க்கை

காலத்தைக் கேள்
சொல்லும் அது:

காத்திருப்புக்கு அப்பாலே
பூச்சூடும் புல்வெளிகள்.

மன்னிக்க வேண்டும்

மன்னிக்க வேண்டும்
நீங்கள் எதிர்பார்த்தவற்றை இன்றைக்கு
என்னுடைய பத்திரிகைச் சாளரத்தூடாக
என்னால் தரமுடியவில்லை

தொலைவிலிருந்து சோகத்தைச்
சுமந்து வருகிறது காற்று
வைத்தியசாலையில் எல்லா வகையான
அலறல்களும் மேலெழுகின்றன

குழந்தைகளும் சிறுவரும்
கால்கள், கைகள், விழிகள் இழந்து
பிரக்ஞை கெட்ட ஒரு உலகத்தில்
புழுதித் துகளாய்ச் சிதறிப்
போய்க்கொண்டிருக்கிறார்கள்

மழையில் கரைகிறது என் நிழல்
குருதியில் பரவுகிறது ஆற்றாமை

மின்சாரம் நின்று போய்விட
இருண்டிருக்கும் அறைகளுக்கு
விளக்கேற்ற வருகிறது மின்மினிப்பூச்சி

மெல்லிய இரவின் காற்றோடும்
கண்ணாடித் திரைக்குப் பின்னால்
இடையிடை அசையும்
மணிவாழை இலைகளின் நடனத்தோடும்
இனம்புரியாத துயரத்தோடும்
துயில் வராத கண்களோடும்
தூரத்து வெள்ளிகளோடும்
தனியே நான்

இன்று, இப்படித்தானா எழுத முடிகிறது?

பொய்முகம் புனைந்த பத்திரிகைகள்
காலையைக் கொலை செய்கின்றன
வானொலியின் பாழ்வாய்க்கூடாக
முதுகெலும்பற்ற தமிழர்களின் அசத்தியம்
துயிலா இரவுகளின் முடிவில்
மாயையில் நடுங்குகிறது கொழும்பு
ஓங்குகிறது இயந்திரச் சூழல்

வடக்கிலும் கிழக்கிலும்
வாழ்க்கை நடக்கிறதா இல்லையா
எனத் தீர்மானிக்க
எந்தத் தலைவரிடமும் ஃபைல் கட்டுக்கள் இல்லை
தலைவர்களிலும் பலர்
கிறிக்கற் விளையாடப் போய்விட்டார்கள்
சிலர் ஊர் சுற்றப் போய்விட்டார்கள்
சிலர் தூக்கத்தால் இன்னும் எழவில்லை
ஒருவருக்குமே தமிழ் புரியவில்லை
(இதுதான் முக்கியமான பிரச்சினை)

இன்று நான் ஒரு கதை சொல்ல விரும்பினேன்
ராஜா ராணிக் கதை
குழந்தைகளுக்கு மட்டுமல்ல
பெரியவர்களுக்கும்தான்

ஆனால்
மன்னித்துக் கொள்ளுங்கள்
கதை காணாமல் போயிற்று
ஒரு சின்ன இறகு போல
என் குரல் அடங்கிப் போயிற்று
மிருதங்கத்தின் தீர்மானம் போல

உடைந்த கட்டிடங்களுக்குள்ளும்
இழந்த சுவர்க்கங்களுக்குள்ளும்
உலர்ந்த கனவுகளுக்குள்ளும்
என்ன கிடைக்கப் போகிறது
என்பது பெரிய கேள்வி

கேள்வி பெரிதுதான்
மறுமொழி சிறிது; ஒரே சொல்:
நம்பிக்கை.

உறவும் பிரிவும்

எங்களைப் பிரித்து வைத்திருப்பவை :

நீண்ட மலைத் தொடர்கள்
ஒரு வானவில்
வரமறுக்கும் சூரியன்
எப்போதும் பெய்துகொண்டிருக்கும்
பனிமழை
கறுப்பின்
கம்பீரம் ஒளிவிடும்
என் முகம்

எங்களைச் சேர்த்து வைத்திருப்பவை :

அலைகளின் இதயத் துடிப்பு
கண்டங்களுக்கும் கடல்களுக்கும்
குறுக்கே விழுந்து கிடக்கிற
முடிவற்ற ஒரு தொலைபேசிக் கம்பி
எதிர்காலம் பற்றிய கேள்விகளை
அஞ்சும் ஒரு பிஞ்சு இதயம்.

நீரும் நிலமும்

இந்த ஆறு
எங்கு பிறந்தது என்று எனக்குத் தெரியாது
மூன்று சமவெளிகளுக்கும்
முப்பதாயிரம் வயல்வெளிகளுக்கும்
முந்நூறு கிராமங்களுக்கும் அப்பால்
சூரியனையும் மறைத்துவிடுகிற மாதிரி
எழுந்து நின்றும்
விழுந்து கிடந்தும்
தொடர்ந்து விரிந்தும்
தன்னுடைய பிரமாண்டத்தை அறிவிக்கிற
மலைகளின்
கண்ணுக்கு எட்டாத சிகரங்களுள் ஒன்றில்
மழை நெருங்காத வெளியில்
ஆகாயத்தினதும் காற்றினதும் நிலத்தினதும்
முதலாவது கூடலின் ஒரு குருதித் துளியாய்ப்
பிறந்தது இந்த ஆறு என்று சொல்கிறார்கள்.

தெரியாது

இந்த ஆறு எங்கு பிறந்ததெனக்
கண்டடையச் சென்றவர்களில்
சிலர் தேவதைகளாகவும்
சிலர் பிசாசுகளாகவும் மாறிவிட்டார்கள்
என்று பெரியத்தை சொல்கிறாள்
தொல்கதைகளிலும் மாய ஐதீகங்களிலும்
வாழ்க்கையைத் தோய்த்தெடுத்து வைத்திருந்த
அவளது வார்த்தைகளில்
இப்போது எனக்கு நம்பிக்கை இல்லை என்றாலும்
வாழ்க்கை பற்றிய விசாரணைகளை
வசீகரமாக வைத்திருப்பது எப்படி என்பதை
அவள் கற்றுத் தந்தாள் என்று
இப்போது தெரிகிறது.

சிறு வயதில் எங்களுடைய கற்பனைப் புலத்தை வடிவமைத்தவை
கடலும் வயலும் உப்புநீர் ஏரிகளும்தான்
எங்களிடம் மலைகள் இல்லை
ஆறுகளையும் தெரிந்திருக்கவில்லை
வருடம் ஒருமுறை மாரிக்காலத்தில்
வெள்ள வாய்க்கால்கள் சிற்றாறுகளெனப்

பாவனை தந்தாலும்
நம்ப முடிந்ததில்லை.

எங்களுடைய கற்பனைகள், உருவகங்கள்,
சிந்தனைகளின் மையச்சுழலாக
இருந்தது கடல்;
நிலத்துடன் இடையறாத போராட்டத்தில்
ஈடுபட்டுள்ள கடல்;
அதற்கு ஒரு கரை இருந்தது எப்போதும்.
கோபமானபோது சீறி எழ
காதலானபோது கிறங்கி விழ.

உப்புநீர் ஏரிகளுக்கும் எப்போதும்
ஒரு கரை இருந்தது.
அவற்றின் மௌன உரையாடல் இன்றுவரை
ஒரே மாதிரியாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறது
மழைக்கால மிதப்பில் சில வேளைகளில்
கரையை மீறினாலும்
மத்தியான வெயிலில் ஒடுங்கிக் கிடப்பதே
உப்புநீர் ஏரிகளின்
வாழ்வாயிற்று

ஆனால் இந்த ஆறு

வண்ணங்கள் மாறும் திணைகளைக்
கடந்து செல்கிறது
காடுகளைப் பார்த்திருக்கிறது
பாலைவெளிகள், நகரங்களூடாகப்
பாய்கிறது
போகிற வழியெல்லாம் நிலத்தை மலர வைக்கிறது
மூங்கில் மரங்களுக்கு உயிர் தருகிறது
கரையிலிருந்தாலும்
நீர் எறியக் கிளை தாழ்த்திய மருத மரங்களை
வருடிச் செல்கிறது
அதனுடைய வளைவு, நெளிவுகளில்
கலைஞர்களின் தூரிகைக்கு அகப்படாத
ஒரு நளினம்
அதனுடைய குரல்களில் கணத்துக்குக் கணம்
மாறும் ஒரு இன்னிசை
எப்போதுமே
இந்த ஆற்றின் குரலைக் கேட்க முடிகிறதா?

அது சல்லாபிக்கிறது.

கரைகளுடன் கரையின் காடுகளுடன்
காட்டு மரங்களுடன் மரங்களில் தூங்கும்
கொடிகளுடன் கொடிகளில் ஆடும்
பறவைகளுடன் பறவைகளுடன் சேர்ந்து
நீரில் மூழ்கி எழும் மனிதர்களுடன்
மனிதர்களின் எண்ணங்களுடன்
எண்ணங்களின் அலைகளுடன்

எல்லோருடனும் எல்லாவற்றுடனும்
ஒரே நேரத்தில்
வேறுவேறு மொழிகளில் பேசுகிறது
அது

இந்த ஆறு ஒருபோதுமே
உறங்குவதில்லை
அதனுடைய உலர்ந்த தடங்களுக்கும்
உயிர் இருக்கிறது
நாணல் தன்னுடைய உடலை வளைத்து
ஆறு பிரவாகமெடுத்துச் சென்ற திசையைக்
காட்டுகிறது
புதர் மண்டிய சதுப்பு நிலங்களில்
நீர்க்கோடுகளாக நகர்கிறது ஆறு

ஒரு முறை தொடுகையில் சிலிர்த்தெழும்
கரைகள் அனைத்தையும்
இந்த ஆறு ஞாபகம் வைத்திருக்கிறதா
என்று தெரியாது
கரைகளுக்கும் இக்கணம் கடந்து செல்கிற
ஆற்றை ஞாபகம் இருக்குமோ தெரியாது

என்றாலும்
ஓடிக்கொண்டிருக்கிறது ஆறு

சில வேளைகளில் ஒரு புன்னகை போல
சில வேளைகளில் ஒரு தாலாட்டைப் போல
சில வேளைகளில் மோகவசப்பட்ட ஒரு பூவைப்போல.

குழந்தைகள்

குழந்தைகளை யார் உருவாக்குகிறார்கள்
என்று நான் கேட்டேன்

திறந்து வைத்த யன்னலூடாகச் சலசலத்து
நானல்ல; அவர்களின் குரலுக்குச்
சங்கீத நரம்புகளைத் தருவதே என் வேலை
என்றது காற்று

அவர்களுடைய கண்களுக்கு
ஆழமான நிறங்களைத் தருகிறேன் நான்
என்றது ஒளி

அவர்களுடைய பிஞ்சுப் பாதங்களுக்கு
ஒரு புன்னகையைத் தருகிறேன் நான்
என்றது செவ்வலரிப்பூ

அவர்களுடைய இதயத்தின் சுவர்களைக்
காதலின் இழைகளால் நெய்கிறேன்
என்றது கடல்

அவர்களுடைய சிரிப்புக்கு
மந்திர வலிமையைச் சேர்க்கிறேன்
என்றன காடுகள்

அப்படியானால்
அவர்களுடைய கைகளில் துப்பாக்கிகளையும்

கால்களுக்கு ராணுவச் சப்பாத்துக்களையும்
இடுப்பில் வெடிகுண்டுகளையும்
கண்களில் வெறுப்பையும்
தந்தது யார் என்று கேட்டேன்
காற்றும் கடலும் உறைந்தன;
வெளியில்
உலர்ந்து நொருங்கிற்று
கண்ணாடித் துண்டுகளாக ஒளி.

ஒரு மின்னல் வெட்டில்
எரிய ஆரம்பித்தன பூக்களும் காடுகளும்
எல்லாப் பறவைகளும்
கூட்டமாகப் பறந்து சென்று
அத்தீயுள் விழுந்தன.

குழந்தைகள்
எங்களுடைய குழந்தைகள்.

தீ

இலைகளே ஆயிரம் தீ நாக்குகளாக
நெருப்பின் எண்ணற்ற நிறங்களுடன்
புகை அவிழாது
வெப்பம் கிளர்த்தாது
பற்றி எரிகின்றன மரங்கள்
மரங்களில் தீ கொடிகளில் தீ
செடிகளும் தீ
காலத் தீ

தீயின் வனப்பு மிக்க பரவசத்தில்
காடுகளையும் புல்வெளிகளையும் ஊடறுத்துச் செல்லும்
தெருக்கள்
தலைகிறங்கித் தொலைகின்றன

காலத்தின் குளிர் மிகுந்த சுடருக்குள்
காதலின் இலைகள் உதிர்கின்றன

உதிர் இலைகளே அழகு
அவற்றின் வண்ணங்களும் பன்மை
முழுமையை நோக்கிய நெடு நடையில்
முன் செல்வன அவை
உயிர்க்கும் இலைகளோ பச்சை; அல்லது
பச்சையின் நிழல்
ஒருமை

உண்மைதான் அன்பே
உதிரும் இலைகளில் எதிர்காலம் தன்
புதிய இசையை மீட்டுகிறது என்கிறாய்

பனிப்பாறைத் தனித்தீவுக்
குளிர் நாளில்
எனக்கென்ன எதிர்காலம்?

ஜே. யுடனான உறவு முறிந்து மூன்று நிமிடங்களாகின்றன

ஜே. யுடனான உறவு முறிந்து
மூன்று நிமிடங்களாகின்றன
அவளுடைய கடைசி வார்த்தை
காய மறுக்கும் ஒரு குருதித்துளியைப் போல
வாசல் கதவில் இன்னும் ஒட்டிக்கொண்டிருக்கிறது

எமக்கிடையில் மொழியின் அழகுகள்
இறந்து போய்விட
மௌனத்தின் வலைப்பின்னலுக்குள் சிக்குண்டு
காலம் நகர முடியாமல் தத்தளித்தபோது
ஆற்றாமையுடன்
கோபத்தில் புருவங்கள் துடிக்க
அவள் வீசியெறிந்த புத்தகம்
இதழ்கள் முறிந்து நிலத்தில் துவள்கிறது

அவளுடைய ஆவேசக் கூச்சலில்
நடுங்கிய அறைச்சுவர்கள்
இன்னும் அதிர்ந்துகொண்டுள்ளன

படுக்கையறைத் துணிக்கொடியில்
இனி அவளுடைய உள்ளாடைகள் இரா
வெளிவாசலில் இனி அவளுடைய செருப்புகளும்
இருக்காது
என்றாலும் அவளுக்கான வாசனை
நீண்ட காலத்துக்குத்
தலையணைகளில், கண்ணாடியருகே,
தண்ணீரில் தோய்ந்த சவர்க்காரப் பெட்டியில்,
புத்தக அலமாரியின் இடது பக்கத்தில்
கமழ்ந்து கொண்டிருக்கப் போகிறது

ஜே. யுடனான உறவு முறிந்து
மூன்று நிமிடங்களாகின்றன

இந்த மூன்று நிமிடங்களில்
நான் கடந்த முதல் நதி வழி மாறிற்று

நான் இறங்கிய முதல் கடல்
என்னை விழுங்கிற்று

உறவுகளின் குச்சொழுங்கைச் சுழலுக்குள்
என் முதல் காலடி திசை மாறிற்று

கொடியும் கொழு கொம்பும், நீரில் படரும் தாமரை,
இதய ஆகுதியின் ஆத்ம சங்கீதம் என்ற
காதல் பற்றிய பழைய உருவகங்களை
ஜே. துவம்சம் செய்துவிட்டுப் போகிறாள்

அவளின் பின்னால்
காற்றும் நிலமும் குழந்தைகளைப் போலத்
தொடர்ந்து செல்கின்றன

அவளுடைய கோபத்தின் பொறிகளிலிருந்து
புதிய வார்த்தைகள் பிறக்கின்றன

எனக்கு மூன்று நிமிடங்களாயின
அவள் மூன்று யுகங்களைத் தாண்டிச் செல்கிறாள்.

வீரர்கள் துயிலும் நிலம்

பேய்க் கூச்சல் வீசி எழும்
காற்றில் ஒடிந்து விழும்
காவோலைச் சத்தத்தில்
குயில்
மிரண்டு அலறும்
மேற்கே பனந்தோப்பு

கோடையிலே மணலோடும்
மார்கழியில் நீரோடும்
ஓடும் ஒரு வெள்ள வாய்க்கால்

தெற்கே திசை நீள

கிழக்கெல்லை பொன்னிப்புலம்
நிலமற்றோர், 'நிறம் குறைந்தோர்',
புறந்தள்ளப்பட்டோரின் குடியிருப்பு

செம்மண் தரையும் வயலும் வடக்கே
இவை நடுவே
மருதத்தின் சஞ்சலத்தின்மீது
விரிகிறது ஒரு இடுகாடு;
நடுகற்களின் காடு.

வீரர்கள் துயிலும் நிலம்

இந்த நிலத்தில்தான் நூற்றுக்கணக்கானோர்
தூங்குகிறார்

புன்சிரிப்பும் புத்துயிர்ப்பும்
முகத்துக்கு மெருகேற்ற
நெஞ்சு நிமிர்த்தி நடந்தவர்கள்
நினைவை நெடுகின்ற நண்பர் பலர், உறவினர்கள்,
நானறியா இளைஞர்கள்

கணப்பொழுது நெஞ்செரியும்
நெஞ்சில் எழுகின்ற நினைவெரியும்
நினைவில் உயிர்பரவும் கதை எரியும்
இந்த நிலத்தில்தான் தூங்குகிறார் என்னவர்கள்.

நெடுந்தூரம் சென்று நிரை கவர்ந்தோர்
காற்றோடும் கடலோடும்
புகையோடும் போனவர்கள்
போனவர்கள் போக
மீந்து கிடந்த உடலங்கள் கொண்டுவந்து
இட்டுப் புதைத்து எடுத்த நடுகல்லின்
எட்டுத் திசையும் உறைந்திருக்கும்
உம் ஆத்மா என்கிறார்கள்

வீரச் சாவடைந்தோர் சொர்க்கத்தைச் சேர்வார்கள்
என்ற பழங்கதையைத் தமிழர்கள் நம்பார்

ஆண்டுக் கொருமுறை உற்றமும் சுற்றமும்
ஆட்சியும்
உங்களை நினைவு கொள்ள வருவார்கள்

அம்மாவின் கண்ணீர்
கல்லறையின் மேற்படிந்த
புழுதியைக் கழுவிய பிற்பாடு
நடுகற்கள் வளரும் இந்த
இடுகாட்டு நெடு நிலத்தில்
பூச்சொரிவார்
விளக்கேற்றித் துயருறுவார்
வீரம் விளைந்த கதை விம்மி விம்மிச் சொல்லி
நெஞ்சு நெகிழ்வார்கள்

எதை நினைத்தோம்?
எதை மறந்தோம்?

நம்பாதே வார்த்தைகளை முற்றாக

வீரர்களுள்
மாற்றானின் படைவலியைச் சிதைத்தவர்கள் உள்ளார்கள்
அப்பாவி மக்களது சிரமரிந்து முலையரிந்து
குருதி முகம் நனைய இரவிரவாய் முகம் துடைத்து
வழிமாற்றி மொழிமாற்றி விழிமாற்றி
வெற்றியோடு மீண்டவரும் உள்ளார்கள்

மாவீரம், தியாகத்தின் மறுபக்கம் இது
இவையெல்லாம்
காதோடு காதாக வாய்மொழியில்
வாழ்கின்ற சத்தியங்கள்

இலட்சியத்தின் தாகத்தில் மட்டும்
தங்கியிருப்பதில்லை மேன்மை

வெற்று வார்த்தைப் பந்தலிலே உம் நினைவைச் சோடித்துத்
தெருத் தெருவாய்ப் பாடிவைத்த
யுத்தப் பரணியெல்லாம்
செத்த வீட்டு வாசலிலே வெட்டி இட்ட
வாழைகளாய்
நாலாம் நாள் உதிர்கிறது;
ஞாபகமும் தொலைகிறது

சங்கிலியன் உடைவாளில் படிந்த
குழந்தைகளின் இரத்தத்தில்
என் கனவு கரைகிறது
ராஜராஜசோழன் துவம்சம் செய்த
கர்ப்பிணிப் பெண்களின் அவல விழிகளில்
வரலாறு தற்கொலை செய்கிறது
தஞ்சைப் பெரிய கோவிலின் கீழ்ப் புதையுண்ட
எலும்புக் கூடுகளின் துயரில்
என் கவிதை நனைகிறது

வரலாற்றில் வீரர்கள் இல்லை.

நம்பாதே வார்த்தைகளை முற்றாக
நம்பாதே வார்த்தைகளை

காலத்தின் சந்நிதியில் மாசகற்றிய வீரத்தின்
கதைசொல்லக் காத்திருக்கிறேன்
இருப்பையும் இறப்பையும் இழப்பையும்
அப்போது பாடுவேன்.

கேள்

கேள்
எப்படிப் புணர்வது என்பதைப்
பாம்புகளிடம். எப்படிப் புலர்வது என்பதைக்
காலையிடம். பொறுமை என்பது என்ன
என்பதை மரங்களிடம். கனவுகளுக்கு
வண்ணங்கள் உண்டா என்பதைத் தூக்கத்தில்
நடப்பவர்களிடம். கண்ணீர்த்துளிகள் சிறைக்கூடங்களாக
மாறியது எப்படி என்பதை
அகதிகளிடம். பயம் என்பது என்ன என்பதை
நடு இரவில் இந்த நகரில் நடக்க நேர்கிற
கறுப்புத் தோல் மனிதர்களிடமும்
பெண்களிடமும். மோகம் முப்பது நாள்கள்தானா
என்பதை மூக்குத்தி அணிந்த காதலர்களிடம்.
முழுநிலவில் பாலத்தின்கீழ் உறைந்த பாற்கடலின்
பாடும் மீன்கள் எங்கே போய்விட்டன
என்பதைக் கார்காலத்திடம். மொழியின்
தனிமையிலிருந்து பிறப்பது என்ன என்பதைத்
திசை தொலையப் புலம்பெயர்ந்தவர்களிடம்.
துயரத்தின் சாறு பிழிந்த தனிமை எப்படியிருக்கும்
என்பதை என் பனிப்பாறையுள் நெருப்பின்
உயிர்ச் சுவட்டை எறிந்தவளிடம், அவளிடம்
இவளிடம். இரவின் கடைசி ரயிலும் போய்விட்ட
பிற்பாடு, தண்டவாளங்களும் குளிரில் துடித்துப்
பிளக்க ஒற்றைச் சிறகுடன் கையில் ஒற்றைப்
பூவுடன் காத்திருப்பது எப்படி என்பதை
என்னிடம்
கேள்.

நான் இறந்து போகிறபோது

நான் இறந்து போகிறபோது
என்ன நடக்கும்?

அது ஒரு காலைப் பொழுதானால்
நிலவு எழும்

மாலையானால்
தேர்க்கால்கள் ஓடிந்து விழக்
காத்திருக்கும் சூரியனின்
கண்ணசைவில் காலத்தின் நிறம் பிரியும்

இரவெனில்
பறவைகள் தூக்கம் தொலைத்து விழித்தெழுந்து
பாடும்

அந்தப் பாடலின் அலைகளில்
சாக்குருவியின் இறகுகள் தீப்பட்டெரியும்.

நான் இறந்து போகிறபோது
என்ன நடக்கும்?

காற்றில்லாத போதும்
எல்லாக் கதவுகளும் சாளரங்களும்
தாமாகத் திறந்துகொள்ளும்
சங்கீதமும் அழுகையும்
ஒன்றை வெட்டி ஒன்றென மாறி மாறி எழும்

நான் இறந்து போகிறபோது
நிசப்தத்தின் உள்ளொலியில் கவிதை எழுகிறது

நான் இறந்த பிற்பாடோ
தலைவாசலை மூடாதே
கிடுகு வேலி பிரித்த மாற்று வழியும் தேவையில்லை
நான் போக
வெறும் நீரைச் சிந்தவிடு
என்னுடலில்
நான் எரிவேன்

நான் இறந்த பிற்பாடு

புற்களின் கண்ணீர்த்துளி
இருளின் குருதி
பூமியின் நரம்புகளில் துயர் மீட்ட வரும்
கடலோரக் காற்று

வெளியில் ஆடும் விளக்கு.

குருதி
சுக்கிலம்
செம்மது

நெடுநாளைக்குப் பிறகு
இன்று
புத்தகக் காட்டின்மீது
மதுவை ஊற்றினேன்
மரங்கள் பெயர்ந்து திரியப் பெருகிற்று
அதனுடைய வெல்லச் சுழிப்பு

பிறகு
குருதிச் சுவாலைகள் எழுந்தன
ஓயா நடனம்
அவற்றூடு
துயில் கலைந்தெழும்
மலைத் தொடர்கள் போல
என் கவிதை எழுந்தது

அது இப்போது
உன் காலடி நிழலை வருடும் பூ
விரகம் விரவுமிரவின் குரலின் உயிர் வீச்சு
ஒரு மணித்துளியில்
அடர்ந்த நான்கு பெரும் பொழுதுகள்
தீட்டிய வார்த்தை

தீட்டிய வார்த்தைகளைத் தூர விட்டு
நுனி நாவால்
இமை நுனியால்
முலை முளையால்
இதழால்
என்னுயிர் மீட்டினாய்

இருளின் வெளியில்
எங்கோ புதைந்திருந்த
கறுப்பின் வண்ணங்கள் கிளர்ந்தன

சிவப்பு மேலெழத் தொலைந்தது நிறப்பிரிகை
உன் உடலில் குருதி கசியும்
நாளிது என்பதாலா?

தெரியாது

தெரியாதிருந்த உலகங்களுக்குள்
திடீரென விழித்தேன்.

கொல்லேன்; புலாலை மறுத்தேன்; எங்கெனினும்
குருதி காணின் கணப்பொழுது
உணர்விழப்பேன்; மெல்லியலான்
என்றிருந்தேன்

பெண் வாழ்வே குருதியில்தான்
என்று இடைவெட்டி
மென்மையும் நளினமும் தோய்ந்த
என் இருப்பே குலைய
அந்த வெண்மைத் திரையில் எறிந்தாய்
ஒரு குருதித் துளி

அது சூரியனாயிற்று
சூரியன் : கிரணங்களின் மெய் விளக்கு
எரியும் ஒரு இருட்குகை

இன்று
எது இந்த மாய அழகு?
சென்று
எங்கு பரந்தது உயிருடன் காதல் உறைந்த
நம் நிலம்?
இந்த மதுக் கிண்ணத்துள்ளா?

குருதி, சுக்கிலம், செம்மது
தோய்ந்த குறி
எல்லாக் கடவுளரையும் துவம்சம் செய்து
எழுகிற போது
பழமை வீரம் உலர்ந்து போகிறது

நிலவும் பரிதியும் இரவும் கூடும் அழகே அழகு
நம் மொழியில் செறிந்த விரகம் வாழும் உலகே உலகு

மார்புக் குவட்டின் வியர்வைத் துளிப்பின்
உப்புக் கரிப்பில் துளிர்க்கும் முறுவலின்
இறுகிய படிமம் : இணைகரம்
மூடிய கண்களுள் மஞ்சள் பாலைவனத்தில்

காற்று வரைகிற கோலங்கள்

மழை உதிரும் பின் பகலில்
வெயில் எரியும் முன் பகலில்
நிறம் பிரியும் அந்திச் சிறு பொழுதில்

கடலில்
கடலோர வெளியில் மணலில்
வாவி மருங்கில் நதி மூலத்தில்
விழி ஆழத்தில்
உயிரில் உறையத்
துடிக்கும் உடலில் அதிரும் உலகம்

ஒடியும் இடையில்
வேகம்
மின்னல்
முயங்கும் வெறியில்
சுழலும் பொழுது
இறுகத் தழுவிக் கிறுகிப் பிரியப்
பெருகும்
வெள்ளம்.

கண்ணீரில் தொடங்கியது
கண்ணீரில் முடிகிறது
குருதியில் தொடங்கியது
குருதியில் முடிகிறது.

புலரிக் கலவியும் இரவில் சமருமாய்க் கழிந்த ஒரு காலத்தின் பாடல்

1

இதழ்க் கடையில் ஊறியது
ஒரு துளி வெள்ளம்
இன்னும் வாய் சேரா
அமிழ்தம்

2

காலையில்
கலவியைக் குலைத்த விமானத்தைச்
சபித்தோம்
தன் கொலைக் குலத்தொடு
ஏழேழு தலைமுறைக்குமாய்
அது நீருள் ஆழ்ந்தது

3

இரு கரைகளிலும் அலையடித்துப்
பெருகிச் சுழித்துப் பாய்கிறது
நீர்
இடைவிடா அடை மழை.
ஒதுங்கக் கூரையற்ற வீடும் இல்லை
தண்ணீர் நிறைந்த இரவிலும்
தாகம் தீரவில்லை இன்னும்
குழந்தையின் அலறலில் இருந்து
ஒரு கூப்பிடு தொலைவென்கிறார்கள்
யுத்தமுனை

மரணத்தைக் கையிலேந்தியவர்களுக்கு
வழிவிட்டுக் கரையொதுங்கி
எங்கள் வாழ்க்கையைத் தருகிறோம்
ஒரு நாளில் எல்லாமிழந்து
அகதிகளாய் வனவாசம் செல்கிறோம்
விட்டு வந்த வீடுகளுள் வெள்ளத்தோடு
குருதியும் புகுமோ?

காட்டுவழிகளின் ஆளற்ற வெளிகள்
ஆயிரமாயிரம் முகங்களால் நிறைகின்றன
பீதி படிந்த அம் முகங்களில்
நூற்றாண்டுகளாய் நீடிக்கும்

துயரம் செதுக்கிய தழும்புகள்
கண்ணீரின் பாதை.

இப்போதைய வேண்டுகோள் :
மழை மட்டும் ஓயாதோ?

4

நீ இல்லாதபோது
என் குரலையும் மழை அழித்துச் செல்கிறது
உனக்கு உலர்ந்த நெஞ்சு
எனக்கு ஈரக் கண்கள்

5

கண்கள் மூடாமலே கனவுகள்
என்னுடைய கனவுகளில்
எனக்கென்று ஒரு சிறு வீடு இருந்தது
நான்கு காலங்களும்
நான்கு சுவர்கள்
ஆகாய வாயில்
ஒருபுறம் வயல்வெளி
ஆவரசு கோடியிலே மஞ்சள்;
பூவரசும் வேலியிலே மஞ்சள்;
முன்புறம்,
குருதிச் சிவப்பில் கோடி மலர்கள்
காடு, கடல், மலை, வயல்கள் எனத்
திணைகள் மாறி மாறி வருமாம்
அழகு ஊறி ஊறி எழுமாம்.

6

எழுகிற போதே எரியும் காற்றில்
இடிகிறது வீடு.
யார் எறிந்தார் என்னுடைய
இனிய கனவைக் குலைக்க
ஒரு கொலைக் கருவி?

7

ஆ!
காட்டு வெளியிலே யுத்தம்
தென்னை மரங்கள் தீப்பட்டெரிந்தன
நிலவு கருகிக் குப்புற வீழ்ந்தது

மின்னல் கொடியென வீச மறுத்து
உப்புக் கடல் நீர் ஏரியுள் ஒளிந்தது

காட்டு வெளியிலே யுத்தம்
யுத்தம்
காற்று வெளியெங்கும் ரத்தம்!

கோவில் மணிகள் அறுந்து வீழ்ந்தன
அணியணியாக மரங்களும் வீழ்ந்தன
வீழ்ந்த மரங்கள் வெடித்துப் பிளக்க
நூறு நூறாயிரம் பாடைகள் எழுந்தன

மனித உடல்கள் மோதிச் சிதறின
மனித உடல்கள் மோதிச் சிதற
இரும்பும் உருக்கும் நொருங்கித் தகர்ந்தன

புகையில் கசங்கிய இலைகள் பறந்தன
குருவிச் சிறகுகள் அவற்றுடன் அலைந்தன
சாம்பல் பரந்த சமவெளி எங்கும்
மழையும் குருதியும் கலந்து பொழிந்தன

காட்டு வெளியிலே யுத்தம்
யுத்தம்
காற்று வெளியெங்கும் ரத்தம்!

8

கண்ணீரின் மறுபக்கம் குருதி

அச்சமும் பயங்கரமும் எழுதியிருக்கும்
இந்த நாட்களில்
எல்லோருக்கும் ஆழமற்ற தூக்கம்
இடையறாத மழையையும்
பாம்புகளையும் பற்றிய கனவுகள்
எப்போதும் போலத்
தன்னுடைய விசித்திரங்களுடன் நகர்கிறது
வாழ்க்கை
மரணத்திற்கு வெகு அருகில்

9

கடல் பெருகி அலைந்த வழியில்
எங்களுடைய எந்தத் தடமும் எஞ்சவில்லை

வேரற உதிர்ந்த ஆயிரம்
தென்னை மரங்கள்மீது
தூவிக் கிடக்கிறது மணல்
கூந்தலிலிருந்து பிரிந்த
நீண்ட மயிரொன்று
அதனருகே
காயம்பட்டு உதிர்ந்த பூ இதழ்
எல்லாவற்றின்மீதும்
ஒரு குருதித் துளி

10

நகர்கிறது காலம்
இந்தப் பாடலைப் போலவே
முடிவற்று.

யுத்தம் பற்றிய ஒரு மிகச் சுருக்கமான அறிமுகம்

நீங்கள் ஒடுக்கப்பட்டவர்களானால்
அது கண்ணீரின் குருதி

நீங்கள் ஒடுக்குபவர்களானால்
அது குருதியின் கண்ணீர்.

கவிதை பற்றிய காதலர்களின் உரையாடலில் ஒரு பகுதி

அவள்

நூறு நாளாயிற்று
காதல் தகிப்பையும் மோகச் சுகிப்பையும்
உன் கவிதையில் கண்டு.
எழுதேன் எனக்கொரு கவிதை என
நான் கேட்பதை விரும்பாய்
உன் கவிதையுள் சிறைப்பட்டுக்
கோலம் இழப்பதை நானும் விரும்பேன்
எனினும்
உனது கவிதையைப் பற்றிக்
கேட்கலாம் அல்லவா?
இப்போது உனது கவிதையின்
இயல்பு என்ன?
அர்த்தம் என்ன?
இலக்கு என்ன?

அவன் :

எனது கவிதை சிக்கலற்றது
ஆழமான உணர்ச்சிச் சுழிப்புகளில் அது
தன்னுடைய ஆழத்தை இழக்கவில்லை
அதற்குப் பல அர்த்தங்கள் கிடையாது
நான் எல்லா நேரங்களிலும்
அதனை எழுதி விடலாம்
அது தயக்கமற்றது; துணிவில் உரம் பெறுவது
பாடபேதம் அற்றது
அதனைப் பக்கம் பக்கமாக எழுதிவிடத் தேவையில்லை
மலைக்கும் கடலுக்கும் அது உறவற்றது
காற்றைப் புணராதது

நீ கேட்கும் எல்லாக் கேள்விகளுக்கும் -
சில சிக்கலானவை
சில நகைப்புக்கிடமானவை

சில என் இருப்பையே குலைப்பன
சில ஒருவருக்குமே புரியாதவை
சில பொறாமையால் விளைவன
சில என்னைப் புறம் காண்பவை
சில உன் சித்தம் குலைந்த அர்த்தம் நிறைந்தவை -

அது தரும் மறுமொழி : ஒரு மெல்லிய முறுவல்

என்றாலும்
அதன் ஆயிரக் கணக்கான வார்த்தைகளையும்
எண்ணற்ற படிமங்களையும்
அளவற்ற சந்தத்தையும்
எல்லாவற்றுக்கும் மேலாக அதன் பொழிப்பையும்
நான் உனக்குத் தரமுடியும்:

உன் நேசத்தில் உருகும் என் நெஞ்சு.

கல்வெட்டு

கூடு திரும்பின பறவைகள்

அந்தியின் கடைசி வெளிச்சத் துளி
தெருமுனையில்,
தொலைதூரம் விழிநீளம் காத்திருக்கும்
அம்மாவின் முகத்தில்
இருள் ஏற்றுகிறது

மூடப்பட்ட பாடசாலைக் கதவுகளில்
வெறுமை
வகுப்பறைகளில் நிராசையின்
கோலம்

அவன் வீடு திரும்பவில்லை
நாடு கலங்கிற்று ஒரு நாள்

இரும்பின் தடங்களும், ஈயக்குண்டுகளும்
எரியும் நெருப்பும் சூழ அவன்
எதிரியின் தளத்தை நொருக்கிய போது
காற்றில் கோவில் மணி அலறிற்று
வீட்டில்
கண்ணீர் அலையென ஓடிற்று

அவன் சொன்ன வார்த்தைகளுமில்லை
எங்களுக்குச் சொல்ல வார்த்தைகளும் இல்லை.

எல்லோரையும் போல் அந்த நேரத்தில் நீ அழவில்லை

முன்மாலை

கொஞ்சநேரம் வெயில் இருந்தது
பிறகு இல்லை
நண்பர்கள் வரும்வரை
விமான நிலைய முன்றலில் அமர்ந்துள்ளோம்
ஒரு சிறுமழை
திடீரென்று உரசிக் கொண்டு போயிற்று
இடையிடை வருகிற மென்காற்றில்
இதயத்துடிப்பென அதிர்கிற
மணிவாழை இலையிலிருந்து
விரல்களை எடுத்து எனது கைகளில் தருகிறாய்
விரல்களும் பேச மறந்தன

நான்கு வருடங்கள்
இன்று பிரியுமுன்
எல்லோரையும் போல அந்த நேரத்தில் நீ அழவில்லை
அழமாட்டாய் என்பதும்
முன்னரே தெரியும்
இறுதியாகச் சொல்லக்கூடிய
வார்த்தைகள் எவையோ
அவற்றையும்கூட நீ சொல்லவில்லை

முத்தமிட்டுக் கொள்ளவோ
மார்பில் முகம் புதைத்துக் கொள்ளவோ
அன்றித்

தோளில் தலைசாய்த்துக் கொள்ளவோ
சாத்தியம் ஏதும் இல்லை
இறுகப் பற்றிய விரல்கள்
அவற்றையும் விலக்கி
என்மீது துயரத்திரையை அவிழ்த்துவிட்டு
நீண்டு செல்கிற விறாந்தையின் வழி
மெல்லச் சென்று மறைகிறாய்

நான்கு வருடங்கள்

பனிபடர் காலையில்
மல்லிகை உதிரும் தெரு வழி போகையில்
உன் இருமல் கேட்டு
நின்ற நினைவு
முடிவிலி வரையில்
சமாந்தரம் கொள்ளும்
தண்டவாளங்களில்
நம் சமாந்தரம்

மாலைச் சிவப்பில்
மெல்லிய மேகம் தொடர்ந்து பரவ
மணலில் உன் மடியில்,
காது மடலில் சுருள்கிற மயிரில்,
கண்களின் துயர இழையில்,
துவளும் உன் உடலில்,
உயர்த்திய குரலில்,
உன் விழிகள் மயங்கவும்,
கரங்கள் துடித்து என் முதுகை இறுக்கும்
உன்னத கணங்களில்

இருத்தலென்றால் இவற்றில்தான்

இப்போதோ நான்
பனியில் தனித்த அசோக மரம்
கச்சாய் நெடு வெளியின் நடுவில்
தனித்திருக்கும் ஒற்றைப் பனை.

ஊழி

எங்களுடைய காலத்தில்தான்
ஊழி நிகழ்ந்தது.
ஆவிக் கூத்தில் நிலம் நடுங்கிப்
பேய் மழையில் உடல் பிளந்து
உள்ளும் வெளியும் தீ மூள
இருளின் அலறல்.
குழந்தைகளை, மனிதர்களை
வெள்ளம் இழுத்து வந்து
தீயில் எறிகிறது.

அகாலத்தில் கொலையுண்டோம்
சூழவரப் பார்த்து நின்றவர்களின்
நிராதரவின்மீது
ஒரு உயிரற்ற கடைக்கண் வீச்சை
எறிந்துவிட்டு
புகைந்து புகைந்து முகிலாக
மேற் கிளம்பினோம்

காஃப்காவுக்குத்தான் தன்னுடைய எழுத்துக்களைத்
தீயிலிட வாய்க்கவில்லை
ஆனால் சிவரமணி எரித்து விட்டாள்
அந்தர வெளியில் கவிதை அழிகிறது
மற்றவர்களுடைய புனைவுகள்
உயிர் பெற மறுக்கின்றன.

எல்லோரும் போய் விட்டோம்
கதை சொல்ல யாரும் இல்லை

இப்பொழுது இருக்கிறது
காயம்பட்ட ஒரு பெருநிலம்
அதற்கு மேலாகப் பறந்து செல்ல
எந்தப் பறவையாலும் முடியவில்லை
நாங்கள் திரும்பி வரும் வரை.

சே. யுடனான உறவு முறிந்தபோது

சே.யுடனான உறவு முறிந்தபோது
வெளியில் எறிவதற்கு
ஒரு பெருமூச்சாவது என்னிடம் இருக்கவில்லை

இந்த அறை வாசல் படியை
அவனது கால்கள் தாண்டிய நொடிப்பொழுதிலேயே
அவனது நினைவிலிருந்து
நான் அழிந்து போகிறேன்

‘திறந்து வைக்கப்பட்ட கற்பூரப் பெட்டியிலிருந்து
வெளியேறிய வாசனை போல
நான் விலகி விட்டேன்’
என்று எழுதி வைத்துவிட்டுப்
படுக்கையறைக் கட்டிலின் கீழ்ப்
புதைந்து கொள்கிற துணிவு
யாருக்கு வரும்?

அவனுக்கு. அவனோ
வேட்கையின் விசுவரூபம்
ஆயிரம் கோடி மயிர்க்கால்களிலும்
அன்பு நேசம் இன்னுமின்னுமெனும்
ஆசை கசியும் கவிஞன்
இருக்கும் வரையில் இனியன்.

காதல் கறைப்படுத்திய படுக்கை விரிப்புக்களையும்
சுக்கிலம் தெறித்துச் சிக்குண்ட கூந்தலையும்
வெந்நீரில் தோயவிட்டு
வெளியில் வந்தபோது

அவனுடைய வியர்வைத் துளியையும்
காணவில்லை.

அவன் மல்லாந்து கிடந்த இடத்தில்
குலைந்து போயிருக்கிறது ஒரு கனவு
அவன் நடந்து சென்ற வெளியில்
தெளிவற்ற சில முணுமுணுப்புகள் மிதக்கின்றன :
‘அச்சம் தருகிறது காதல்’
கலவியின் பின்
மெல்லிய, வெட்கங் கெட்ட குரலில்
அவனுடைய வழமையான மந்திரம்.

போய் வா, உடைந்த கண்ணாடித் துண்டே
உனது அச்சம் வேறு
எனது அச்சம் வேறு.

பசியோடிருக்கும் மீனவன்

காற்றில் அலைந்து திரிந்தபோது
ஒருநாள்
பசியோடிருக்கும் மீனவனைக் கண்டேன்
சாதாழை எற்றுண்டு கிடந்த மணலில்
குந்தி இருந்தான்

கடலோரம் கவிழ்ந்திருந்தது சிறு தோணி
அதன் சுவட்டைக்
கடலில் தேடிக்கொண்டிருந்தான் அவன்
மழிக்கப்படாத அவன் முகத்தில்
உப்புக் காற்று மோதியது

இடுகாட்டின் கூக்குரல்களுக்கு நடுவே
அவனுடைய குடிசை இருந்த இடத்தை
யாரோ தோண்டிக் கொண்டிருந்தார்கள்
வலியில் முனகியது நிலம்.

கடலோடிகள் பறித்துச் சென்றது போக
எஞ்சிய வாழ்க்கையில்
உதிர நெடி.

பசியோடிருக்கும் மீனவனைக் கண்டேன்
எனது முகமும் எனது குரலும்
அவனிடம் இருந்தன.

எம்மைத் தெரிகிறதா?
எங்கள் குரல் கேட்கிறதா?

எம்மைத் தெரிகிறதா? எங்கள் குரல் கேட்கிறதா?
வெலிக்கடையில், தங்காலையில், பூஸாவில்,
நீர்கொழும்பில், கோட்டையில்
நூற்றுக் கணக்கான இருண்ட சிறைக்கூடங்களுள்
நம்பிக்கையின் கடைசிக் கிரணத்தில் மட்டுமே
உயிரைத் தாங்கி வைத்திருக்கிற அவல நிலையில்
இருக்கும் எங்கள் குரல் கேட்கிறதா?
இந்தக் கோடைக் காலத்தின் இறுதி நாட்களில் உயர்ந்துள்ள
வெப்பத்தில், திருவிழாச் சந்தடியில், போர்நிறுத்தம்
என்ற மாயையில், எங்களை எங்கள் பெயர்களை,
எங்கள் குரல்களை மறந்துவிடுவீர்கள் என்று அஞ்சுகிறோம்.
தலைகீழாகத் தொங்க விடப்பட்டுக் கீழே நெருப்பு
மூட்டப்பட்ட போதும், நகம் பிடுங்கிய ரணங்களின்மீது
மிளகாய்த் தூள் இடப்பட்ட போதும், பாம்புகளை
வாய்க்குள் செலுத்திய போதும்,
"என் தேசமே!" என்றுதான் எம்மில் சிலர் அழுததைச்
சிறையின் உலர்ந்த கற்சுவர்கள் எப்படி உறிஞ்சியிருக்க
முடியும்? வதைகூட அறைச்சுவரில் சிதறிய குருதித்
துளிகளுக்கும் நினைவு திரும்பாமலே மரித்துப்போன
எங்கள் பக்கத்து அறைத் தோழர்களுக்கும்
உங்களுக்குச் சொல்வதற்கென ஆயிரம் கனவுகளை
நெஞ்சில் தாங்கி அந்தக் கனவுகளுடனேயே
அநாதைகள் போல, எங்கோ ஒரு பெயர் தெரியாத
காட்டுக்குள் புதைக்கப்பட்டுவிட்ட நண்பர்களுக்கும்
இவை தொடர்கதைதான் என்பதை
எப்படிச் சொல்லப் போகிறீர்கள்?
'நமகென்ன என்று இட்டு உண்டு இரும்' என்று

பழைய தமிழில் அவ்வை சொன்னதை எப்படி நீங்கள்
திருப்பிச் சொல்ல முடியும்? எமது துயரமும் எமது
துன்பங்களும் உண்மையான மனித விடுதலைக்காக
உழைத்தமையின் பரிசுதான் என்றால் அவை
மகிழ்வுதான் தருவன. இந்தச் சிறைக்கூட வதை
அறைக்குள் எழும் எமது அவலக் குரல்களில்தான்
உண்மையான மனித நேயத்தின் அவசியத்தை உணர்கிறோம்.
மிருகங்களின் மத்தியிலிருக்கிற போதே
மனிதத்தின் அவசியம் எமக்குத் தெரிகிறது.

மணல்துகளைக் காற்று அடித்துச் செல்வதைப் போலக்
காலமும் காலனும் எங்களைக் கொண்டுபோய்த்
தீர்ப்பதைத் தடுத்து நிறுத்துங்கள்.

உலகத்தின் மனச்சாட்சியின் மெல்லிய நரம்புகள்மீது
எமது அவலத்தையும் துயரத்தையும் அதிர வைப்பதற்கு
நாங்கள் உயர்த்தும் குரல்களுக்குத் துணைகொடுங்கள்!

உயரும் கரங்களுடன் அணி திரளுங்கள்!

அன்புள்ள மக்களே,
அன்புள்ள நண்பர்களே
அன்பான தேசமே
உயர்த்தி அடைத்த இரும்பு வேலியுள் இருந்து எழுகிற
எமது குரல்கள் உங்களைக் கேட்பதெல்லாம்
ஒன்றே ஒன்றுதான் :
போரிடுங்கள்! அநீதிகளுக்கு எதிராக
போரிடுங்கள்! அடக்குமுறைக்கு எதிராக
போரிடுங்கள்! மனித நேயத்துக்காக.